

தமிழரசு
மலர் : 11
இதழ் : 6
16-9-1980

# அன்பின் ஊற்று



அரசியல் தலைவர்களுக்கில்லாத பல்வேறு அருங்குணங்களைப் பெற்ற அண்ணா அவர்களை வெறும் அரசியல் தலைவர் என்று மட்டுமே காண்பது பெருங்குற்றமாகும்.

பேரறிஞர் அண்ணா ஒரு நாடகாசிரியர், சிறந்த எழுத்தாளர், மிகச் சிறந்த பேச்சாளர், அனுபவமிக்க பத்திரிகாசிரியர், அற்புதமான நடிகர், மொழி வல்லுநர், பண்பாடு மிக்க மாபெரும் அரசியல் அறிஞர் என்பதெல்லாம் அவருடைய சிறப்புக்கள் என்றாலும், இவை எல்லாவற்றையும் விட தூய்மையான 'அன்புள்ளம் கொண்ட அண்ணா' என்று காண்பதிலேதான் முழுமை பெற்றதாக முடியும்.



ஆம். அவருடைய உள்ளம் அரசியல் உலைக்களத்திலே காய்ச்சிய உருக்கல்ல. அரசியல் பாலைவனத்திலே அன்பைச் சுரக்கும் ஊற்று அவரது உள்ளம். தன்னை அழிக்க எண்ணும் எதிரிகூடத் துன்பப்படக்கூடாது என்று எண்ணும் கருணை உள்ளம். அரசியல் இயக்கங்களிலே, கட்சித் தொண்டர்களைப் பலிக்கடாவாக்கி, அந்தத் தியாகிகளின் மீது தனது தலைமைக் கொடியைப் பறக்கவிட நினைப்பதுதான் அரசியல் தந்திரம். அப்படிப்பட்ட அரசியல் களத்தில் அண்ணா அவர்கள் தான் அரசியல் இயக்கத்தையே ஒரு குடும்பமாகக் கண்டார். குடும்பத்திலே காணப்படும் பாசம்பற்று வளர வேண்டுமென விரும்பி,கட்சித் தலைவன் இயந்திர இதயம் உள்ளவனாகக் கூடாது என்று தன்னை ஒரு பெரிய குடும்பத்தின் தலைவனாக, ஒரு மூத்த அண்ணனாக ஆக்கி, தன் கட்சியில் உள்ளவர்களைத் தம்பிகளாக ஆக்கினார்.

அவருக்குத் தன்னுடைய சக்தியில் முழு நம்பிக்கை உண்டு. எழுத்திலோ பேச்சிலோ, இயக்கத்தை நடத்திச் செல்வதிலோ யாருக்கேனும் இடம் அளித்துவிட்டால், அவர்கள் தன்னை அழித்து விடுவார்கள்-தன்னுடைய செல்வாக்கைப் பறித்து விடுவார்கள் என்ற எண்ணமே இல்லாதவர் அண்ணா. மாற்றாரின் திறமைக்கு மதிப்பளிப்பதிலே ஈடற்றவர் அண்ணா. இந்தப் பண்புதான் அவரைப் பெரியாரிடத்திலே பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்ற வைத்தது. இந்தப் பண்புதான் பெரியாரையே எதிர்த்து வெற்றி காண வைத்தது.

தன்னுடைய குடும்பத்திலே ஒரு தம்பிக்கு-ஒரு பிள்ளைக்குப் புகழ்,பாராட்டுக் கிடைத்தால், குடும்பத் தலைவன் எவ்வாறு இதயம் பூரிப்பானோ, அதைப்போல, தம்பிமார்கள் அடையும் சிறப்பைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார். இத்தகைய இதயத்தை எந்த அரசியல் தலைவர் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று இருப்பதாகவே தெரியவில்லை.

அண்ணாவின் அன்புள்ளத்தின் முன்னால், தகுதி படைத்தவர்கள் தான் முதல் இடம் பெறுவார்கள். சமயம் வரும்போது அவர்களை உயர்வு படுத்துவதிலே அண்ணாவுக்கு நிகரானவர்கள் உண்டா என்று தேடிப் பார்க்கிறேன்.

அண்ணா அவர்களின் பாசமிகு குடும்பத்திலே ஓர் உறுப்பினனாக வாழும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி மகிழும் நேரத்திலே.. அண்ணன் பிறந்த இந்தப் பொன்னாளிலே நம்முடைய பாச உள்ளங்களை அவருடைய பாதங்களிலே படைத்து மகிழ்வோம்.....

வாழ்க அமரர் அண்ணா நாமம்!

**மாண்புமிகு முதல்வர்**

# உள்ளங்கவர் கள்வன்

மாண்புமிகு நிதியமைச்சர்
நாவலர் இரா. நெடுஞ்செழியன்

உள்ளங்கவர் கள்வன்! ஆம்! என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்! அனைவர் உள்ளத்தையும் கவர்ந்த கள்வன்! ஆனால் குற்றமற்ற கள்வன் !

கள்வன் கொள்ளை கொள்பவன்தான்; ஆனால் செய்யும்களவுக்காகக் குற்றக்கூண்டில் கொண்டு வந்து நிறுத்த முடிவதில்லை. காரணம் குற்றம் அவன் மேலிருப்பதில்லை. பறி கொடுத்தது உண்மைதான்; ஆனால் ஏமாந்து எவரும் கொடுத்ததில்லை. ஆகவே பறி கொடுத்தோர் வழக்குத் தொடுகக இயலுவதில்லை.

அத்தகைய கள்வனொருவனை நான் என் வாழ்நாளில் கண்டேன் - காதல் கொண்டேன்- கட்டித் தழுவினேன்-அண்ணாவென்று கண்டேன்-தம்பியானேன்!

''குள்ள உருவம்; குறும்புப் பார்வை; விரிந்த நெற்றி; பரந்த மாாபு; கறை படிந்த பற்கள் ; கவலையில்லாத தோற்றம்; நறுக்கப்பட்ட மீசை; நகை தவழும் முகம்; சீவாத தலை; சிறிதளவு வெளிவந்த தொப்பை; சரிப் பொருத்தமில்லாத உடைகள் ; இடுப்பில் பொடிமட்டை; கையில் வெற்றிலைப் பாக்குப் பொட்டலம்—இந்தத் தோற்றத்தோடு நம் நெஞ்சங்களில் பதிந்து நின்றுள்ளாரே அவர் தான் 'பேரறிஞர் அண்ணா' அண்ணா!!!

அறிவாளி - படிப்பாளி - பேச்சாளர்- எழுத்தாளர் - பத்திரிகாசிரியர் - நடிகர் - நாடகாசிரியர் - தலைவர் - தளபதி- தலைசிறந்த அரசியல் விற்பன்னர் அனைவராலும் பாராட்டப்படும் ஜனநாயகவாதி, முதல்வர்களுக்கெல்லாம் இலக்கணம் வகுத்த முதல்வர் என்ற முறையில் அண்ணாவை நாட்டு மக்கள் அறிந்துள்ளார்கள் !

''கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்பமொழிவதாம் சொல்'' என்று வள்ளுவர் வகுத்துக் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியம் உண்டாக்கியவர் அறிஞர் அண்ணாதான்.

சிறந்த பேச்சாளர் பட்டியலின் முன்னணியில், டெமாஸ்தெனிஸைக் கொண்டு வந்து நிறுத்துகிறது கிரேக்கநாடு; சிசரோவைக் கொண்டு வந்து காட்டுகிறது இத்தாலி; எட்மண்ட் பர்க்கைக் கொண்டு வந்து வைக்கிறது இங்கிலாந்து; ராபர்ட் கிரீன் இங்கர்சாலைக் கொண்டு வந்து நினல நிறுத்துகிறது அமெரிக்கா; சிறந்த பேச்சாளர் வரிசையின் முதலிடத்தில் தென்னகமே நிலை நிறுத்திய ஒரே ஒருவர் அறிஞர் அண்ணாதான்.



ஏனைய எழுத்தாளரின் எழுத்தில் தமிழைக் காண்கிறோம்; அறிஞர் அண்ணாவின் எழுத்தில் தமிழரையே காண்கிறோம்.

அவருடைய உரையாடலிலும், சொற்பொழிவிலும், எழுத்திலும் காணப்படும் ஒரு பெரும் பண்பு ''தெளிவு''. அவரிடத்தில் அவசரச் சிந்தனை கிடையாது. எந்த உருவத்தில் வந்தாலும் ஆழ்ந்த கருத்துக்களே அதில் காணப்படும். அவருடைய கண் காதுகளில் பட்டுத் தெறிக்கும் எந்த நிகழ்ச்சியும் பசுமரத்தடித்த ஆணிபோல் அவரது உள்ளத்தில் பதிந்துவிடும். பதியும். அவை ஊற்றுக் கண் போல் உன்னுந்தோறும் உவட்டெடுக்கும். முன்பின் கருத்துக்களை ஒத்திட்டுப் பார்க்கும் ஆற்றலும், அவற்றைத் தெளிவு படுத்திக் காட்டும் முறையும் அண்ணாவுக்கு அமைந்திருப்பதுபோல் வேறு எந்த எழுத்தாளருக்கும், பேச்சாளருக்கும் அமைந்ததில்லை. அவருடைய சொற்பொழிவு சலசலவென்று ஓடும் சிற்றருவியின் பாங்கு போலவும், சொற்கள் நாணயச் சாலையில் அடிக்கப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாய் விழும் நாணயங்கள் போலவும் ஒன்றோடொன்று மோதுதலின்றி வெளிவரும் தன்மையனவாகவும் காணப்படும்.

அண்ணாவின் உரையாடலே தனிச் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு நேரமானாலும் ஏன், எவ்வளவு நாட்களானாலும் தெவிட்டாத் தீங்கனி போன்றது. உரையாடலில் கேலி, கிண்டல் நகைச்சுவை ஆகிய ஆயுதங்

களை அவர் வீசிய அளவுக்கு அழகாக வீசுபவர் வேறு யாரையும் யான் கண்டதில்லை.

அவர் எழுதுவது பெரும்பாலும் இரவு நேரங்களில்தான். எழுத உட்கார்ந்துவிட்டால் காலை ஐந்து அல்லது ஆறுமணி வரையிலும் எழுதுவார். ஓர் அடித்தல், திருத்தலில்லாமல் எழுதி கீழே விழும் காகிதங்கள், ஒன்றன்பின் ஒன்றாக வந்து குவிந்து கொண்டே இருக்கும். சளைக்காமல் ஆயிரக் கணக்கான பக்கங்களும் எழுதித் தள்ளும் அருந்திறனுடையவர்.

'எதையும் தாங்க இந்த இதயம்உண்டு' என்ற குறிக்கோளோடு எதையும் வரவேற்று நிற்கும் பண்பாளர். புகழ்ச்சிச் சொற்கள் அவர் மேல் வீசப்படும் போதும் அதிகமாக மகிழ்ச்சியடைந்ததில்லை. வசைச் சொற்கள் வீசப்படும் போதும் ஆத்திரமடைந்ததும் கிடையாது. இரண்டிற்கும் பதில் ஒரு புன்னகைதான். வஞ்சம், சூழ்ச்சி, பொறாமை, பேராசை, தன்னலம், தற்பெருமை யதேச்சாதிகாரம் முதலிய கீழ்த்தர பண்புகள் அவரிடம் எப்பொழுதும் இருந்ததில்லை.

அண்ணாவின் போக்கு கண்டு வெறுப்புற்றுச் சிங்கமெனச் சீறியோரும், புலியெனப் பாய்ந்தோரும் அண்ணாவின் முன்வந்ததும் பூனையென அடங்கிப் போனதை பலமுறை பார்த்திருக்கிறேன்.

அவரே கூறுவதுபோல் அவர் பெரியாரின் பரம்பரை. பெரியாரின் உள்ளத்தில் இருப்பதை எப்படிப் பிறர் அறிய முடியாதோ அவ்வாறே அண்ணாவின் உள்ளத்தில் இருப்பதையும் அறிய முடிந்ததில்லை. பிறர் உள்ளத்தைக் கவர்வது போலவே தன் உள்ளத்தையும் அண்ணா கவர்ந்து வாழ்ந்தார். அவர் கள்வன்தான்!. ஆனால் குற்ற மற்ற கள்வன்!



# சிறையில் அண்ணாவின் பிறந்த நாள் விழா!

[1962-ஆம் ஆண்டில் நடைபெற்றவிலைவாசிபோராட்டத்தில் சிறை தண்டனை அடைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களுடன் வேலூர் சிறையில் இருந்த திரு ப. உ. சண்முகம் அவர்கள் அதுபோது நடைபெற்ற அன்றாட நிகழ்ச்சிகளை 'அண்ணாவுடன் 62 நாட்கள்' எனும் தலைப்பில் நூலாக எழுதியுள்ளார்கள் அதில் ஒரு சில பகுதி :]

அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறையில் கொண்டாட நாங்கள் முனைந்தோம். நண்பர் முல்லை சத்தி அவர்களைக் கண்டு பேசி திட்டமிட்டோம். மற்ற கைதிகளுக்கு ஏதாவது கொடுக்க இயலுமா என்றுமுயற்சித்தோம். சிறை அதிகாரிகள் மறுத்து விட்டார்கள்.

விழா கொண்டாட நாங்கள்தான் விரும்பினோமேயொழிய அண்ணா அவர்கள் சோகமாகவே இருந்தார்கள்.

சிறை அதிகாரிகள் என்னை அழைப்பதாக ஒரு வார்டர் வந்து அழைத்தார்; சென்றேன்.

''நாளைய தினம் கூட்டம் கூடக்கூடாது - பேசக் கூடாது. வாழ்த்தொலி 'கைத்தட்டல் கூடாது'' என்ற தங்கள் உத்தரவை வெளியிட்டார்கள்!

சென்னையில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ஐம்பதாயிரம் பேருக்கு உணவளிக்க செய்துள்ள ஏற்பாட்டை அண்ணா அவர்கள் கேட்டதும் எம்.ஜி.ஆரின் இரக்கம் நிறைந்த இதயத்தை வெகுவாகப் பாராட்டினார்கள்.

அன்றிரவு சுமார் ஏழு மணி இருக்கும். மழை பெய்துகொண்டிருந்தது. அண்ணா அவர்களிடத்தில் சிறை சூப்ரன்டெண்ட் வந்து 'தனியாக பேச வேண்டு'மென்றார். 'நாளைய தினம் எந்தவிதமான விழாவும் கூடாது' என்ற கண்டிப்பான உத்திரவை நாசூக்கான மொழியில் சொல்லிச் சென்று விட்டார். அண்ணா அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

''பார்த்தாயா! நான் வேண்டாமென்றால் உனக்கு வருத்தமாக இருக்கும். இப்போது சர்க்கார் சொல்லி விட்டது'' என்றார்.

அன்றிரவு முழுவதும் வேதனையாகவே யிருந்தது. மறுநாள் காலை எழுந்ததும் நான் தயாரானேன். வழக்கம்போல் அண்ணா அவர்களை எழுப்பச் சென்றேன். நல்ல தூக்கத்தில் இருந்தார். ''அண்ணா ! அண்ணா!'' என்றேன்.

''ஐந்து நிமிஷம்.. ஐந்துநிமிஷம்'' என்று சொல்லியவாறே தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

''இன்றைக்கு உங்கள் பிறந்த நாள் அண்ணா'' என்றார் வடிவேல்.

''ராத்திரி பத்தரை மணிக்குத்தானையா பிறந்தேன். இப்ப என்ன அவசரம்'' என்றார் தூக்கத்திலும் சிரித்துக் கொண்டு.

''அதுவரையில் தூங்கப்போகிறீர்களா?'' என்றார் ராசகோபால். அண்ணா அவர்கள் சிரித்துக் கொண்டே எழுந்து விட்டார்கள்.

பிறகு அண்ணா அவர்களைக் காண கழகத் தோழர்கள் வரிசை வரிசையாக வந்தார்கள். சில நண்பர்கள் கிளைகள் சார்பில் கைத்தறி ஆடைகளை அணிவித்தார்கள் - சிலர் மாலைகளையும்-மலர்களையும், தங்கள் தலைவனின் பாதங்களில் தூவினார்கள். சிலர் தங்கள் தலையையே பாதங்களில் வைத்து வணங்கினார்கள். (அண்ணா அவர்கள் அப்போதெல்லாம் மெத்த சங்கடப்பட்டார்கள்) சிலர் தங்கள் அறவழிக்காட்டியின் கரங்களைக் கண்களில் ஒத்திக்கொண்டார்கள் அன்புக் கரங்களில் முத்தமிட்டார்கள் சிலர்.

வந்த அனைவருக்கும் அண்ணா அவர்கள் வாழைப்பழம் வழங்கினார்கள்.

அந்தக் காட்சியை கண்ட சில நண்பர்கள் கண்களில் நீர் வழிந்தது. நண்பர் சாரதியும் வாழைப் பழங்களைக் கொண்டு வந்து கொட்டியவண்ணமிருந்தார்.

அண்ணா அவர்களை அழைத்துச் சென்றேன். அவரின் பொன்னான கரத்தால் அரசங் கன்று ஒன்றை நட்டார்!

# அவர்தான் அண்ணா!

## ப.உ.சண்முகம்



அரசியல் பேச ஆங்கிலமே ஏற்றமொழி என்று இருந்த காலத்தில் அண்ணா பிறந்தார்! ஆங்கிலத்தைவிடத் தமிழில் மிகச் சிறப்பாகப் பேச முடியும் என்று நிரூபித்து நடைமுறைப்படுத்திய பின் மறைந்தார்..


சென்னை ராஜதானியில் பிறந்தார். தமிழ்நாடு என்று, தானே பெயர் வைத்த பின்னர்தான் மறைந்தார்!

கேலிக்குரியவர்களாகத் தமிழாசிரியர்கள் இருந்த காலத்தில் பிறந்தார்! தமிழாசிரியர்களுக்குத் தனிப்பெருமையைத் தேடித் தந்த பின்னர்தான் மறைந்தார்.

ஓமகுண்டப் புகை சூழ, ஆகமங்கள் ஓதி வேதியர் எடுத்துத் தந்து கட்டுகின்ற தாலிதான் சட்டப்படி செல்லும் என்ற காலத்தில் பிறந்தார்! சட்டத்தைத் தானே திருத்திச் சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகும் என்று செய்த பின்னரே மறைந்தார்!

அன்னிய மொழி மோகம் மலிந்திருந்த நாளில் பிறந்தார்! அம்மொழியில் மேதையானார்! ஆயினும் தாய்மொழியாம் தமிழ், தொன்மை வாய்ந்தது - வன்மை வாய்ந்தது - நன்மை பயப்பது என்ற உண்மையை உலகறியச் செய்தார். பின்னர்தான் மறைந்தார்!

படித்துப் பட்டம் பெற்றவன் தாய்மொழி தமிழில் பேசுவதைக் கேவலம் என்று கருதிய நாட்களில் பிறந்தார். ஆனால் தான் படித்துப் பட்டம் பெற்று தாய்மொழி தமிழில் பேசுவதுதான் பெருமைதரும் என்ற நிலையை உருவாக்கிச் சென்றார்!



மாணவர்களை மட்டுமல்ல; கல்லாதாரை, ஏதும் இல்லாதாரைச் சிந்திக்க வைத்தார்!

கூனனை நிமிரச்செய்தார்! ஏழையை எழுந்திடச் செய்தார்! மந்திர தந்திரத்தால் அல்ல, சொல்லாற்றலால்!

ஆண்டவன் உலா வருவதையும், ஆண்டவன் அருள் பெற்றவர் என்று மக்கள் நம்புகிறவர்களையும் காணக் கூடும் மக்கள் மத்தியில் பிறந்தார். அவர்களையெல்லாம் தன் உரை கேட்கப் பெரும் அளவில் கூடச் செய்து பகுத்தறிவைப் பரப்பிய பின்னரே மறைந்தார்.

எவர் மனத்தையும் புண்படுத்தியறியாத பெருந்தகை! எதற்கும் ஆசைப்படாத புத்தன்! எத்தகைய இழி சொல்லையும் கொடுமைகளையும் தாங்கிக் கொண்ட ஏசு! எளிய தோற்றத்தில் பெருமை கண்ட காந்தி! நஞ்சென்று பெரியாரின் கொள்கைகளை எண்ணிய மாந்தர்களைத் திருத்திப் பெரியாரின் போதனைகள் 'அமுது' என்று ஏற்கச் செய்த எம்மான்!

அவர் விரல் படாத புத்தகங்கள் 'கன்னிமாரா' நூல் நிலையத்தில் உண்டென்றால் அவர் மரணத்திற்குப் பிறகு வந்த சேர்க்கையே தவிர முந்தியிருந்திருக்க முடியாது.

படித்தார்.... படித்தார்..வேக வேகமாகப் படித்தார்! அவர் அறிவில் ஏற்றிக் கொண்டது பெருங்கடல், ஆனால் அவர் உதிர்த்தது சில துளிகள்!

சேதுப்பிள்ளை - சோமசுந்தர பாரதியார் போன்றோரை வென்றார் வாதத்தில்! ஆயினும் அவர்களின் அறிவையும் ஆற்றலையும் போற்றிப் புகழ்ந்தார்! பெரும் பேர் பெற்றார்!

எதிரிகள் என்று எவரையும் நினைத்தாரில்லை. எதிர்த்தவர்களை வெறுத்தாரில்லை. மதித்தார்; வென்றார்.

பெரியார் தன்னைத் தாக்கிப் பேசியபொழுதெல்லாம், தன் தலைவன் தனக்குத் தாங்கிக் கொள்ளும் 'பலம் உண்டா' என்று பரிசோதிக்கிறார் என்றாரே தவிர ஏளனம் செய்தாரில்லை!

மாநகராட்சித் தேர்தலில் நின்றார். தோற்கடித்தனர். ஆனால் அதே மாநகராட்சியைத் தன் காலடியில் வரச் செய்தார்!

கோட்டைக்குள் நுழையக் கூடாதென்று சட்டப்பேரவைத் தேர்தலில் அவரைத் தோற்கடித்தனர். ஆனால், அதே கோட்டைக்குள் சட்டப்பேரவைக்கு அதிபதியாக நுழைந்தார்.

படிப்பால் மேதையானார். பதவியால் தமிழக முதல்வரானார். ஆயினும் மமதை அவரை நெருங்கவில்லை! ஆணவம் அணுகவில்லை!

அந்த எளிய மனிதர்.....ஆம் தன்னை அப்படித்தான் அழைத்துக் கொண்டார். எல்லோரும் வாழவேண்டுமென்று விரும்பினார்.

நாடே வீடென்று வாழ்ந்தார்! திராவிட இனமே தன் உறவென்றிருந்தார்! தனக்குக் குழந்தை பிறந்தால் குடும்பப் பாசத்திற்கு ஆளாகிவிடுவோமோ என்று அஞ்சியோ என்னவோ பிள்ளையேதுமின்றி வாழ்ந்தார்! ஆனால் மழலை பேசும் பிஞ்சுகளையெல்லாம் தன் செல்வங்களாகக் கருதினார்!

அவர் மனிதருள் உயர்ந்தவர்! அறிஞருள் அறிஞர்! தமிழினத்துத் தூதுவர். அறம் சொன்னார். அவ்வழியே நின்றார்.

அண்ணனின் படம் தமிழின் சின்னம் - தமிழர்களின் அடையாளம் - திராவிடர்களின் தலைவன்!

நம்மை எழுப்பியோன்!
சிந்திக்க வைத்த சித்தன்!
வாழவைத்த வள்ளல்!
புது வழி காட்டிய பெரியோன்!
அவர்தான் பேரறிஞர் அண்ணா!

# நெஞ்சில் நிறைந்தவர்







தொட்டாலும் தீட்டென்றார்; உழைக்கும சாதி
    தூரத்தில் வரும்வேளை அவரின் பார்வை
பட்டாலும் தீட்டென்றார்; உயர்ந்தோர் வாழும்
    பகுதியிலே உழைப்பவர்கள் நடந்து செல்ல
விட்டாலும் தீட்டென்றார்! கடவுள் செய்த
    விதியென்றார்; பீரங்கி கோடி வைத்துச்
சுட்டாலும் தகராத சமூகக் கேட்டை
    தூள்தூளாய் ஆக்கியவன் பெரியார் அன்றோ!

சாதிகளைப் படைத்தவர்கள் நாங்கள் அல்லர்
    சாத்திரங்கள் என்றார்கள் சாதிக் கொன்றாய்
நீதிகளைச் சாத்திரந்தான் படைத்த தென்றால்
    நிர்மூலம் ஆக்கிடுவேன் என்றான்; அந்தச்
சாதிகளும் சாதிகளைப் பகுத்து வைத்த
    சாத்திரமும் கடவுள்செயல் என்றார்; அந்த
ஆதிமுதல் அநீதிக்குத் தொடக்கம் உங்கள்
    ஆண்டவனா? 'ஆம்' என்றால் உடைப்பேன் என்றான்!

தீராத நோய்க்கெல்லாம் அதிர்ச்சி வைத்யம்
செய்வதுதான் தீர்ப்பென்றான்; அறிவுச் சொத்து
வாராத கடவுள்மதம் எதுவா னாலும்
வணங்காதே என்றுரைத்தான்! சமுதா யத்தைச்
சீராக்க இவனைப்போல் உழைத்த தற்குச்
செகமுழுதும் ஒருவரலா றில்லை! எங்கள்
ஈரோட்டுக் கிழச்சிங்கம் மட்டும் இங்கு
இல்லாமல் போயிருந்தால் என்ன வாகும்!

வெண்தாடி வேந்தனுக்கு வாரி சாக
வெல்லுஞ்சொல் பேரறிஞர் அண்ணா, கொள்கைப்
பண்பாட்டில் பறக்கின்ற வானம் பாடிப்
பறவையெனப் புறப்பட்டான் தமிழ கத்தில்
கண்மூடிக் கிடந்தவரின் இமைக் கபாடக்
கடைதிறப்பும் பாடிவைத்தான்! கார்கா லத்தில்
விண்மூடி எழுகின்ற மேகம் போல
மேலெழுந்தான்! பகுத்தறிவு மாரி பெய்தான்!

ஏச்சுக்கள் எத்தனையோ அவற்றை எல்லாம்
ஏற்றுக்கொண்டான்! தன்னை இழிவு செய்யும்
பேச்சுக்கள் எத்தனையோ அவற்றை எல்லாம்
பெருமனத்தால் மன்னித்தான்! மேடை யிற்கல்
வீச்சுக்கள் எத்தனையோ பகைத ளர்ந்து
விழுவதெனக் கணக்கிட்டான்! அவன்வி டுத்த
மூச்சுக்கள் ஒவ்வொன்றும் தமிழி னத்தின்
முன்னேற்றம் முன்னேற்றம் வேறொன் றில்லை!

(வேறு)


இருவரும் வகுத்து வைத்த
இலட்சியப் போர்க்கிங் கோரன்
ஒருவனே போதும் என்றே
உயர்த்தினான் ஒருவன் தோளை!
வருவதைப் பிறருக் கென்றே
வழங்குவான்! தமிழர்க் குள்ள
உரிமையின் காவல் தெய்வம்
அவனிந்நாள் முதல்வர் அன்றோ!

கலைத்தவர் கலைத்தும் மேன்மை
கலையாதான்; தமிழ்ப்பண் பாடு
குலைத்தவர் குலைத்தும் பண்பிற்
குறையாதான் சோத னைக்குள்
அலைத்தவர் அலைத்தும் அண்ணா
அறவழி விடாதான்! வேர்போல்
நிலைத்தவன் அவனே; நெஞ்சில்
நினைத்ததை முடிப்பான் என்றும்!





மாண்புமிகு
சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்
**புலவர் புலமைப்பித்தன்**




அண்ணா படித்த பள்ளி (காஞ்சி)



அண்ணா பயன்படுத்திய பொருட்கள்



காகபட்டர் வேடத்தில்....

அண்ணாதுரை



குடும்பத்தினருடன் அண்ணா

# தமிழுக்கு இப்படி ஒரு பணி...

முனைவர்
சாலை இளந்திரையன்

தமிழக அரசு தமிழுக்குப் புதிய பணிகள் செய்வது பற்றிச் சிந்தித்து வருவது மிகுந்த மகிழ்ச்சிக்கு உரியது. அந்தத் தொடர்பில் எடுத்துச் சிந்திப்பதற்கும் செயல்படுத்துவதற்கும் உரியதாக இந்தச் செய்தியை, தமிழ்ப் பணித் திட்டத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

**போதாத வரலாறு**

தமிழகத்தின் அரசியல் வரலாறும் சமுதாய வரலாறும் இன்னமும் முழுமையாக எழுதப்படவில்லை; ஏன், அவைகளுக்குத் தேவையான முதன்மை மூலங்களும், துணை மூலங்களுமான அடிப்படைச் செய்திகளே கூட இன்னமும் சேகரித்து வகைப்படுத்தப்படவில்லை.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் இந்திய வரலாறு என்று ஒன்று நமக்குக் கற்பிக்கப்பட்டது. அதிலே தமிழக வரலாறு நேரிய இடத்தைப் பெறவில்லை. நாடு விடுதலை பெற்றபின், தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ள தமிழக வரலாறுகள், போதிய தொடர்ச்சியும் செம்மையும் உடையனவாக இல்லை. நமது வரலாற்றுக்குத் தேவையான செய்திகள் திரட்டிச் சேகரிக்கப்படாதிருப்பதே இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது.

**எங்கிருந்து...?**

நமது இலக்கியங்கள் வரலாறுகள் அல்ல. ஆனால், அவைகளுள் பலவற்றிலே சீரிய வரலாற்றுச் செய்திகள் உள்ளன. சங்கப் பாடல்களிலும், பிற்காலத்து நூல்களான உலா, பரணி, பிள்ளைத் தமிழ் போன்றவற்றிலும் அரிய வரலாற்றுச் செய்திகள் பலவற்றைக் காண முடிகிறது. ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுக்களிலும், இப்போது படி எடுக்கப்பட்டு வரும் பல கல்வெட்டுக்களிலும் அடங்கியுள்ள (அரசியல், சமுதாய) வரலாற்றுச் செய்திகள் ஏராளம்.

நமது இலக்கியங்களோ, கல்வெட்டுக்களோ வரலாறு எழுதும் நோக்கோடு எழுதப்பட்டவை அல்ல. ஆகவே, வரலாற்றுக்குத் தேவையான கால அடைவு அவைகளிலே இல்லை. ஆனாலும், இவைகளிலும் பிற எழுத்து ஆவணங்களிலும் இடம் பெறாமல் போன சில செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் நாம் குறித்து எடுக்க முடியுமானால், (மேற்குறித்த) இந்தச் செய்திகள் அடைவுபட்டுத் தமிழகத்தின் அழகிய வரலாறாக உருவாவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அந்த வகையில்..நமது தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சிற்றூரையும், பேரூரையும் பற்றிய முழு விவரங்களையும்—எழுத்துக் குறிப்புகள், செவிவழிச்செய்திகள் பட்டயங்கள் முதலியவைகளின் துணை கொண்டு சேகரித்து வகைப் படுத்தி வெளியிட்டால், நமது வரலாற்றுப் பெருமாளிகையில் இதுவரை அடைத்துக் கிடக்கும் பல வாயில்கள் திறந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.

இதிலே பஞ்சாப் என்னும் பாஞ்சால மாநிலம் வழி காட்டுகிறது; அந்த மாநிலத்தின் ஒவ்வொரு கிராமத்தையும் பற்றிய 'வில்லேஜ் மேனுவல்' என்னும் 'கிராமக் களஞ்சியம்' ஒன்றை வெளியிடத் திட்டமிட்டு, அந்த மாநில அரசு பணியாற்றி வருகிறது.

ஒரு கிராமத்தின் மக்கள் தொகை, அந்த மக்கள் பேசும் மொழி அல்லது மொழிக்கு உட்பட்ட இடமொழி, அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள், அந்த ஊரைப் பற்றிச் செவிவழியாகவோ, எழுத்து மூலமோ கிடைக்கும் வரலாறு, அங்கே பிறந்த பலதுறை அறிஞர்கள், வீரர்கள், கலைஞர்கள், அந்த ஊர் மக்களின் தொழில்கள், அவர்களின் வழிபாட்டுமுறைகள், புதிய மதம், வழிபாடு முதலியன புகுந்திருந்தால் அவைகளின் வரலாறு...என்பன போன்ற 60-க்கு மேற்பட்ட தலைப்புகளில் விவரங்களைச் சேகரித்து ஒரு புத்தகமாக வெளியிடுகிறார்கள். அவைகளிலிருந்து கிடைக்கும் சில செய்திகள், அந்தப் பகுதியின் அரசியல்/சமுதாய வரலாற்றைச் உதவியாக இருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

பஞ்சாபி மிகப் பழமையான மொழி அல்ல; அந்தப் பகுதியின் மக்களும் மிக்க நீண்ட வரலாறு உடையவர்களல்ல. அடிக்கடி நிகழ்ந்த போர்களில் அடியறுந்து சிதறிப் போய், அவ்வப்போது குடிகொண்ட மக்களே பஞ்சாபியர்கள். தமிழர்களாகிய நமது நிலை அதுவல்ல; நாம் நெடிய வரலாறு உடையவர்கள். பழங்காலம், இடைக்காலம், இக்காலம் எனப் பிரிந்து நிற்கும் மூன்று வேறு பண்பாட்டுப் பிரிவினைக் கொண்ட பாரிய வரலாறு உடையது தமிழகம்.

பாஞ்சாலம், 60 தலைப்புகளில் ஓர் ஊரைப் பற்றிய செய்திகளைத் திரட்டினால், நாம் 100-க்கு மேற்பட்ட தலைப்புகளில் தகவல் திரட்டிட வாய்ப்பு இருக்கிறது; அவைகளைக்



கொண்டு புத்தம் புதிய தமிழக வரலாற்றை நிருமாணிக்கவும் வசதி இருக்கிறது. நமது இலக்கியம் மற்றும் கல்வெட்டுக்களில் கிடைக்கும் செய்திகளைச் செங்கற்களாக்கி,-''கிராமக் களஞ்சியம்'' வழங்கும் கருத்துக்களையே சுண்ணாம்பும் சிமெண்டுமாகக் கொண்டு, நமது அரும்பெரும் வரலாற்று மாளிகையை எழுப்பி நிறுத்திடப் பெரியவாய்ப்பு உள்ளது.

ஆங்கில அரசு, **1933**-ல் அந்நாள் சென்னை மாநிலத்தில் இருந்த ஊர்கள் அனைத்துக்கும் ஒரு பட்டியல் தயாரித்து, (சென்னை மாநிலக் கிராமப் பெயர் அகரவரிசை என்னும் பெயரில்) வெளியிட்டது. அதனினும் மேம்பட்ட பணிகளை அவ்வரசு செய்யவில்லை; செய்திட அதற்குத் தேவையும் இருக்கவில்லை.

அந்த ஊர்ப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு சிற்சில அறிஞர்கள் (''ஊரும் பேரும் என்பன போன்ற) சில ஏடுகளைத் தந்தார்கள். ஆயினும் அவை முழுமையான விவரங்கள் அல்ல; அவைகளைத் திரட்டுவது தனி அறிஞர்களால் இயலக்கூடியதும் அன்று.

தமிழக அரசு, இந்த ஒரு திட்டத்தோடு, செயற்பட முனைந்தால், அரிய பெரிய செய்திகளைக் வெளிக்கொண்டு வந்து விடலாம். நமது கிராமங்களில், பழமையோடு உள்ள தொடர்பு முழுமையாக அறுந்த புதிய தலைமுறை ஒன்று உருவாகிடுமுன் இந்தப் பணியை அரசு மேற்கொள்ள வேண்டும்.

**எப்படிச் செய்வது!**

இந்தப் பணியை நிறைவேற்றுவதற்குரிய திட்டம் பின்கண்டவாறு அமையலாம். கிராமக் களஞ்சியத் திட்டம் அல்லது ஊர்க் களஞ்சியத் திட்டம் என்ற பெயரில் 4 அல்லது 5 ஆண்டுகளுக்குரிய ஒரு திட்டம் அமைய வேண்டும். கிராமக் களஞ்சிய மையம் என்றோ ஊர்க்களஞ்சிய இயக்ககம் என்றோ அதற்குப் பெயர் வைக்கலாம.

இயக்ககத்தின் பணி, பெரும்பாலும் செய்திகளைச் சேகரித்துத் திரட்டும் பணியாக இருப்பதால், நெறியாளரும் அவருடைய உதவியாளர் அல்லது ஒரு துணை நெறியாளரும், 15 நாள் வெளி ஊர்களிலும் 15 நாள் அலுவலகத்திலும் பணி புரியும் விதமாக அவர்களின் அலுவல்முறை அமைய வேண்டும். அவர்கள் சென்று சேகரித்து வரும் செய்திகளை அலுவலகத்தில் உள்ளோர் வகைப்படுத்திப் படி எடுத்து வைக்க வேண்டும். வேறு மூலங்களில் (Sources) கிடைக்கும் விவரங்களோடு, இவைகளை அவர்கள் ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும். இவ்வாறு திரட்டித் தொகுக்கப்படும் செய்திகள், தலைப்பு வரிசைப்படி அடைவு படுத்தப்பட்டுப் புத்தகமாக வெளியிடப்பட வேண்டும்.

**முடியும், செய்க!**

துருக்கி நாட்டிலே தீரன் கமால் பாட்சா ஆட்சிக்கு வந்த பிறகு, இது போன்ற ஒரு திட்டத்தால் துருக்கி மொழிக்கே புத்துயிர் ஊட்டப்பட்டது. அரசு ஆதரவு பெற்றிருந்த அரபி, பெர்சிய மொழிகளின் மேலாதிக்கத்தால் முழுமையாக ஒதுக்கப்பட்டு உயிர் குன்றியிருந்த துருக்கி மொழியை இத்தகைய திட்டத்தால் புதுப் பொலிவோடு வாழச் செய்தார் கமால். கடுமையான நெடிய புறக்கணிப்புக்கு உள்ளான நமது வரலாறு மற்றும் சமுதாயம் தொடர்புடைய செய்திகளையும் மீட்டெடுத்துப் பயன்படுத்த முடியும். ஆட்கள் இருக்கிறார்கள். போதிய ஆர்வமும் இருக்கிறது. நமது அரசு மனம் வைத்தால் அது நிச்சயமாக முடியும்.




**காந்தியடிகளைச் சந்தித்தேன்**

ஆசிரியர் :
**டாக்டர் ம. பொ. சிவஞானம்,**

வெளியீடு:
**பூங்கொடி பதிப்பகம்,**
22, வி.எஸ்.வி. கோயில்தெரு,
சென்னை—600 004
விலை ரூ. 5—00

'காந்தியம் என்பது முழுமையான ஒரு தத்துவம். என்று கோடிட்டுக் காட்டும்' இந்நூலாசிரியர், 'காந்தியம் என்பதனை, பிறவிக் குருடர்கள் யானையைக் கண்டதுபோலக் காண்கின்றனர்' என்று ஓரிடத்தில் குறிப்பிட்டு வருந்துகிறார். அதற்குக் காரணம், 'காந்தியம் இதுவரையில் முழுமையாக எழுதப்படாத ஒன்றாக இருப்பதுதான்' என்னும் நாசூக்காகச் சுட்டிக் காட்டுகிறார்.

'எரவாடா சிறையுள் புகுந்தேன்' என்ற பகுதியில் அக்காலச் சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளை ஆசிரியர் நினைவு கூர்வது மெய்சிலிர்க்க வைக்கிறது.

மகாத்மாவைச் சந்தித்தேன்' போன்ற கட்டுரைகள் சுவையாக இருக்கின்றன. ஆசிரியரின் எளிய இனிய நடை மனத்தில் நன்கு பதிகிறது.

**பாவேந்தர் பாரதிதாசன்**
**அறுசுவை விருந்து**

[ஆசிரியர்: முல்லை முத்தையா வெளியீடு; மணிவாசகர் நூலகம், 89 லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001. விலை: ரூ, 3.75]

பாவேந்தருடன் இருந்து, பழகி, அனுபவம் பெற்றவர் இந்நூலாசிரியர் திரு முல்லை முத்தையா அவர்கள். அவர், அவருடன் இருந்த அந்த நாட்களையெல்லாம் நினைவு கூர்ந்திடும் வகையில் இந்நூல் அமைந்து, நமக்கு அறுசுவை விருந்து படைக்கிறது.

பாவேந்தரின் பழக்க வழக்கங்கள், குணநலன்கள் எல்லாம் சிறு சிறு இனிய செய்திகளாக இந்நூல் முழுவதும் விரவியிருக்கின்றன. அவையெல்லாம் படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, நமக்குப் பாடமாகவும் விளங்குகின்றன.

அரசு நடத்திய 'பாவேந்தர் பாரதிதாசன் விழா' தொகுப்பு நிகழ்ச்சியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**பி. வி. ஜி.**

பறவை வேட்டையாடும் ஒரு குளுவனின் செயலை ஆட்சி செய்வோரின் முன்னால் அல்லது ஒரு செல்வந்தர் முன்னால் ஆடிப் பாடிக் காட்டிப் பரிசில் பெற்றுச் செல்லுவர். மக்களும் கூடி அதனைக் கண்டு களிப்பர்.

குளுவ நாடகத்தில் கடவுளரின் பெருமை முதலில் இடம்பெறும். அதனை அடுத்து கொடை வழங்கும் அரசனின் பெருமை அல்லது வள்ளலின் சிறபபு விளக்கமாகக் கூறப்படும். வேடம் புனைந்த குளுவன் பறவை வேட்டையாடும் கண்ணிகள், சுண்டுவிரல், கொக்கு முக்கூடு, வலை, வளரி போன்ற கருவிகளுடன் அரசன் முன் தோன்றுகிறான். அவனுடன் அவனுடைய நண்பனான சிங்கனும் வருகிறான். இருவரும் தங்களுக்கு உரிய ஆடை அணிகளுடன் தோன்றுகின்றனர். பாடலும் ஆடலும் நடைபெறுகின்றன.

குளுவன் தன்னுடைய தனித் திறமைகளைக் கூறி ஆடுகிறான். சித்து வித்தைகள் செய்யும் ஆற்றலை மிக எடுப்பாகக் கூறுகிறான். பின் சிங்கனுடன் வேட்டைக் கருவிகளுடன் வயல் வெளிக்குப் பறவை பிடிக்கச் செல்கின்றனர். கண்ணிகளை விரித்துக் காத்திருக்கின்றனர். பறவைகள் படபடவென வந்து விழுந்து சிக்குகின்றன. அவற்றைக் குளுவனும் சிங்கனும் பிடித்துத் திரட்டுகின்றனர்.

பிடிபட்ட பறவைகள் பலருக்கு அவரவர் தகுதிக்குத் தக்கபடிப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றன. இறுதியில் மீதியாக இருப்பவற்றைக் குளுவனும் சிங்கனும் தங்களுக்காக எடுத்துக் கொண்டு தங்கள் மலையை நோக்கிப் பயணமாகிறார்கள். அங்கு முருகனை வணங்கி அவனுடைய அருளைப் பெற விரைகிறார்கள்.

சிங்கன் சிங்கியைத் தேடுகிறான். இருவரும் ஒருவரையொருவர் பெருமகிழ்ச்சியுடன் சந்தித்துக் கொள்கின்றனர். சிங்கி



குறி சொன்னதற்காகப் பெற்ற பரிசுப் பொருட்களைச் சிங்கனிடம் காட்டிக் காட்டி மகிழ்கிறாள். சிங்கன் பார்த்துப் பார்த்து வியக்கிறான். இருவரும் அன்பினால் ஒன்று கூடிக் களிக்கின்றனர். அரசனை வாழ்த்திப் போற்றுகின்றார்கள். இறைவனை வேண்டிப் பணியத் தங்கள் மலைக்குடியிருப்புக்கு விரைகின்றனர்.

**இனிய நாடகம்**

சின்ன நாடகமாயினும் சிறப்பாக ஆடுவதற்கு வசதியான

**டாக்டர் ஏ. என். பெருமாள்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**அடையாறு, சென்னை.**

நாடகம். இசைக்கும் நடிப்புக்கும் நல்ல இடங்கள் உள்ளன. காட்சி மாற்றங்களுடன் கண்ணுக்கு இனிய காட்சிகளைக் காட்டிக் காட்டி நடிக்க வேண்டிய அமைப்புடன் எழுதப்பெற்ற 'இனிய நாடகம்'.

'சிங்கனு நானே கொடிக்குரச்
சிங்கனும் நானே சிங்கனு நானே'

என்று சிங்கன் தன் வருகையை அறிவித்து அரங்கத்தில் ஆடி வரும் காட்சியைச் சிந்தித்து நோக்கினால் அதன் கலைச் சுவையை ஓரளவு புரியலாம்.

குளுவனுடைய தோற்றமே அனைவரையும் கவரும் தரமானது.

'சுண்டு வில்லம்பு துலங்கு கூனருவாள்
மண்டலம் புகழ்சிங் கனும்வருகின்றான்
அரக்குடன் கள்ளும் மிகுதியாய்க் குடித்து
வெறிக்கெனப் பார்த்து முறுக்கிய மீசையுடன்
வருகிறான்.......

என்று குளுவனால் விளக்கப்படுவதைக் காணலாம். இதிலிருக்கும் நாடகச் சுவையே சிந்தித்து உணரத் தக்கதாகும். இனிய எளிய நாட்டுப்புற மக்களின் அருமையான கலையாகக் குளுவ நாடகத்தைக் கூறலாம்.

**நாட்டார் கூத்து (தெருக்கூத்து)**

மேடை அலங்காரம் இன்றித் தெருக்களில் ஆடலும் பாடலுமாக நடத்தப்பெறும் நாடகங்களைத் 'தெருக்கூத்து' என்று கூறுவர். இசைப் பாடல்கள் நிறைந்த இத்தகைய நாடகங்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகுதியாக நடித்தனர். இத்தகைய தெருக் கூத்துக்களைத் தெருக்களில் மாத்திரமன்றி வயல்வெளிகளிலும் நடித்துக் காட்டினர்.

நாட்டுப்புற மக்கள் கடின உழைப்பும் குறைந்த வருமானமும் உடையவர்கள். உழைப்பின் களைப்பைப் போக்கப் பல வித களியாட்டங்களை நடத்திக் காட்டினர். ஆனால் அரங்க அமைப்பும் திரைக் காட்சியும் மிகமிக எளிமையாகவே உள்ளது. பொருத்தமான ஆடைப் புனை

# தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள் 6





பொய்க்கால்குதிரை ஆட்டம்

வும் விளக்கமான ஒளியமைப்பும் செய்து நாட்டுப்புற மக்கள் நாடகங்களை நடத்தவில்லை. அவற்றிற்கு உரிய வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு இருந்ததாகக் கூற முடியாது.

பெரும்பாலும் தெரு முனைகளில் ஒரு வெள்ளைத்துணியைக் கட்டியிருப்பர். தீப்பந்தம் அல்லது விளக்கு வைத்திருப்பர். நடிகர்கள் ஓரளவு வேடமிட்டுத் திரைக்கு முன்னால் வந்து ஆடிப் பாடுவர். கூத்தாடிக்குப் பதில் தான் அவர்களுடைய நடிப்பு அடங்கியுள்ளது. மிக்க வேகமாக ஒலித்துப் பாடுவதில்தான் அவர்களுடைய பாடல் திறமை மதிப்பிடப்படுகிறது. மக்கள் இத்தகைய நாடகங்களைக் கண்டே மனநிறைவு பெற்றனர். விடிய விடிய இத்தகைய கூத்துக்கள் நடைபெற்றன. தெருக்களில் பெரும்பாலும் நடத்தப் பெற்றதனால் இவற்றைத் தெருக்கூத்து என்று அழைத்தனர். ஈழத்தில் நாட்டுக் கூத்து என்ற பெயரில் இவை நடைபெற்றன.

தெருக் கூத்து நடைபெறும் போது காட்சி மாற்றங்கள் மிகப் பல இடங்களில் கட்டியங்காரனால் கூறப்படும். சில சமயம் பொது விருத்தம் அல்லது பொது வசனம் மூலம் விளக்கப்படும். பாத்திரங்கள் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்தியவாறு மேடைக்கு வருவர். அரசனுக்கு என்று ஒரு வித வேடம் அமைப்பர். அதை எந்த நாட்டு அரசனும் அணிந்து வருவான். இவ்வாறே அரசி, நகைச்சுவைப் பாத்திரம், தோழன், தோழி என்று பாத்திரங்கள் வகையிடப்பெற்று வேடப் புனைவு செய்யப்படும். ராஜபார்ட், ஸ்திரி பார்ட், வில்லன் பார்ட், பபூன் என்று பலவிதமாகப் பாத்திரங்களை வகைப் படுத்தி வேடங்களைப் புனைந்து திரைக்கு முன் வரச் செய்வர்.

பெரும்பாலான பாத்திரங்கள் தங்கள் நாடு, நகரம், பெயர், பதவி ஆகியவற்றை விளக்கிக் கூறியே தங்கள் முதற் பாடலைப் பாடுவர். இது அறிமுகப்பாடலாக அமையும். பின்னர் கதையை விளக்கியும் வளர்த்தும் பாடல்களைப் பாடிப்பாடி ஆடுவர். மக்களுக்குத் தெரிந்த கதைகளையே நடிப்பதால் எப்படிப் பாடி ஆடினாலும் அவர்களால் புரிந்து கொள்ளமுடியும்.

## ஆடை அடையாளம்

தெருக்கூத்தை ஆந்திராவில் நடைபெற்ற வீதி நாடகங்களுடன் ஓரளவு ஒப்பிட்டுக் காணலாம். அவை கூடுதலான கலை நுட்பங்களைப் புலப்படுத்தும் தன்





வில்லுப்பாட்டு

மையில் உள்ளன. தெருக்கூத்தில் பாத்திரங்கள் தொடக்கம் முதல் இறுதிவரை ஒரே ஆடையைக் கட்டித் தங்களை அடையாளப் படுத்துவதையே காணலாம்.

தெருக்கூத்து நடிகர் திரையை விலக்கிக் கொண்டு முன் வந்து பாடுவார். கட்டியங்காரன் சிறிது வேடிக்கை காட்டித் திரையைத் தூக்கி மறைத்தும் வெளி வந்தும் பாடி ஆடி மக்களை மகிழ்விப்பதைக் காணலாம். திரையில் தன் முகத்தை மூடுவதும் திறப்பதுமாகச் சிறிது நேரம் நாடகங் காண்போருடன் கண்ணாமூச்சி விளையாடுவதும் உண்டு. பாடலின் ஒரு வரியை அவன் பாட அதனைத் திருப்பித் திருப்பிப் பக்கப் பாட்டுக்காரர் பாடுவது மிகவும் வேடிக்கையாக இருக்ம்கு.

நடிகர்கள் அரிதாரம், செந்தூரம், கரி ஆகியவற்றைப் பூசி ஒப்பனை செய்து கொள்வர். அத்திப்பால் கொண்டு மீசை, தாடி ஆகியவற்றை ஒட்டி வைப்பர்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் நடைபெறும் தெருக்கூத்துகளை வடக்கத்தி நாடகம் தெற்கத்தி நாடகம் என இருவகையாகப் பிரித்து நடத்துவர். இவை கூத்து நடைபெறும் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளாகும். தென் பகுதியில் நடைபெறும் தெற்கத்தி நாடகங்களில் இராமாயணத் தொடர்பான நாடகங்களும் அரிச்சந்திரா போன்றவையும் நடைபெறும். வளமான பகுதிகளில் தென்பாங்கு நடக்கின்றது.

மாவட்டத்தின் வடபகுதியில் நடப்பதை வடபாங்கு நாடகங்கள் என்று கூறுவர். பெரும்பாலும் பாரதக் கதைகளே நடைபெறும். மிகக்குறைவாகவே வேறு புராண நாடகங்கள் நடக்கும். இத்தகைய நாடகங்களைக் கட்டை கட்டி ஆடுதல், கட்டாமல் ஆடுதல் என இரு வகையாகப் பிரிப்பர். கட்டை என்பது மரக்கட்டையினால் செய்யப்பெற்ற சில அணிகளைக் குறிக்கும். இத்தகைய அணிகளில் புஜக்கட்டை, மார் பதக்கம், காதுகட்டை, கிரீடம் ஆகியவை முக்கியமானவை.

இத்தகைய அணிகளைக் கனமே இல்லாத கலியாண முருங்கைக் கம்பினால் செய்வர். இதனை விளக்கும் ஒரு பாடல் பாடுவர்.

''கண்ணால முருங்கைக்கட்டை
கண்ணாடி பளபளக்க....''



**தெருக் கூத்து**

என்னும் பாடலைக் கூத்துக் குள்ளே கேட்கலாம்.

பெரும்பாலும் தெருக்கூத்தில் சண்டை, கொலைக் காட்சிகள் மிகக் குறைவு. அவற்றைப் பாடல்களால் பாடி விளக்கி விடுவதைக் காணலாம். சாலரா, அல்லது தாளம், மிருதங்கம், ஆர்மோனியம் ஆகியவை முக்கியப் பக்கப்பாட்டுக் கருவிகளாக விளங்கும்.

வரவர தெருவில் ஆடும் வழக்கம் குறைந்து அதே நாடகங்களை அரங்கத்தில் நடிக்கத் தொடங்கினர். அதற்குத் தக்கவாறு சிற்சில மாற்றங்களை ஏற்படுத்தினர். இருப்பினும் பெரும்பாலும் முன்னமைப்பு போன்று அவை பாடலும் ஆடலுமாகவே இருந்தன. ஆடும் இடம் தெருவை விட்டு மாறி ஓர் அரங்கத்துக்கு வந்தது. அவற்றைப் பெருவாரியான நாட்டுப்புற மக்கள் விரும்பிப் பார்த்தனர். ஆகையினால் இத்தகைய நாடகங்களை நாட்டார் நாடகங்கள் என்று அழைக்கலாம்.

### புனிதச் செயல்

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான ஊர்களில் இத்தகைய நாட்டார் நாடகங்கள் இன்றும் விழாக் காலங்களில் மிகச்சிறப்பாகநடத்தப்பெற்றுவருகின்றன. சில இடங்களில் கூத்து நடத்துவதைப் புனிதச் செயலாகக் கருதுகின்றனர். மழையை வேண்டி 'விராட பருவம்' நாடகம் நடத்தும் வழக்கம் இன்றும் சில ஊர்களில் உண்டு.

நாட்டுக் கூத்து நடத்துவதில் மக்கள் பெறும் இன்பம் மிகுதியானது. மேலும் புராண இதிகாச அறிவினை எளிதாகப் பெறுகின்றனர். வாழ்க்கைக்கு வேண்டிய சில செய்திகளையும் ஆசிரியர்கள் நாடகத்தின் வாயிலாக மக்களுக்குப் புகட்டி விடுகிறார்கள்.

குழந்தைப் பேறு வாய்க்காதவர்கள் அம்மனுக்குக் கூத்து நடத்தியுள்ளனர். 'சத்தியவான் சாவித்திரி' நாடகமே இதற்காகப் பலரால் நடத்தப்படும் நாடகமாகும். திருமணம் நடைபெற விரும்பி வேண்டுதல் செய்வோர் சீதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம் போன்ற நாடகங்களை நடத்தியுள்ளனர். இவ்வாறு மிகவும் நம்பிக்கையோடும் புனித வுணர்வுடனும் வேண்டுதலாக நடத்தப் பட்டுள்ள நாட்டார் நாடகங்கள் காலம் கழியக் கழியத் தங்கள் மதிப்பை இழக்கத் தொடங்கியுள்ளன. சில சிற்றூர்கள் பழமையின் கொள்கலங்களாக இன்றும் விளங்கி இத்தகைய கூத்துக்களுக்கு இனிய ஆதரவை அன்புடன் கொடுத்து வருகின்றன. அவற்றின் மூலம் அடையும் இன்பமும் அறியும் செய்திகளும் பலபல. நாட்டுப்புறக் கலைகளில் கூத்து மிகவும் சிறப்புடையது என்பதை உறுதிப் படுத்திக் கூறலாம்.

—முற்றும்.

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.




**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u> வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2317 TM

# வல்வில் ஓரி விழா




மு. முத்துக்காளத்தி,

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்.

(செய்தி-மக்கள் தொடர்பு)

சேலம்.


கி.பி. 200-ஆம் ஆண்டு. கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆதன் ஓரி என்னும் குறுநில மன்னன் கொல்லிமலையைச் சிறப்பாக ஆண்டு வந்தான். அவன் வில்லாற்றல் மிக்க வீரன். அதனால் அவன் 'வல்வில் ஓரி' என்று சிறப்பித்து அழைக்கப்பட்டான். இரந்தவர்க்கு இல்லையென்று கூறாமல் வாரிவாரி வழங்கிய பெருவள்ளல். வண்பரணர், கபிலர், கல்லாடனார், நத்தத்தனார் போன்ற புலவர்களால் பாடப்பெற்று, புறநானூற்றில் இடம் பெற்ற பெருமையுடையவன். அத்தகைய மன்னனின் நினைவாகவும், அவன் புகழைப் பரப்பும் வகையிலும் தமிழக அரசு ஆண்டுதோறும் விழா எடுத்து வருகிறது.

இந்த ஆண்டும், அதே வகையில் ஆகஸ்ட் 3,4 ஆகிய இரு நாட்களிலும் 'வல்வில் ஓரி விழா' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### மேலவைத் தலைவர்

கொல்லிமலையில் உள்ள செம்மேடு வல்வில் ஓரி திடலில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்றார்கள். தலைமை உரையில் அவர் குறிப்பிட்டார்:

''மொழி, இனம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காக முன்பு போலவே இந்த அரசும் அக்கறை செலுத்தத் தவறியது இல்லை என்பதை எடுத்துக் காட்டவே இந்த வல்வில் ஓரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. வல்வில் ஓரி விடும் அம்பானது ஒரே சமயத்தில் பல விலங்குகளைத் தாக்கிக் கொல்லும் வேகம் பெற்றது. அப்படிப்பட்ட மன்னனுக்கு விழா எடுப்பதில் பெருமை கொள்கிறேன்'' என்றார்

### அமைச்சர் உரை

அடுத்து விழாவினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திருஆர்.எம்.வீரப்பன் அவர்கள் உரையாற்றினார். அவர் குறிப்பிட்டார்:

''கொல்லிமலையில் 1975வது ஆண்டிலிருந்து இந்த விழா எடுத்தபின் இந்தப் பகுதி எப்படி வளர்ச்சி அடைந்தது என்று எண்ணிப் பார்த்தால் வருத்தப்படவேண்டிய ஒன்றாகும். ஆகவேதான் வனத்துறை அதிகாரிகள்,



அண்ணா போக்குவரத்துக் கழக அதிகாரிகள் அனைவரையும் இந்த விழாவிற்கு அழைத்திருக்கிறேன். கொல்லிமலையின் வளம் முன்னாள் இருந்ததைவிட இப்போது குறைந்து கொண்டே வருகிறது.

''வனத்துறையைப் பெருக்க அரசு காடுகளை வளர்க்கமுயற்சி எடுக்கும்போது மலைவாழ் மக்களாகிய உங்களுக்குத் தொல்லை கொடுப்பதாக நினைக்கக்கூடாது. மலைவாழ் மக்கள் என்ற பெயரில் அதிகாரம் படைத்தவர்கள் 50 ஏக்கர் நிலத்தை வளைத்துப் போட்டால் அது நடக்காது. இவ்வாறு செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

''கொல்லி மலையில் உள்ள அறப்பளீசுவரர் கோவில் மிகவும் முக்கியம் வாய்ந்த கோவில் ஆகும். இதன் கட்டட வேலைக்காக ரூ. 5 லட்சம் செலவில் திட்டமிடப்பட்டு வேலைகள் வேகமாக நடந்து வருகின்றன.

''இங்கே ஒரு சுற்றுலாத்துறை அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். சுற்றுலாத் துறைக்குப் பணம் ஒதுக்குவது கிடையாது. சில முயற்சிகளைக் கொண்டு காரியம் ஆற்றுவதுதான் ஆகும். ஆகவே, அண்ணா போக்குவரத்துத்துறையினர் சுற்றுலாத் துறைக்கு அறைகள் கட்டும் பொறுப்பை எடுத்துச் செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

''கோவில் அருகே இருக்கும் நீர்வீழ்ச்சியில் பக்தர்கள் 200அடி ஆழத்திற்கு இறங்கிச் சென்று குளிப்பதற்கு வசதியாகப்படிகள் கட்டிக் கொடுக்கும் பொறுப்பையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

''கொல்லிமலையைச் சுற்றுலா இடமாக மாற்ற அண்ணா போக்குவரத்துத்துறையும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும் முழுப்பொறுப்பு எடுத்துச் செயல்பட வேண்டும்.

''கொல்லிமலையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் ஒன்று உள்ளது. இந்த மலையில், உடல் நோய்களைத் தீர்க்கும் நல்ல மூலிகைச் செடிகள் உள்ளதால் மலை அருவிகளில் குளித்தால் நோய் தீர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்தவை இங்கு உள்ள மூலிகைகள்!''

### சட்டப் பேரவைத் தலைவர்

விழாவில் கலந்து கொண்டு, விவசாயம், மருத்துவம், கலை, பண்பாட்டுக் கண்காட்சியைத் திறந்து வைத்தார் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள்.

சிறப்புரையில், அவர் குறிப்பிட்டதாவது:-

''கொல்லிமலையை 14 நாடுகள் அலங்கரித்து உள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனிப் பூக்கள் மலர்வதுஉண்டு. கொல்லி மலையில் விளையாதபொருட்கள் கிடையாது. இங்கே படிப்பதற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் போதிய வசதி உள்ளது. மாடு, கோழி, கிணறு வெட்டுதல் ஆகிய தொழில் செய்ய மலைசாதி மக்களுக்கு அரசு பலவிதத்தில் உதவி புரிந்து வருகிறது'' என்றார்.

முன்னதாக விழாவுக்கு வருகை தந்தவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சு. ர. கருப்பண்ணன் வரவேற்றார்.

அடுத்து சேந்தமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்



என் தொண்டெல்லாம் நம். மக்கள் உலக மக்களைப் போல் சரிசமமாக வாழவேண்டும்- அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத்தான்

திரு. சீ. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் வல்வில் ஓரி அரசினர் ஆதிவாசிகள் உறைவிட மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவியர் ஆகியோர் வல்வில் ஓரிக்கு வீர வணக்கம் செலுத்தினார்கள்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் அருணாசலம், சிவப்பிரகாசம் ஆகியோரும் சிலம்பொலி சு. செல்லப்பன், கிள்ளிவளவன், சின்னச்சாமி, ரா.சு.செல்லப்பன் ச.தி., துரைசாமி ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இறுதியாக செய்தி - மக்கள் தொடர்புத்துறை அலுவலர் (மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்) மு. முத்துக்காளத்தி நன்றியுரையுடன் முதல் நாள் விழா நிறைவு பெற்றது.

அன்று இரவு சேரன் போக்குவரத்துக்கழக இசைக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும், அதையடுத்து சேலம் கல்ச்சுரல் அகாடமி கலைக்குழுவினரின் ''ஆசைகள் மடிவதில்லை'' என்ற நாடகமும் நடைபெற்றன.

இரவு, இறுதியாக செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் செய்திப்படங்கள் காட்டப்பட்டன.

### கவியரங்கம் — பட்டிமன்றம்

இரண்டாவது நாள் நிகழ்ச்சியாக, சுற்றுலா அலுவலர் சி. நடராசன் அவர்களின் வரவேற்புரையுடன் விழா துவங்கியது. முதல் நிகழ்ச்சியாக டாக்டர் ஔவை நடராசன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் செந்தமிழ்மாறன், செ. ஆடலரசு, மு.கு. பழனியப்பன், சேலம் எழிலன், நாமக்கல்நாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தியாகராசனின் நன்றியுரைக்குப் பிறகு பட்டிமன்றம் துவங்கியது. நடுவராக ஔவை நடராசன் தலைமை ஏற்றார். 'ஓரியின் புகழுக்குக் காரணம் கொடைத் திறமா? படைத்திறமா?' என்பது பற்றி புலவர் மீ.மு. சின்னாண்டார், வீ.செ. கந்தசாமி, தி. கோவிந்தன், ஜே. சி. பெருமாள், க. இலக்குமிநாராயணன், எம்.பாலசுப்ரமணியம் ஆகியோர் வாதிட்டனர்.

அன்று மாலையில் சட்டமன்ற உறுப்பினர் சீ. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் சி. அரங்கதாஸ், நாமக்கல் கோட்ட வளர்ச்சி அலுவலர் டி.எஸ். கிருஷ்ணசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

### மலை வாழ் மக்கள் கலை நிகழ்ச்சி

அதற்கடுத்து, மலைவாழ் மக்களின் கலை நிகழ்ச்சியும், மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. இரவு சேலம் கூட்டுறவு ஒன்றியக் கலைக் குழுவினரின் 'ஒளி பரவட்டும்' என்ற நாடகமும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் செய்திப் படங்களும் காட்டப்பட்டன.

புறநானூற்றுச் சிறப்புமிக்க வல்வில் ஓரி விழா இரு நாட்களும் மிகச் சிறப்பாக நடந்தேறியது; மக்களை உற்சாகப்படுத்தும் வகையில் அவ்விழா அமைந்தது குறிப்பிடத்தக்கது. இதனைக் கண்டு களித்திடப் பல்லாயிரக்கணக்கான மலைவாழ் மக்களும், மாவட்டம் முழுவதிலிருந்தும் வந்திருந்த மக்களும் திரண்டிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.



# கொக்கரக்கோ

## பேரறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'சௌமியன்' என்ற புனைபெயரில் 'ஆனந்த விகடனில்', 1934ல் எழுதிய சிறுகதை இது. அமரர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை யொட்டி அதனை மீண்டும் வெளியிடுகிறோம்.

ஒரு நாள் மாலை. நான், கடற்கரை முன்பு கண் மூடி மௌனியாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். கண் மூடுவதும், மௌனியாவதும், கனவு காண்பதும் சகஜம்தானே!

''வைஸ்ராயைப் பார்த்தாயோ இல்லையோ?'' என்று கேட்டுக் கொண்டே யாரோ என் முதுகில் ஒரு தட்டுத் தட்டவே கண் விழித்துத் திரும்பிப் பார்த்தேன். பல மாதங்களாக என் கண்களில் தென்படாதிருந்த என் நண்பன் சுந்தரம் ,சிரித்துக் கொண்டே நின்றான்.

''இல்லை சுந்தரம், நீ பார்த்தாயோ?'' என்று நான் வினவினேன்.

''அவர் என்னைப் பார்க்காமல் கூட இருப்பாரா? போன வாரத்தில் கூட, 'வீரர் வில்லிங்டன்' என்று முதல்தரமான தலையங்கமொன்று எழுதினேனே, தெரியாதா?'' என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. சுந்தரம் டெபுடி கலெக்டராக இருப்பதாகச் சொன்னால் கூட நான் நம்பத்தயார். ஆனால், பத்திரிகாசிரியராக இருப்பதாகச் சொன்னபோது கொஞ்சம்கூட நம்ப முடியவே இல்லை.

''தலையங்கம் யார் எழுதினது'' என்று நான் வினவினேன்.

''அ ரெ ரெ, சமாசாரமே தெரியாதா?'' என்று பீடிகை போட்டுக் கொண்டு , சுந்தரம் தன் சுயசரிதையைத் தொடங்கினான். அதற்குள் எனக்கு அறிமுகமான ஒரு பேர்வழி அவ்வழியே போக, நான் அவருக்கு ஒரு சலாம் போட்டுக் கொஞ்சம் பற்களை வெளியே காட்டினேன்.

''யார் அந்த ஆசாமி?'' என்று கேட்டான் சுந்தரம்.

''கரன்சி ஆபீசில் 600 ரூபாய் சம்பளத்திலிருக்கிறார். அவர் பெரிய பேர்வழி'' என்றேன்.

''உஷ் இவர்களைப் பார்த்தாலே எனக்குப் பிடிப்பதில்லை'' என்று கூறிக் கொண்டே, அந்த உத்தியோகஸ்தர் போன திக்கை நோக்கிச் சுந்தரம் காறி உமிழ்ந்தான்.

''கொடுத்து வைத்த ஆசாமிகள்! அந்தக் காலத்திலேயே சுலபமாக அகப்பட்ட வேலையின் பயனாக இன்று கொழுத்த சம்பளம் வாங்குகிறார்கள். இந்தக் காலத்திலே வேலை ஏது? வெட்டி ஏது? இருக்கும் பணத்தையும் படிப்பிற்கு அர்ப்பணம் செய்துவிட்டு, வரட்டு நிலம், முரட்டு மனைவியுடன் காலட்சேபம் செய்வது எவ்விதம் என்ற கவலை எனக்கு உண்டாயிற்று. வெகு நேரம் வேதனைப் பட்டுக் கடைசியில் பத்திரிகாசிரியர் ஆகலாம் என்று தீர்மானித்தேன்.''

சுந்தரம் இந்த இடத்தில் தன் சரிதத்தைச் சற்று நிறுத்திவிட்டுக் கொஞ்சம் பொடி போட்டுக் கொண்டான். அவன் திடீரென்று எப்படி மேதாவியானான் என்று தான் யோசித்துக் கொண்டிருந்தேன். மறுபடி ஆரம்பித்தான் கதையை:



''எவ்வளவோ பத்திரிகைகள்! எங்கே திரும்பினாலும் பத்திரிகைகள். இருந்தாலும் என் பத்திரிகையின் பெயரைக் கேட்டாலுமே போதும். உன்னால் அதை வாங்காமலிருக்க முடியாது. நல்ல சுபதினமாகப் பார்த்து அதை ஆரம்பித்தேன். தாளின் தலையிலே ஒரு சேவல்! அதன் வாயினின்றும் வருகிறது 'கொக்கரக்கோ' என்னும் சப்தம். அதுவே பத்திரிகைக்கும் பெயர். சப்தச்சுவை ஒரு பக்கம் கிடக்கட்டும். அதில் வெளியாகும் விஷயங்களின் பொருட் சுவையின் நயத்தை என்னால் சொல்லமுடியாது''.

''சுந்தரம் ஒரு கேள்வி; அது என்ன மாதப் பத்திரிகையா, வாரப் பத்திரிகையா, அல்லது தினசரியா?'' என்று கேட்டேன்.

''அதை நான் ஏன் கூறவேண்டும்? விஷயம் முழுவதையும் கேட்டுவிட்டுப் பிறகு நீயே சொல்லு. மற்றப் பத்திரிகை ஆசாமிகளைப் போல, ரிசர்வ் பாங்கி மசோதா, வெள்ளைக் காகிதத் திட்டம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், சாஸ்திரியார் சாசனம் என்றெல்லாம் நான் எழுதுவது கிடையாது. 'கொக்கரக்கோ'வில் வெளிவரும் முக்கியமான விஷயங்கள் என்னவென்றால், திடுக்கிடும் சம்பவங்கள், ஆவேசத்தைத் தரக்கூடிய ஆச்சரிய மர்மங்கள், விநோத விசித்திரங்கள் தாம். ஆனால் ஒரொரு சமயம் பல சிக்கலான பிரச்சினைகளைப் பற்றிக் கூட நான் விவாதிப்பதுண்டு.

''உதாரணமாக, 'மனிதனுக்கு ஒரு தலை போதுமா?'' என்ற தலைப்பின்கீழ் ஒரு ரசமான கட்டுரை எழுதியிருந்தேன். இவ்விஷயமாக இதுவரை ஒருவரும் கவனியாது இருப்பது சுத்தப் பிசகென்றும் அறிவுள்ளோர் இதன்

உண்மையைத் தெரிந்துகொண்டு பாமரருக்குக் கூற வேண்டுமென் றும், ரெவரண்டு ராம்சிமித் பிர சங்கம் செய்ததாக எழுதிவிட் டேன். அவ்வளவுதான். அந்த வாரம் பூராவும் அதைப் பற்றி விருத்தி உரைகளும் வியாக்கியா னங்களும், ஆராய்ச்சிகளும் 'கொக்கரக்கோ'வில் வெளிவந் தன. பிறகு....''

''ஆமாம் சுந்தரம், ராம்சிமித் யார்?'' என்று நான் கேட்டேன்.

சுந்தரம் கதை சொல்லும் உற் சாகத்தில், என் கேள்வியைக் கவனிக்கவே இல்லை. மேலே சொல்லிக்கொண்டே போனான்.

மறுவாரம், 'மன்னிக்கவும்' என்ற தலைப்பின்கீழ் ராம்சிமித் 'மனிதனுக்கு ஒரு தலை போதுமா?' என்ற பிரச்னையைக் கிளப்பவே இல்லையென்றும் 'மனிதனுக்கு இருக்கும் ஒரு தலையே போதும். இதை அறி வுள்ளோர் கவனித்துப் பொது மக்களுக்குக் கூறுவது நலம்' என்று மட்டுமே அவர் கூறியதாகவும் வெளியிட்டு, தப்பாகச் செய்தி அனுப்பின நிருபரை வேலையை விட்டு விலக்கி விட்டதாகக் 'கொக்கரக்கோ'வில் பிரசுரம் செய்தேன்.''.

எனக்குச் சிரிப்புப் பொங்கிற்று. சுந்தரம் அவ்வளவு சாமர்த்திய மாகக் காரியங்களைச் செய் வான் என்று நான் எதிர்பார்க் கவே இல்லை.

''பேஷ்! பேஷ்!'' என்று சொல்லிக் கொண்டே, அவன் முதுகைத் தட்டி கொடுத்தேன். ''தட்டுவது பிறகு ஆகட்டும். சங்கரா! விஷயத்தைக் கேள்!'' என்று சுந்தரம் கதையை மேலே சொல்லத் தொடங்கினான்.

''தத்தி விளையாடி, குழந் தைப் பருவத்தைக் கடந்த 'கொக்கரக்கோ' வாலிபப் பரு வத்தை அடைந்தது. பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் 'கொக்க ரக்கோ'வைப் பார்க்காமல் தூங்கு வதில்லை. நானும் விநோத விஷ யங்களை வெளியிட்ட வண்ண மாகவே இருந்தேன். அதற்காக நான் செய்த யுக்திகள் எவ்வளவு! ஒரு தினம் விந்தையான விஷயம் ஒன்றும் அகப்படவில்லை. ஒரு பக்கம்கூட அச்சாகவில்லை. மணியோ மூன்று நான்கு என்று வளர்ந்து கொண்டே சென்றது. ஐந்து மணிக்கெல்லாம் பத்தி ரிகை அச்சடித்தாக வேண்டும். என் நிலையில் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?'' என்று சுந்தரம் கேட்டான். ஆனால் நல்ல காலமாக என் பதில் வரு முன்னமேயே தன் சரிதத்தை ஓட்டினான்.

''கேள் சங்கரா! சுற்றி வளைத் துப் பார்த்தேன். திடீரென்று ஒரு யுக்தி கிளம்பிற்று. எடுத் தேன் பேனாவை. 'ஹிட்லர் பட் லரானால்?' என்று கேள்வி ஒன்று எழுப்பினேன். மறுதினம் என் சித்திரக்காரரைக் கொண்டு ஹிட்லருக்குப் பட்லர் வேடம் போட்டு, அவர் ஐரோப்பாவிற் குச் சாப்பாடு எடுத்துக்கொண்டு போவது போலவும், சாப்பாட்டு பண்டங்கள், துப்பாக்கி, பாம், புகையிலை முதலியனவைகளாக வும் ஒரு படம் பிரசுரம் செய் தேன்.

''விற்பனை பலத்தது. 32.பி ஏ.க்களை நிருபர்களாகவும், பார்சல் குமாஸ்தாக்களாகவும் வைத்துக் கொண்டேன். நீயும் வருவதானால் 33 பி.ஏ.க்களுக்கு நான் தலைவனாவேன். என் மனைவி மரகதம் பெண்கள் பகு தியை வெகு திறமையாக நடத் திக் கொண்டு வந்தாள். ஓர் அழ கிய சிறிய பங்களாவை விலைக்கு வாங்கி அதில் குடியேறினேன். அடுத்த பங்களாவில், கார்த்தி கேயன் அடியார் கூட்டத் தலை வரும், கங்காணிகள் சங்கத்துப் பொக்கிஷதாரருமான ஸ்ரீமான் கருணைப் பிள்ளை, தம் மனைவி கமலாம்பிகையுடன் கூடி வசித்து வந்தார். பல முறை நான் அவரை அணுகி, என் பத்திரிகை கையைப் பற்றி உம் அபிப்பிரா யம் என்ன? அதற்கு ஏதாவது விஷ யம் தரக்கூடாதா? என்று கேட்டுக் கேட்டு என் பாடு போதுமென் றாகி விட்டது. எத்தனையோ பெரிய ஆசாமிகள் விஷயதானம் செய்திருக்கிறார்கள். இந்தக் கரு ணைப் பிள்ளைக்கு மட்டும் ஏன் கடுகளவு கருணையாவது இருக் கக்கூடாதென்று எண்ணி ஏங்கி னேன். ஆனால் விட்டேனா ஆசா மியை. மரகதமும் நானும் கலந்து யோசித்து அவரைத் தண்டிக்க ஓர் ஏற்பாடு செய்தோம்.

''ஏற்பாட்டின்படி, கமலாம் பிகையை என் மனைவி சிநேகம் செய்து கொண்டாள். ஒரு தினம் இருவரும் வழக்கம் போல் சந் தித்து வம்பளந்து கொண்டிருந் தனர். இருந்தாற் போலிருந்து மரகதம் விழுந்து விழுந்து சிரித் தாள். கமலாம்பிகையின் முகத் தில் அசடு தட்டிற்று. 'ஏன் சிரிக் கிறாய்? காரணத்தைச் சொல்லி விட்டுச் சிரிக்கக் கூடாதா?' என்று கெஞ்சினாள். மரகதம் சிரிப்பை நிறுத்திவிட்டு, 'ஒன்றுமில்லை, என் வீட்டுக்காரர் என்னிடம் அதிக அன்புள்ளவர். நான் சொல்வதைத் தட்டுவதே கிடை யாது. நேற்று நான் வேண்டு மென்றே அவருடைய அன்பைச் சோதிக்க எண்ணி, ஒரு பாவா டையைக் கட்டிக் கொண்டு நட னம் செய்யச் சொன்னேன். அவ ரும் தடை சொல்லாது ஆடினார். ரொம்ப தமாஷாக இருந்தது. அதை நினைத்துக் கொண்டுதான் சிரிக்கிறேன்' என்று கூறினாள்.





''அன்று மாலை நான் ஆபீசிற்குச் செல்லாது, கருணைப் பிள்ளை வீட்டுத் தோட்டத்தில் காமிராவுடன் ஒளிந்து கொண்டிருந்தேன். அவரும் அவர் மனைவியும் தோட்டத்திற்கு வந்தனர்.

''இது என்ன முட்டாள்தனம்! ஆசையிருந்தால் ஆட வேண்டுமா என்று பிள்ளை கேட்டார். கமலாம்பிகை கண்களைப் பிசைந்து கொண்டே 'ஆமாம்! ஆடு என்றால் ஆடத்தான் வேண்டும். பாடு என்னறால் பாடத்தான் வேண்டும். பக்கத்து வீட்டு அசிரியர் முட்டாளா? அவருடைய மனைவி அவரை ஆடச் சொன்னாள். அவர் ஆடினார். கொடுத்து வைத்த புண்ணியவதிகளுக்கு மனங்கோணாது நடக்கும் புருஷர்கள் வாய்க்கிறார்கள்' என்று கூறிக்கொண்டே விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

''சரி''என்று சொல்லி கருணைப் பிள்ளை ஒரு பாவாடை தரித்து வந்து நடனம் செய்தார்.

''நடனம் மிக அற்புதமாக இருந்தது. கறுத்துப் பெருத்த உருவம். உருண்டைத் தொந்தி, மொட்டைத் தலை-நடனம் நன்றாகத்தானே இருந்திருக்கும்! நான் மறைந்திருந்து அவர் ஆடியதை போட்டோ பிடித்துக் கொண்டு, பிறகு அவர் எதிரில் திடீரென்று வந்தேன்.

''பரத நாட்டியத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன என்று நான் கேட்டேன். ஆள் அப்படியே ஸ்தம்பித்துப் போய் விட்டார். அன்றைய 'கொக்கரக்கோ'வில்-

**கருணைப்பிள்ளை நர்த்தனம்**

**பரத நாட்டியம் ஒரு பழங்கலை** என்று தலைப்புப் போட்டு கருணைப் பிள்ளையின் போட்டோவையும் பிரசுரம் செய்தேன். அன்று என்னமோ எனக்கு ஒரு விந்தையான ஆசை ஏற்பட்டது. நமது பத்திரிகையை நாமே விற்க வேண்டுமென்று தோன்றிற்று. உடனே மாறு வேடம் பூண்டு பிராட்வே முனையில் நின்றுகொண்டு 'கொக்கரக்கோ' காலணா என்று கூவிக் கூவி விற்றேன்.

''சுந்தரம்! நிறுத்து, நிறுத்து. உன் சரிதம் கிடக்கட்டும். அந்த மாதிரிப் பத்திரிகையை நான் பார்த்ததே இல்லையே' கேள்விப் பட்டது கூட இல்லையே!'' என்று நான் கேட்டேன்.


"நீ எப்படிப் பார்த்திருக்க முடியும்? இந்த ஊரில்போட்டால் தானே உனக்குத் தெரியப்போகிறது.?'' என்றான் சுந்தரம்.

''இந்த ஊரில் போடவில்லையா? எந்த ஊரில் போடுகிறாய்?'' என்று நான் வினவினேன்.

''உங்களுக்குத் தெரியாதா கீழ்ப்பாக்கம் பத்திரிகையாசியரை?'' என் பின்னால் ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு போலீஸ்காரன் என் நண்பன் கரத்தைப் பற்றிக் கொண்டான். என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு அவனை இழுத்துக்கொண்டு போனான்!

---

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல. மெய்! மெய்! எனும் உணர்வும். அந்த எழிலினையும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாகச் செய்து முடிக்க ஆற்றல் மிக வேண்டும். அவ்வாற்றல், கூட்டுற முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி கொண்டோர் இதயம் மலராகி இன்புற்றிருப்பதுபோல, நல் வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு, போன்ற நினைப்புகளும் நிலைமைகளும் நிகண்டுகளும், அமைப்புகளும் நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரச் செய்து எல்லாரும் இன்புற்று வாழ்திடலே இயற்கை நீதி எனக் கொண்டு பணி புரியும் ஆர்வமும் பெற்றிடப் பயன்படும்.




• • • • • • •

காலைக் கதிரவன், மாலை மதியம், ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சிடுங் கிள்ளை, துள்ளிடும் வெள்ளி மீன், மருண்ட விழி மான், ஒளிவிடு விண்மீன், சிரித்திடும் முல்லை; பேசிடும் புறாக்கள், பழமுதிர்சோலை வளமிகு வயல்கள், எதுதான், தம்பி! அழகாக இல்லை! எதுதான் தம்பி! இன்பம் தராதிருக்கிறது. வா! வா! என்று வாயால் அல்ல சிறு கரத்தால் அழைத்திடும் குழவி காண்போன் களித்திடுவது போலத் தான், முற்றிய கதிர் நிரம்பிய வயலின் ஒரத்தில் சென்றிடும் உழவனுக்கு காற்றால் அசைந்தாடும் பயிர் மகிழ்ச்சி அளிக்கிறது. அந்தி நேரத்துச் செவ்வானத்தைக் கண்டதுண்டா? கண்டிருப்பாயே? எப்படி அந்த அழகு? உன்னைப் போய் கேட்கிறேனே! உன்னை முதன் முதலாகக் கண்டபோது உனக்கு வாய்த்தவளின் முகம் வெட்கத்தால் சிவந்திருக்குமே, நீ அதை அல்லவோ எண்ணிக் கொண்டிருக்கிறாய்!! இருப்பினும் இதனைப் கேட்டிடு தம்பி! எழிலோவியம் நிரம்ப உளது நம்மைச் சுற்றி! ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் வகையான அழகு ததும்புகிறது. ஆனால் அந்தப் புறத்தழகு மட்டுந்தான், அதை நமக் களித்திடுகின்றன என்றால், அவை பெருமைக் குரியனவாகா. புறத்தழகு காட்டி நம்மை மகிழ்விப்பதுடன், அவை தமது தன்மையில் காரணமாக நமக்கு மிகுந்த பயனையும் வழங்குகின்றன! நம் வாழ்வு சிறப்படைய அவை துணை செய்கின்றன

—பேரறிஞர் அண்ணா

# தந்தை பெரியார்
# தொண்டும்-வாழ்வும்

திருவாரூர் கே. தங்கராசு

வரவிருக்கும் ஆயிரமாண்டுக் கால அகிலத்து வரலாற்றில் உயரிய சிந்தனையாளர்கள் வரிசையில்-சீர்திருத்தச் செயல் வீரர்கள் பட்டியலில் முதலிடம் பெற்று விளங்கவிருக்கும் பெரியார்களில், நமது தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் முதன்மையிடம் பெற்றுப் பொலிவார்கள் என்று கூறுவது மிகையல்ல எனக் கருதுகின்றேன்.

கரணியம், அவர்கள் தொண்டாற்றிய இடம் மடமைக்குப் பிறப்பிடமாகும்! தெரிவு செய்து கொண்ட பணியோ மற்றவர்கள் முடியாது என்று விடுத்துவிட்ட ஒன்றாகும்!

ஆம்! மடமை ஒழிப்பு, பிறவி இழிவு ஒழிப்பு எனும் கடும் பணியை அதன் பிறப்பிடத்திலேயே துவங்கி, தமது வாழ்நாளிலேயே பெரும் வெற்றி கண்டிட்ட பெரியார் நமது தந்தை பெரியார் ஒருவரேயாவார்கள்!

மடமையும் கழிவும் கடவுள்களின் பெயரால், மதத்தின் பெயரால் பரப்பப்படுகின்றது என்பதனைத் தெள்ளிதின் ஆய்ந்து, பின்னாளில் கடவுளோ மதமோ மனித குல வாழ்வக்கு முற்றிலும் தேவையற்ற ஒன்று என்பதை அறிவு பூர்வமாக நிரூபித்து அதற்கு எடுத்துக்காட்டாகப் பெருவாழ்வும் வாழ்ந்து காட்டியவர்கள் நமது பெரியார் அவர்கள் ஆவார்கள்!

கடவுள் மறுப்பு அல்லது நாத்திக வாதம் எனும் தத்துவத்தை அய்யா அவர்களைவிடத் தீவிரமாக ஆய்ந்திட்ட அறிஞர்கள் பலர்—பெர்ட்ரன்ட் ரசல், தாமஸ் பெயின், ராபர்ட் கிரீன், இங்கர்சால் போன்றோர் வரலாற்று வரிகளில் இடம் பெற்றிருந்தாலும் அவர்களெல்லாம் அதனை-நாத்திக வாதத்தை—ஒரு தத்துவம் என்ற அளவில் ஆய்ந்து அரும் பெருங்கருத்துக்களை வெளியிட்ட அறிஞர்களேயன்றி;

அய்யா அவர்களைப் போல, 'கடவுளும் மதமும்' அவைகள் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு முற்றிலும் மாறாக மனித குல குலத்தை எப்படியெல்லாம் சிதைத்துச் சின்னா பின்னப் படுத்தி; ஒருவர் மீது ஒருவர் அன்பும் பாசமும் -ஏன் இரக்கங் கூடக் கொள்ள விடாது தடுத்துக் கொடுமைகள் புரிந்துள்ளன என்பதை உணர்ந்து;

அவைகளைஒழிக்காமல்மானிட சமத்துவம் என்பதோ, மனிதகுல ஒருமைப்பாடு என்பதோ, எல்லோரும் ஓரினம் என்று பேசுவதோ வெறும் 'கூப்பாடுகளேயாகும்' என்பதை விஞ்ஞானரீதியாகக் கொண்டு, அதற்கென



உழைத்தவர்களல்ல, ஆனால்; மனிதர்களிடையே காணும் பிரிவு, பேதம், மடமை, தாழ்வு மனப்பான்மை இவைகளை நீக்கிட ஓர் இயக்கம் கண்டு மிகமிகக் கடுமையாக உழைத்து;

ஆயிரமாயிரமாண்டுகளாக மிகவும் கொடுமையான முறையில் பேதங்கள் பின்பற்றப்பட்ட பூமியில் இன்று சமத்துவத்தை ஓரளவுக்கேனும், நிலைநாட்டியுள்ளார்கள் என்றால் அய்யா அவர்களது தொண்டின் வலிமையும்; அது மற்றவர்களது தொண்டிலிருந்து எத்தனை மாறுபட்டது மேம்பட்டது என்பதும் தெளிவாகப் புரியும்.

இன்று ஏடுகளிலும், சட்டத்தின் சிலபல பிரிவுகளிலும் மட்டுமே அத்தீமைகள் புகுந்திருக்கின்றதேயன்றி, துணிந்து எவரும் தங்களை அத்தீக் குணங்களுக்கு உரியவர்கள் என்று கூறிடும் நிலையில்லை என்பது வெள்ளிடைமலையன்றோ!

மனித சமுதாய மேம்பாட்டையே தமது முழு நேரத் தொண்டாகக் கொண்டு பாடுபட்டு வந்த பெரியார்கள் பலரும் ஆரம்ப காலங்களில் எப்படிப் பலரது எதிர்ப்புகளுக்கும், இழிமொழிகளுக்கும் இலக்கானார்களோ, அஃதே போன்று நமது அய்யா அவர்களும் ஆரம்ப காலத்தில் புரியாத மக்கள் பலரது பன்மை வசவுகளுக்கு இலக்காகியுள்ளார்கள்.

புரிந்து கொண்ட பிறகு புவிப் பெரியார்களை எப்படி நாடே போற்றியுள்ளதோ, அப்படியே இன்று அரசே நமது அய்யா அவர்கட்கு அஞ்சல்தலை வெளியிட்டு, ஆண்டு விழாக்களை எடுத்து, அவரது அறிவுரைகளைத் தொகுத்துக் கொடுத்துப் பெருமைப் படுத்தி வருகின்றது!

இதுகாறும் புவிப்போந்து புது நெறி புகட்டிய பெரியார்களுக்கும், மகான்களுக்கும், நமது பெரியார் அவர்களுக்கும் அடிப்படையிலேயே ஒரு பெரிய வேறுபாடு உள்ளது.

அஃதாவது,

அவர்களில் பலரும் தங்களை கடவுளின் அருள் பெற்றவர், ஆசி

பெற்றவர் அல்லது அவதார புருடர் என்று கூறியிருப்பதோடு, குறைந்த அளவு தங்கள் கருத்துக்களை, லட்சியங்களை, சிந்தனை முடிவுகளைத் தங்களுடையது என்று சொல்லிட அஞ்சி அவைகள் ஆண்டவனால் அருள்ப் பெற்றது என்றாவது கூறி வந்திருப்பது கண்கூடாகும்!

நமது அய்யா அவர்கள் மட்டுமே தனது கருத்துக்களை, சிந்தனை முடிவுகளைத் தன்னுடையது, 'ராமசாமி' என்ற ஒரு மனிதனது அனுபவத்தில், சிந்தனையில் உதித்தது' என்று அறுதியிட்டுக் கூறி, எதிர்ப்புகளுக்கு அஞ்சாது எந்த அவையிலும் எவருக்கும் விளக்கங்களைக் கொடுத்து வந்துள்ளார்கள்.

'பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சாதவர்'

என்ற வள்ளுவப் பெருந்தகை வாய்மொழியோடு ஒப்புநோக்கி எண்ணிப் பார்க்கும்போது;

அலெக்சாண்டர், நெப்போலியன், அசோகன், ராசராசன் போன்ற களம்பல கண்டு வெற்றிப் புகழ் பல சேர்த்திட்ட மாவீரர்களிலும் நமது பெரியார் அவர்களது மாட்சிமை பெரிதாகப்படுகின்றதன்றோ!

ஆம்!

பகைவர்கள் நிறைந்த போர்க்களத்திடையே அஞ்சாமல் சென்று சாகத் துணிந்தவர்கள் உலகில் பலருண்டு. ஆனால், பல்துறையும் ஆய்ந்த கற்றவர்கள் நிறைந்த அவைக்களத்தே சற்றும் அஞ்சாது பேசி அவர்களையும் தம் வயம் ஈர்க்கும் பாங்கு ஒரு சிலர்க்கு மட்டுமேயன்றோ உண்டு!

அஃது நம் தந்தை பெரியார் அவர்கட்கு நிரம்பவும் இருந்தமையாலன்றோ, அழகு தமிழ்ச் சொல்லாற்றலும், எழுத்தாற்றலும் கொண்டு அனைவர் இதயத்தும் குடிபுகுந்திட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களே 'தாம் கண்ட ஒரே தலைவர்— தனது ஒரே வழிகாட்டி-குருநாதர் தந்தை பெரியார் அவர்களே' என்று அறுதியிட்டுக் கூறினார்கள். தாம் அமைத்திட்ட அரசினையே பெரியார் அவர்கட்குப் பரிசிலாக அளித்திட்டேன் என்று பறையறிந்து புளகிதம் கொண்டார்கள்.

இதனிலிருந்து நாம் பெறுவது அய்யா அவர்களது அஞ்சாமை-எவர்க்கும் எதனுக்கும் அஞ்சாமை எத்தன்மையது ஆகுமென்பதேயாகும் !

ஆரம்ப காலத்தில் பேராயக் (காங்கிரசுக்) கட்சியில் இணைந்து அரும்பெருந்தொண்டுகள் செய்து உத்தமர் காந்தியடிகள் இதயங் கவர்ந்து இருந்தபோது;

இவண், மலிந்திருந்த வர்ண தர்ம முறையும், பிறவி இழிவுக் கொடுமைகளும் களைந்திட பேராயக் கட்சியில் வழியில்லை என்று கண்டு அதனின்று விலகி, சுயமரியாதை இயக்கம் கண்ட போது;

உத்தமர் காந்தியடிகளது அழைப்பின் பேரில் நமது அய்யா அவர்கள் கருநாடக மாநிலத்திலுள்ள நந்தி மலையில் சந்தித்து, தனது கருத்துக்களை மிகத் துல்லியமாக, துணிவாக (அடிகளார் 'மகாத்மா' எனும் விருதுக்குச் சொந்தக்காரர் - தேசத்தந்தை - விடுதலைப் போரின் தானைத் தலைவர் என்று சிறிதும் அஞ்சாது) எடுத்து வைத்து,

பிறவியில் மனிதர்களைப் பிரித்து - உயர்வும் தாழ்வும் கற்பிக்கும் - தீண்டாமையையும், உயர் தன்மையையும் போதிக்கும் எந்தத் 'தர்மமும்' தர்மமாகாது'; அத்தகைய 'அதர்மத்தை ஒழிப்பதே இனிமேல் எனது முழு நேரப்பணி என்று கூறிவிட்டு வந்தது, அவரது அஞ்சாமைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக வரலாற்றில் ஒளி விடுகின்றதன்றோ!

அதேபோன்று அவர்கள் புரட்சிகரமான பல போராட்டங்களைத் தாமே முன்னின்று நடத்தியிருந்தாலும், அரசு சட்டம்-அமைதி-ஒழுங்கு என்பவைகளுக்கு என்றுமே கட்டுப்பட்டு வந்துள்ளார்கள் என்பதற்கு அடியிற் கண்ட எடுத்துக்காட்டு தகுந்த சான்றாகுமென்று கருதுகின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களைத் தளபதியாகக் கொண்டு 1948-ஆம் ஆண்டு 'இந்தி எதிர்ப்புப்போர்' தமிழகத்தில் மீண்டும் துவக்கப்படுகின்றது; பல்லாயிரவர் சிறைக்களம் புகுகின்றனர்; குடந்தை நகரம் ரணகளமாகிறது; பெரியார் சிறை பிடிக்கப்படுகிறார்கள்; உடன் போராட்டம் உச்ச நிலையடைகிறது.

அதுபோது, பழைய ஹைதராபாத் சமஸ்தானத்தின் மீது இந்தியப் பேரரசு 'போலீசு' நடவடிக்கை எடுக்கிறது.

அய்யா அவர்கள் நிலையைச் சீர்தூக்கிப் பார்க்கின்றார்கள். தனது மொழி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தை விட, நாட்டின் ஒருமைப்பாடே முன்னிடம் பெறத்தக்கது என்ற முடிவுக்கு



வந்து சிறிதும் தயங்காது உடனடியாகத் தனது போராட்டத்தை நிறுத்திக் கொள்கின்றார்கள்.

களமாக இருந்தாலும் எதிர் அணியினர்க்கு ஓர் இடுக்கண் வரும்போது தாமும் பொருதுவது தமது பெருமைக்கு இழுக்கு எனும் மாவீரர்களது இலக்கணத்திற்கு நமது தந்தை பெரியார் அவர்கள் அன்று புதிய இலக்கியமே சமைத்துள்ளார்கள் என்பது உணரற்பாலது.

அதுபோலவே அவர்கள் நடத்தியுள்ள போராட்டங்கள் எதனிலும் பொதுச் சொத்துக்களுக்கோ, அரசினர் உடமைகளுக்கோ பொதுமக்களுக்கோ சிறுசேதமோ துன்பமோ விளையக்கூடாது என்பதில் மிகவும் கவனமும் கருத்தும் கொண்டு தொண்டர்களுக்கு பலவகைகளிலும் பயிற்சி கொடுத்து அரசினர்க்குப்போதிய அவகாசம் கொடுத்துப் பின்னரே போராட்டங்களைத் துவக்கி, தாமே முன்னின்று நடத்தியுள்ளார்கள் என்பது இன்றைய-ஏன் வருங்கால நல்ல அரசியல்வாதிகளுக்கெல்லாம் ஓர் பாடமாக, படிப்பினையாக என்றும் நின்று நிலவி வரும் என்பதில் சிறிதும் அய்யமில்லை !

இன்று பொதுவாழ்வு அல்லது தொண்டு என்பதே பதவிகளைக் குறியாகக் கொண்டு செயல்படுவது என்பது இலக்கணமாகிக் கொண்டு வருவதைப் பார்க்கும் போது; எத்தனை வசதிகள் வாழ்க்கைச் சுகங்களை நமது அய்யா அவர்கள் துறந்துவிட்டு பொதுத் தொண்டில் இறங்கினார்கள் என்பதை நினைக்கவே நெஞ்சம் நெக்குருகுகின்றது.

பதவிகள் பலவும் பின்னர் தேடித் தேடி வந்திட்டபோதும் அவைகளை ஏற்காது என்றுமே தன்னை ஒரு தொண்டனாகவே கருதிக் கொண்டு வாழ்வையே

போராட்டமாக்கிக் கொண்டு, தள்ளாமையைத் தள்ளி வைத்து விட்டு தொண்ணூற்றி அய்ந்தாவது பிராயத்திலும் எடுத்த பணியை முடிக்கும் தொண்டிலேயே இறுதியை அடைந்தார்கள் என்பதை வருங்கால இளைய சமுதாயம் எண்ணிப் பார்த்துப் பின்பற்றிட வேண்டுமென்பதே என் போன்ற பெரியார் தொண்டர்களது விழைவாகும்!

அய்யா அவர்களது வாழ்க்கை நெறி, காரியம் முடிக்கும் ஆற்றல், காலந்தாழ்த்தாத செயல்முறை, பழகிடும் பண்பு, எதிரி என்று எவரையும் கருதாமல் கருத்தில் மாறுபட்டவர் என்று மட்டுமே கொண்டு அவர்களிடமும் காட்டும் கனிவு, அனைவரும் நினைந்து வியக்கும் அடக்கம், ஓயாத சிந்தனை, தன்னை ஓர் மாணவனாகவே கருதிக் கொண்டு இறுதி வரை உருப்பெருக்கி ஆடியின் துணை கொண்டு புதிய புதிய நூல்களைக் கற்றிட்ட பாங்கு இவைகளில் ஒரு சிலபற்றியேனும் கூறுவதாயின் இக்கட்டுரை இம்மலரையே அடைத்து மேலும் நீண்டிடும்;


ஆகவே பொருளாதாரத்தில் அவர்கள் காட்டிய சிக்கனம் போல, யானும் எனது எழுத்துக்களைச் சுருக்கி—குருடன் யானையின் ஓர் பகுதியை மட்டுமே தடவிப் பார்த்து ஏதோ கூறியது போல—வருங்கால அறிஞர் பெருமக்களது எழுத்திலே வையம் புகழ 'ஒளிர' இருக்கும் நமது அய்யா அவர்களைப் பற்றி ஏதோ சில கூறியுள்ளேன்!

குறிப்பாக நமது அய்யா 'பெரியார்' அவர்கள் எளிமை-இனிமை-வீரம்-விவேகம்-துணிவு-அடக்கம்-ஆற்றல்- அத்தனைக்கும் மேலாக அறிவு என்பதன் உள்ளடக்கம் ஆவார்கள் என்று மட்டும் கூறிட விரும்புகிறேன்.

அவர் புகழ் ஓங்கிட, இலட்சியங்கள் வென்றிட, இன்றைய தமிழக அரசு குறிப்பாக நமது முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் எடுத்து வரும்ஆக்கபூர்வமான பணிகளுக்கு திராவிட மக்கள் - ஒடுக்கப்பட்ட பிறவியில் தாழ்த்தப்பட்ட, பலதுறைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் மட்டுமல்லாது நல்ல அறிஞர் பெருமக்களும் தங்களைப் பாகுபடுத்திக் கொள்ளாது பக்குவப்படுத்திக் கொண்டு நல்லாதரவு நல்குவதே அய்யா அவர்களது நூற்றி இரண்டாம் ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு நாம் சேர்க்கும் பெருமையாகும்—அவர்களும் தங்கள் நல்லாதரவினை நல்குவார்கள் என நம்புகிறேன்.

# வரலாற்று நாயகன்

தத்துவ மேதை
டி.கே. சீனிவாசன்



வரலாறு என்பது காலம் உருவாக்கிய கல்லறைகளின் பட்டியல் அல்ல. இருந்து மறைந்த சமுதாயத்துக்கு ஏற்பட்ட வாழ்வையும், தாழ்வையும், வளர்ச்சியையும், தளர்ச்சியையும், மாற்றத்தையும், தேக்கத்தையும் எதிர்காலத்துக்கு உணர்த்தும் கலங்கரை விளக்கந்தான் அது!

கோயில்கள், கோபுரங்கள், கோட்டைகள், கோட்டங்கள், கொத்தளங்கள், சிலைகள், சித்திரங்கள், சிற்பங்கள் இவையெல்லாம் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் நினைவுச் சின்னங்கள் மட்டுமல்ல அவற்றை நிகழ்த்தியவர்களை உணர்த்துபவைகூட!

எட்டாவது ஹென்றி எட்டு மனைவிகளைத் திருமணம் செய்துகொண்டது வரலாறு அல்ல, அதன் காரணமாக, கத்தோலிக்க நாடாக இருந்த இங்கிலாந்து நாடு பிராட்டஸ்டண்ட் நாடாக மாறியதே, அதுதான் வரலாறு. பிரஞ்சுப் புரட்சிவெறும் நிகழ்ச்சிதானே தவிர வேறல்ல—ரஷ்யப் புரட்சிதான் வரலாறு.

வாயால் கத்துபவர்கள் எல்லாம் வரலாறு படைப்பவர்கள் ஆகமாட்டார்கள்; சமுதாயத்தின் வாழ்வை மாற்றி அமைப்பவர்கள்தாம், வரலாற்று நாயகர்கள் ஆகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அப்படிப்பட்டவர்களில் ஒருவர்!

மொழியாலும் பண்பாலும் முற்றுகையிட்டு முறியடிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களை அவர்களாக இருக்கச்செய்தவர் பேரறிஞர் அண்ணா!

தமிழகம் தன் இதயத்தில் வைத்து வளர்த்து வாழ அனுமதிக்கும் ஒரு நிலைக்கு உருவாக்கிட அவர் உழைத்தார்.

வாழ்ந்த காலத்துக்கும், வீழ்ந்த காலத்துக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடுகளைத் தமிழினத்துக்கு விளக்கியவர் அவர்.

தமிழ் மொழியும் தமிழக வரலாறும் ஒரு சில புலவர்களின் மூலதனமாகி அவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்தது. அவற்றைப் பாமரர் இடையில் பரப்பினார்; பட்டி தொட்டிகளில் எல்லாம் முழங்கினார்.

எழுத்தறிவற்றவர்கள் கூட அவர் பேச்சுக்களைக் கேட்டு இலக்கிய உணர்வு பெற்றனர். அந்த உணர்வின் விளைவுதான் தமிழ்மொழி காக்கத் தங்களைத் தாங்களே இரு இளைஞர்கள் எரித்துக்கொண்டது.

தமிழர் சமுதாயம் இடைக்காலக் கருத்துக்களிலே தன்னை இழந்திருந்தது. ஜாதி வேறுபாடுகளும், சமய வேறுபாடுகளும், அர்த்தமற்ற நம்பிக்கைகளும், அறிவுக்குப் பொருந்தாத சம்பிரதாயங்களும் இவற்றின் விளைவாக ஏற்பட்டவைதாம்.

இடைக்காலக் கருத்துக்களில் தன்னை இழந்திருந்ததால் தம்மை மறந்தனர் தமிழர் - வரலாற்றில் வாழாது மறைந்தனர், அந்தச் சமுதாயத்தை அதிலிருந்து மீட்டு சங்ககாலக் கருத்துக்களுக்கு அழைத்துச் சென்றார்.

ஒரு காலத்தின் பிடிப்பிலிருந்து ஒரு சமுதாயத்தை விடுவிப்பது கடினமான ஒரு செயல்; அந்தக் காலத்துக்கும் முற்பட்ட காலத்துக்கு அதை இழுத்துச்செல்வது அதைவிடக் கடினம்.



அண்ணாவின் ஏடுகளைப்படித்தவர்கள் வாசகர்களாக மட்டும் இல்லை- சிந்திக்கும் திறம் பெற்றார்கள் - செயல் வீரர்களானார்கள் - சமுதாயம் வளரத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டார்கள்.

நமஸ்காரம் வணக்கமானது; க்ஷேமம் நலமானது; விவாஹ முகூர்த்தப் பத்திரிகை, திருமணத் திருமுகம் ஆனது; அக்கிராசனாதிபதி, தலைவர் ஆனார்.

சென்னை மாநிலம் அவர் காலத்தில்தான் தமிழ்நாடாக ஆனது.

இடைத்தரகர்கள் இல்லாமல் நடக்கும் திருமணங்களைச் சமுதாயத்தோடு இணைத்து சட்டமும் ஏற்றுக்கொள்ளச் செய்தவர் அவர்தான்.

தமிழ்மொழி எழுத்தாளர்களைப் பெற்றிருக்கிறது - கவிஞர்களை உருவாக்கி இருக்கிறது. சிந்தனையாளர்களைப் படைத்திருக்கிறது - கலைவாணர்களையும், இசைவாணர்களையும் நாட்டுக்குத் தந்திருக்கிறது.

அதன் வரலாற்றிலேயே ஓரே ஒருவரைத்தான் தமிழ் மொழி தலைவராக்கிற்று.

அவர்தான் பேரறிஞர் அண்ணா.!

'பழைய கதைகள்' என்று கூறி அவரைப் பழித்தனர் பலர்; அவை வேறொன்றுமல்ல; நாம் இருந்த நிலைகள்- இழந்த பண்புகள்', என்ற விடையால் அவர்கள் வாயையடைத்தார்.

''நாம் வளர்ந்த பிறகு இவையெல்லாம் தேவைதானா?''— இப்படிக் கேட்டனர் சிலர்.

''வசதிகளும் வளமைகளும் மட்டும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியாகிவிடாது''. இந்த விளக்கத்தால் அந்த வினாவை விரட்டியடித்தார்.

## நாம் உருவாக்குவோம்


''தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ்மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல. எங்களுக்கும் அதுதான் மொழி. அதுதான் இணைப்பு மொழி, அதுதான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும் !

அந்தக் காலம் அவசர நடையால் வருவதல்ல ! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல !

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும் வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ள வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் முறையிலும் தமிழ் நெறியிலும், காலம் - இடம் - வகை- பொருள் அறிந்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ்மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக் கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்.''

—பேரறிஞர் அண்ணா






# தலைவர்களுடன்

## பேரறிஞர் அண்ணா





யேல் பல்கலைக் கழகத்தில்




தந்தை பெரியார் அவர்களுடன்




முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களுடன்



பிரதமர் இந்திராகாந்தி,
பெருந்தலைவர் காமராசர் ஆகியோருடன்



மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன்



நம்பூதிரிபாட் அவர்களுடன்



உலக வங்கித் தலைவர் மக்னமாரா அவர்களுடன்




போப் பால் VI அவர்களுடன்

# பேரறிஞர் அண்ணாவின்



இரவு மதுரமாயிருந்த பால் காலையிலே திரிந்து விட்டால், சாக்கடைச் சேறாகிறது. மாலையிலே, மாளிகைகளிலே மனோகரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர், காலையிலே, கசங்கியதும் வீசி எறியப்படுகிறது ..........குப்பையிலே! பொருட்கள் மட்டுமல்ல, எண்ணங்கள் ஏற்பாடுகள் முறைகள் நீதிகள் எனும் எவையும் அப்படித்தான். காலத்துக்கு ஏற்றதாக - நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.



சங்கீதம் என்ன சார் பிரமாதம்? சாரீரம் கொஞ்சம் நன்றாக இருக்க வேண்டும்! சுருதியுடன் சேர்ந்து பாட வேண்டும். தாளம் தவறக் கூடாது! இவ்வளவு தானே..!' என்று சொல்வதுண்டு. பாட ஆரம்பிக்கும் போதுதானே தெரிகிறது, சாரீரம் வித்துவானுடன் ஒத்துழைக்க மறுப்பதும் சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும்! அதுபோலத்தான் சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம். சாதிப்பது கடினம்.



கனியும் அழுகுவது காண்கிறோம் அந்த அழுகிய பழத்திலே பிறகு புழுநெளியவும் காண்கிறோம். 'மதுரம் தரும் பழமாயிற்றே, மாங்கனியாயிற்றே. நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே நெளிவது புழுவாக இருக்க முடியாது; பழத்திலே சுவை இருக்கும்: புழு எப்படி இருக்க முடியும்?' என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல, மலர் கசங்கி மணத்தை இழந்து, பிறகு கெட்டவாடை கொள்ளுவது போல, தழை சருகு ஆவது போல, பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் சாவச் சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும், இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.



தமிழ்மீது, நாம் பற்று வைப்பது, இயற்கை நியதியாகும். ஆனால் அதற்கு மேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற வேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது.



ஆப்பிரிக்க நாட்டில் ஏராளமான தங்கம் கிடைத்துக் கொண்டிருந்தது. இப்போதும் கிடைத்து வருகிறது. ஆனால், அந்தத் தங்கம் விளையும் நிலத்தை, ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரிடம் குறைந்த விலைக்கு விற்றார்கள்.

இன்று அந்தத் தங்கத்தை ஆப்பிரிக்காவில் உள்ளவர்கள் வாங்குவதில்லை- அது எங்கோ செல்கிறது. காரணம், தங்கம் வாங்குகிற அளவுக்கு ஆப்பிரிக்க மக்கள், பொருளாதார வசதி பெற்றிருக்கவில்லை.

அவர்கள் தங்கத்தின் மீது தான் நடக்கிறார்கள். ஆனால் தரித்திரத்தோடு நடக்கிறார்கள்.

ஆகவே, நமது மக்களுடைய பொருளாதாரம் முதலில் பலப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு வருவாய் இருந்தால்தான், வியாபாரம் நடக்கும், வியாபாரம் நடந்தால் தான் லாபம்; பிறகுதான் லாப விகிதம் ஐந்தா, ஆறா என்பதெல்லாம்.



நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம் - படிப்பவன் வேலை செய்ய மாட்டான். வேலை செய்பவன் படிக்கமாட்டான். ஆனால் இந்த நிலை மெள்ள மெள்ள மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடுகூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்பமாட்டார்கள். ''நாம்கேட்டால்கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள் ?'' என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்.''



நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும்.

தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட, பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். ''எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்'' என்று உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி.



எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில்தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, தீது இது, நமதிது, பிறர் தந்ததிது, மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து கொண்டு மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அடிப்படை எழுந்தபடி இருந்திட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா



# சிந்தனைகள்

# பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்



## ஒரு வேண்டுகோள்

காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லததை அரசுடைமையாக்கி 'பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்' எனப் போற்றிப் பாதுகாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இந்த இல்லத்தில் அண்ணாவின் பெருவாழ்வை நினைவுகூறும் வகையில் அவரது வாழ்க்கை பற்றிய முக்கிய புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள், அவர் எழுதிய நூல்கள் மற்றும் அரிய பொருட்கள் இடம் பெறும்.

எனவே அண்ணாவின் குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம், கல்லூரி நாட்கள், அரசியல் வாழ்வின் துவக்க காலம் ஆகியவற்றின்போதும், மற்றும் பல்வேறு அரசியல் சமுதாயத் தலைவர்களுடனும் எடுக்கப்பட்ட அரிய புகைப் படங்கள் அல்லது நெகடிவ்கள், அவரது கையெழுத்துப்பிரதிகள், அவர் எழுதிய நூல்களின் பிரதிகள், பயன் படுத்திய அரிய பொருட்கள் ஆகியவற்றை வைத்திருப் பவர்கள் உடனடியாக கீழ்கண்ட முகவரிக்கு அவற்றை அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600 009.

D.I.P.R.



# தமிழ்த்தென்றல் திரு.வி.க

—புலவர்
புனிதவதி நமசிவாயம்,

தமிழகத்தில் அரசியல் கருத்துக்களை அழகிய தமிழில் எழுத முடியும், பேசமுடியும எனத் ''தேசபக்தன்'' இதழின் வாயிலாகத் தமிழகத்திற்கு எடுத்துக் காட்டியவர் தமிழ் முனிவர் திரு. வி.க. அவர்கள். தமிழ்த் தென்றல், இராயப்பேட்டை முனிவர்; தேசபக்தன் முதலியார்;என்றெல்லாம் தமிழர்கள் செல்லமாக அழைத்தார்கள் இவர்களை.

இந்தியா அன்னிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்ற திங்கள் ஆகஸ்ட் திங்கள். இச்சிறப்புமிக்க ஆகஸ்ட் 26.1883-ல் திரு. வி.க. தம் தாய் தந்தையர்க்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். வறுமைச் சூழலில் வாணிபம் செய்யத் திருவாரூரிலிருந்து சென்னைக்கு அருகே உள்ள துள்ளம் எனும் கிராமத்திற்குக் குடியேறினர், பெற்றோர். அங்குதான் திரு.வி.க. பிறந்தார். துள்ளத்தில் பிறந்தவராயினும் முன்னோர் பிறந்த ஊரின் பெயரையே தம் பெயர் முன் இட்டு மகிழ்வார். திருவாளர் திருவாரூர் வி. கலியாணசுந்தரம் என்றே தம் நூற்களில் குறிப்பார்.

இவரின் தாயின் பெயர் சின்னம்மாள், தந்தையின் பெயர் விருத்தாசலனார். திரு.வி.க. வின் வளர்ச்சி, வாழ்க்கை பல விதமான சோதனைக்கு இலக்காகியது. முதலில் வறுமைச் சூழலில் நிலவியது. தந்தையின் தளராத உழைப்பால் வாழ்க்கை நடைபோட்டது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்காகத் திரு.வி.க வின் குடும்பம் சென்னை இராயப் பேட்டையை நாடியது. அரிசி மண்டி வைத்து வாழ்ந்தனர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் மெட்ரிகுலேஷன் வரை பயின்றார். அப்பள்ளியில் தமிழ் ஆசிரியராய் விளங்கிய யாழ்ப்பாணம் ந. கதிரைவேற் பிள்ளை தொடர்பு ஏற்பட்டது. கதிரைவேற்பிள்ளை வழக்கு ஒன்றில் சான்று கூறச் சென்றதால் திரு.வி.க.வின் தேர்வு தடைப் பட்டது.

திரு.வி.க. அவர்கள் ந. கதிரைவேற்பிள்ளை அவர்களிடம் சில தமிழ் நூல்கள் பாடங்கேட்டார், மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர், திருக்குறள் சிதம்பர முதலியார், மறைமலையடிகளார் முதலியவர்களிடம் தமிழ் நூல்கள் பயின்றார். மற்றும் இவர் கடலங்குடி நடேச சாஸ்திரியார், பாம்பன் சுவாமிகள், அயோத்திய தாஸ் பண்டிதர், சக்ரவர்த்தி நாயனார், அப்துல் கரீம், ச.சச்சிதானந்தம் பிள்ளை ஆகியோர் தொடர்பால் பல்கலைச் செல்வரானார்.

இவர் ஸ்பென்ஸர் அண்டு கம்பெனியில் சிறிது காலம் பணி செய்தார். பின்னர் தாம் பயின்ற வெஸ்லி கல்லூரியிலேயே தமிழ் ஆசிரியராய் அமர்ந்தார். சிறந்த ஆசிரியராகப் புகழ் பெற்றார். இவரது அடிமனம், தேசப்பற்று, தேச சேவையில் ஈடுபட்டது. காரணம் பள்ளிப் படிப்பு நின்றதும் இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் திருவல்லிக்கேணி சிவனடியார் திருக்கூட்டத்திலும் சேர்ந்து தொண்டு செய்தார். அதுவல்லாது ஜஸ்டிஸ் சதாசிவ ஐயரிடமும் அன்னிபெசன்ட் அம்மையாரிடமும், எஸ். சீனிவாச அய்யங்காரிடமும் நெருங்கிப் பழகிப் பல பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டார்.

பொதுத் தொண்டு, தேசபக்தி காரணமாகத் தமிழ் ஆசிரியர் பதவியினின்றும் விலகினார். உடன் ''தேசபக்தன்'' இதழின் ஆசிரியராய் அமர்ந்தார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் ''நவசக்தி'' எனும் இதழினைத் தோற்றுவித்தார். இவ்விதழ்களில் அரசியல் கருத்துக்களைத் தமிழில் நன்கு விளக்க முடியும் என்ற நிலையில் சிறந்த முறையில் நடத்தினார். அதில் அரசியல் அறிவோடு கலைச் செல்வத்தையும் வழங்க முற்பட்டார். சிறப்பு மிக்க தலையங்கங்கள் எழுவதில் மிக வல்லவர். இவர்களது தலையங்கத்தை மட்டும் படிப்பதற்கென்றே நவசக்தி இதழினைத் தவறாது படித்தவர்கள் பலர். நவசக்தி இதழ சிறப்பாக வெளிவந்ததற்கு மூல காரணம் இவரது சகோதரர் திரு.வி. உலகநாத முதலியார் அவர்கள் ''சாது அச்சுக்கூடம்'' என்ற சிறந்த சிறிய அச்சகம் ஒன்றை நடத்திவந்ததே.

இவர் கமலாம்பிகை எனும் அம்மையாரை 1912ல் மணந்து ஆறு ஆண்டுகள் குடும்ப வாழ்கை நடத்தினார். ஆண்குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பிறந்து மறைந்தன. துணைவியாரும் மறைந்தார். மறுமணம் செய்துகொள்ளவில்லை.

என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நெறியில் இடைவிடாது தமிழ்த் தொண்டு, சமூகத் தொண்டு, அரசியல்தொண்டு தொழிலாளர் தொண்டு, சமயத் தொண்டு எனப் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியது.

திரு.வி.க. அவர்களின் தேசியம் இறைவழி நிற்கும் அரசியல் வாழ்வு. மகாத்மாவின் அரசியல் வாழ்வும் ஒத்துழையாமை இயக்கமும் சமய வாழ்வின் அடிப்படையில் மலர்ச்சி பெற்றிருந்தது. ஆகவேதான் திரு.வி.க. விற்கு மகாத்மாவின் நெறியில் கவர்ச்சி ஏற்பட்டு மகாத்மாவை அடிகளாக்கி ''காந்தி அடிகளும் மனித

**தமிழ் வளர்த்த பெரியார்கள் :**

வாழ்க்கையும்'' என்னும் நூலை இயற்றினார்.

திரு வி.க. தொழிலாளர் நலனுக்காகவும் அரும்பாடுபட்டார். காரல் மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை அறம் இவரைக் கவர்ந்தது. முதலாளி - தொழிலாளி வேற்றுமையைக் களைய முற்பட்டார். திரு.வாடியா எனும் அறிஞரின் உதவியால் 1918-ல் இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கமாகிய ''சென்னைத் தொழிலாளர் சங்கத்தைத்'' தோற்றுவித்தார். அதன் வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் செய்தார். தொழிலாளர் நற்பணியில் தீவிரமாக உழைத்த திரு.வி.க.வை ஒரு சமயம் ஆங்கில அரசு நாடு கடத்தவும் திட்டமிட்டது. இதனைச் சர் தியாகராயர் தடுத்து நிறுத்தினார் என்பது நினைவு கூரத்தக்கது.

மகளிர் சமுதாயம் சிறந்து விளங்க இவர் புரிந்த தொண்டுகள் ஒப்பற்றவை. பெண் பிறவியே உயர்ந்தது என்றும் விழுமிய பண்புடையது எனவும் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தார். மகளிர் சமூகநல அமைப்புகளுக்கு ஆதரவு நல்கினார். இல்லற நெறியே சிறந்த நெறி எனப் போற்றினார். போலித் துறவினைச் சாடினார். தீண்டாமை ஒழிப்பிலும் சாதிவேற்றுமை நீக்கத்திலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். இவைகளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழகம் முழுவதிலும் பரவச் செய்தார்.

தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக இந்திமொழி நுழைந்தபோது அதனைத் திரு.வி.க. எதிர்த்தார். இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தந்தை பெரியார் அவர்களின் சிறப்பியல்புகளை ''நவசக்தி'' இதழில் தலையங்கமாகத் தீட்டி ''சிறையில் கிழச் சிங்கம்'' என்ற தலைப்பிட்டார். அரசு இத்தலையங்கத்துக்குப் பணிந்தது.

இளைஞர்களை ஊக்குவித்து அறவழி கூறி அவர்களை இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கச் செய்ய இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பல. இளைஞர் முன்னேற்ற அமைப்புகள் பலவற்றில் ஈடுபட்டிருந்தார்.

திரு.வி.க. அவர்கள் எத்துறையில் ஈடுபட்டுத் தொண்டு செய்தபோதிலும் அன்பு, எளிமை, தூய்மை, பொதுமை ஆகிய நெறிகளே அவருடைய வாழ்வில் முகிழ்த்தன. இவருடைய நடை, உடை, பழக்கம் தமிழகம் எங்கணும் உள்ள இளைஞர்களையும் தொழிலாளர்களையும் கவர்ந்தன. தூய்மையான இவரது



ஊர்ந்து செல்லும் ஆமையைக்கூட, பாய்ந்து செல்லும் புரவிகள் பூட்டிய வண்டியில் வைத்தால், போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு விரைவாகவும் எளிதாகவும் போய்ச் சேரும். இங்குநாம் ஆமைகள் பூட்டிய அலங்கார வண்டியில், பாய்ந்தோடவல்ல குதிரையை ஏற்றி வைத்து, ஒரு விந்தைப் பயணம் நடத்திப் பார்க்கிறோம். கனி பறித்துச் சாறு எடுத்துப் பருகிடுவோர் உண்டு; முறை, தேவை; இங்கு நாமோ, கனி எடுத்துச் சாறு பிழிந்து, அந்தச் சாற்றினைக் காய்கள் மேல் பெய்து தின்று பார்க்கிறோம்.

—பேரறிஞர் அண்ணா

உள்ளத்தை அளந்து கூற இயலாது. இவர் உள்ளத்தின் பொதுமை காலம், இடம் நிறம், சாதி, சமயம், கட்சிக் கருத்து முதலிய பல வேறுபாடுகளைக் கடந்து பலரிடத்தும் அன்பு செலுத்தும் ஆன்மநேயம் ஒருமைப்பாடு உடையது. இயற்கைக் காட்சியில் அதிக ஈடுபாடு. இவர்தம் தமிழ் எழுத்து நடை இவருக்கே உரிய கவிதை நடையாய் விளங்கும். சொற்களில் இனிமை தவழும். மேடைப் பேச்சிலும் கேட்போர் உள்ளத்தைக் கவரச் செய்தார். அரசியல், சமயம், இலக்கியம், சீர்திருத்தம் முதலிய பல துறைகளிலும நூல்கள் செய்துள்ளார். இவரெழுதிய கவிதை நூல்கள் பதினைந்திற்கும் மேற்பட்டது.

பெரிய புராணத்துக்கும் காரைக்கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை, திருக்குறள் பாயிரப் பகுதிக்கு விளக்கவுரை இயற்றியுள்ளார் இவர்.

சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து; தமிழ்த் தென்றல், தமிழ்ச்சோலை; முடியா-காதலா சீர்திருத்தமா; இந்தியாவும் விடுதலையும், என்ற நூல்களும்...

முருகன் அல்லது அழகு; மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை; உள்ளொளி; பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி முதலிய அன்னாரின் நூல்கள் மிகச் சிறந்தவை. இப்படிப பல நூல்கல்.

உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்; முருகன் அருள் வேட்டல், திருமால் அருள்வேட்டல், பொதுமைவேட்டல்; புதுமை வேட்டல், கிறித்துவின் அருள் வேட்டல்; கிறிஸ்து மொழிக் குறள், இருளில்ஒளி; முதுமை உளறல்; முதலியன இவரது கவிதை நூல்கள்.

தமிழ்மொழி, தமிழர் வாழ்வு நெறி மலர்ந்து செழிக்கப்பல அறிஞர்கள் ஒத்துழைப்போடு ''சென்னைத் தமிழ்ச் சங்கம்'' என்ற அமைப்பினைக் கண்டார். அதன் வாயிலாகப் பல்வேறு ஆக்கப்பணிகள் செய்வித்தார். சுமார் 40 ஆண்டுக்காலம் தமிழ்நாடு எங்கணும் சென்று தொண்டாற்றினார். இவரைச் சிலர் பௌத்தர் எனவும் சிலர் சமணர் எனவும், சிலர் கிறிஸ்துவர் எனவும், சிலர் வேதாந்தி எனவும் கூறுவர். ஆனால் இவரது நெறி சமரச சுத்த சன்மார்க்க நெறியின்பால் பட்டது. ஓயாது உழைத்த இவர் தம் வாழ்நாள் முடிவில் இரண்டு ஆண்டுகள் கண் ஒளி மங்கித் துன்பப்பட்டார். மருத்துவம் செய்துகொள்ள மறுத்தார். 17.9.1953ல் இயற்கை எய்தினார்.

தமிழ் மூச்சையே நுகர்ந்த இவர் தமிழ்த்தாய் நம்மை நோக்கிச் சொல்வதாக யாத்த கீழ்க்கண்ட பாடல் சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்து விளங்கிறது:

''வடிவினிலே பெரியார்யான்;
வயதினிலே பெரியார்;
வளத்தினிலும் வண்மையிலும்
மக்களிலும் பெரியார்;
கடியரணில் மலையரணில்
கடலரணில் பெரியார்;
காலினிலே தளைவந்த
காரணத்தா னென்ன?
படியினிலே இல்லாத
பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை,
பாவையர்தம் அடிமை
கொடிஇவை குடிகொண்டு
கொடிகொடியாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பன்பைக்
குலைத்ததென்றன் வாழ்வே.''

''நாட்டுப்பாடல்''—பாடல் 9

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகஸ்ட் 30ஆம் நாளில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் நினைவுநாளை சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்பாகக் கொண்டாடியது.

கவி அரங்கம் - கருத்தரங்கம், வில்லுப்பாட்டு எனப் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாகக் கலைவாணரின் பெருமையும் திறமையும் எடுத்துக் கூறப்பட்டன.

காலையில் கவியரங்கம், சிவலிங்கம் குழுவினரின் நாதசுர இசையுடன் தொடக்கம் ஆகியது. கவியரங்கத்திற்கு வருகை புரிந்திருந்த அனைவரையும் இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார் தமது உரையில் நடிகர் எந்த அளவுக்கு வள்ளலாக விளங்க முடியும் என்பதையும் நிரூபித்தார்.

''காந்தியடிகளிடம் அவருக்கு ஈடுபாடு உண்டு; 1949ல் தமது சொந்த ஊரான நாகர்கோவிலில் தமது சொந்தச் செலவில் (50 ஆயிரம் ரூபாய்) நினைவுத் தூண் ஒன்றை எழுப்பி, அதில் காந்தியடிகளின் கருத்துக்களைப் பொறித்து வைத்தார். நினைவு தெரிந்த நாள் முதல், கதரைத் தவிர வேறொரு ஆடையை அவர் அணிந்ததில்லை.

பின்னர் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் ''கலைவாணரின் கருத்துப் புரட்சி''என்னும் பொருளில் கவியரங்கம் நடைபெற்றது. தலைவரின் தலைமையுரைக் கவிதைக்குப் பின்னர், கவிஞர் திருமதி பொன்மணி வைரமுத்து, கவிஞர் திரு. முத்துலிங்கம், கவிஞர் திரு அறிவுமதி, கவிஞர் திரு பொன்னடியான், கவிஞர் திரு இளந்தேவன் ஆகியோர் தமது கவிதைகளை அரங்கில் முழங்கி, கலைவாணரின் பெருமைக்கும் பேராற்றலுக்கும் கவிமலை சூட்டினார்கள்.



# கலைவாணர் நினைவுநாள் விழா

நிகழ்ச்சித் தொகுப்பு
**தமிழ்ப்பித்தன்**

(கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்)

கவி அரங்கைத் தொடக்கி வைத்த கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலைவாணர் இல்லை என்றால் கலையுலகத்தில் கருத்துப் புரட்சிக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும். அவர் கருத்துப் புரட்சியைக் கலை உலகத்தில் செய்தார் என்பது மட்டுமல்ல - ஒரு நடிகர் எந்த அளவுக்கு வள்ளலாக விளங்க முடியும் என்பதையும் நிரூபித்தார்.

பின்னர், செயலாளர் திரு.டி.வி. நாராயணசாமி அவர்களது நன்றி யுரைக்குப் பின்னர் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 5.30 மணியளவில், கருத்தரங்கம் துவங்கியது. முதலில் குலதெய்வம் ராஜகோபால் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

கலைவாணரின் வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறந்த முறையிலே கலைவாணரின் பாணியிலேயே எடுத்துச்சொல்லி அனைவரின் பாராட்டையும் அவர் பெற்றார்.

கருத்தரங்குக்கு வந்திருந்த அனைவரையும் இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''மனித சமுதாயத்தினரைப் பகுத்தறிவுவாதிகளாக ஆக்குவதற்கு-அரிய கருத்துக்களை அஞ்சாது எடுத்துரைத்தவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.''

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் கருத்தரங்கைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

''கலைவாணர் ,மறைந்து பல்லாண்டுகளுக்குப் பின்னரும் நமது நினைவில் இருக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவர் செய்த பெரும்புரட்சிதான்! நடிப்புத் துறையில் அவர் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றார்.

''கலைஞர்கள் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காகக் காலமெல்லாம் பாடுபட்டார் அவர். கலைஞர்களின் பெருமையை அவர் உயர்த்தினார். கலைஞர்களால் எதையும் செய்து காட்ட முடியும் என்று நிரூபித்தார். முழு மனிதராக -வழிகாட்டியாக வாழ்ந்தார்''.

அடுத்துப் பேசிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி.ஹண்டே அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''திரைப்படங்களைப் பார்ப்பது பொழுது போக்குவதற்காக என்றிருந்த நிலைமையை மாற்றி கருத்தைச் சொல்வதற்காக என்ற நிலையை உருவாக்கினார் கலைவாணர். உலகில் எந்த நாட்டிலும் இன்றுவரை திரைப்படங்கள் கருத்தைச் சொல்வதற்காகப் பயன்படுத்தப்படவில்லை கலைவாணர் பயன்படுத்தியதுபோல!

அடுத்துப் பேசிய அரசுக் கவிஞர் திரு. கண்ணதாசன் குறிப்பிட்டார்:

''கலைவாணர், சுயமரியாதைக் கருத்துக்களைத் திரைப்படங்களில் எடுத்துக் கூறினார். எல்லாருடனும் இனிமையாகப் பழகுவார். அவருடன் பழகுவதே சுகமான அனுபவம் ஆகும். பிறருக்குப் பணத்தை அள்ளிக்கொடுப்பது அவரது சுபாவமாக இருந்தது. எதற்கும் கவலைப்படாதவர் அவர். எதையும் சமாளிப்பது அவரது திறமை. Take it easy என்பது அவரது பழக்கம்''.

அடுத்துப் பேசிய தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் 'மேஜர்' சுந்தரராஜன் குறிப்பிட்டார்:

''கலைவாணர் மறைவு எய்திய பின்னரும் கூட, நடிகர் சமுதாயத்திற்குப் பல்வேறு வடிவில் உதவி செய்து வருகிறார்.

''கலைவாணரின் நினைவு நாளிலாவது நடிகர்கள் எல்லாரும் கட்சி வேறுபாடின்றி-ஒற்றுமையாக இருக்க வேண்டும்''.

அடுத்து உரையாற்றிய திரு. வெ. நாராயணன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலைவாணரின் வளர்ச்சிக்குக் காரணம் அவரது உள்ளம் தான். வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு'' என்னும் குறளுக்கு வடிவமாகத் திகழ்ந்தவர் கலைவாணர்.

''எங்கே திறமை இருந்தாலும், அதைக் கண்டு பாராட்டி, சிறப்புச் செய்து, இந்த உலகுக்கு அறிமுகம் செய்து வைப்பவர் கலைவாணர்.''

அடுத்துப் பேசிய மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்:

''கலைஞர்களுக்கு இருந்த இழி நிலையைப் போக்குவதற்காகக் கலைவாணர் வாய்திறந்த பிறகு தான்-கலைஞர்கள் மக்களால் மதிக்கப்படும் நிலை உருவாகியது.

'' சிறந்த சிந்தனையாளர் அவர்; பள்ளியில் பயிலாமல்-கல்லூரிக்குச் செல்லாமல்-பல்கலைக் கழகத்திற்குச் செல்லாமல் சிந்தனையாளர், ஆகியவர் அவர். பலரைச் சிந்திக்கவும் வைத்தவர் அவர்.



குலதெய்வம் ராஜகோபால் வில்லுப்பாட்டு

''அவர் பேசிய பேச்சுக்கள்-பாடிய பாடல்கள் - கதாகாலட்சேபங்கள்-திரைப்பட வசனங்கள் ஆகிய எல்லாம் விருப்பு வெறுப்பின்றித் தொகுக்கப்பெற்று, நூல்களாக வெளியிடப்படவேண்டும்; அவ்வாறு செய்தால் அவை தமிழுக்குக் கிடைத்த கருவூலமாகத் திகழும்; அவரைக் குறித்து ஆராய்ச்சி செய்து பட்டம் பெற எண்ணும் ஆய்வு மாணவர்களுக்கும் அவை ஆதாரமாக இருக்கக் கூடும். அவற்றின் உதவியால் நமது தமிழகம் இன்னொரு கலைவாணரைப் பெறக்கூடும்''.

பின்னர், கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

''இந்தியாவிலேயே ஒரு நடிகருக்கு நினைவு நாளை அரசு கொண்டாடும் நிகழ்ச்சி தமிழ் நாட்டில்தான் நடைபெற்று வருகிறது.

''சிலர் படித்துப் பெரிய மனிதர்களாகியிருக்கிறார்கள். சிலர் படைத்துப் பெரிய மனிதர்களாகியிருக்கிறார்கள். அந்த வகையில் சரித்திரம் படைத்துச் சரித்திர நாயகராகியிருக்கிறார் கலைவாணர்.


''நகைச்சுவை - கலைவாணர் காலத்திற்கு முன்னேயும் இருந்தது. ஆனால், அது தாழ்ந்த நிலையில் இருந்தது. நாடகத்தில் அது ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தது; கேலிக்குரியதாக இருந்தது. நகைச்சுவைப் பாத்திரத்திற்கு பபூன் என்றும் கோமாளி என்றும் பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பாத்திரத்தைக் கதாநாயகனுக்கு இணையான பாத்திரமாக-சில நேரங்களில் மிகையான பாத்திரமாக் உருவாக்கிக் காண்பித்தவர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன். தாழ்ந்து கிடந்த பாத்திரத்தை உயர்த்தி, தானும் உயர்ந்தவர்

''அவரது கருத்துக்களில் பகுத்தறிவுச் சிந்தனை ஒளி வீசியது. அதைக் கேட்டால், கேட்பவர்களுக்குக் கோபம் வரக்கூடும்: பலர் ஆவேசம் வந்து அடிக்க வருகின்ற அளவுக்குக்கூட அந்தக் கருத்துக்கள் இருக்கும். ஆனால் சிற்றத்துக்குரியவர்களையும் சிந்திக்க வைக்கும் திறம் அவரது நகைச்சுவைக்கு உண்டு. அந்தத் திறமை கலைவாணர் என். எஸ். கே. ஒருவருக்குத்தான் உண்டு.

''கருத்துக் கருவூலமாகத் திகழ்ந்தவர் - சிந்தனைச செல்வராக விளங்கியவர் - சிந்திக்க வைத்தவர் - சிந்தனையில் தெளிவடைந்திருந்தவர்-கலைவாணர். நகைச்சுவைக்கு அவர் முன்னோடி - அவருக்கு முன்னர் யாரும் அவரைப் போல் இருக்கவில்லை. எனவேதான் அவர் சரித்திர நாயகர் என்று குறிப்பிடப்படுகிறார்.''

தலைவரின் உரைக்குப் பின்னர் இயல் இசை நாடக மன்றத்தின் செயலர் திரு டி.வி. நாராயணசாமி அவர்கள் நன்றி கூறினார்.

கலை உலகில் நகைச்சுவைக்கு உரிய பெருமையை-வலியுறுத்திக் கூறும் விழாவாக அமைந்தது கலைவாணரின் நினைவு நாள் விழா!



# குற்றாலத்தில் குளித்தேன்!

அரசு ஊழியர்கள் - தங்கள் அனுபவத்தில் விளைந்த சுவையான நிகழ்ச்சிகளை எழுதுமாறு கேட்டிருந்தோம். இங்கே அரசு ஊழியர் ஒருவர் தமது அனுபவத்தை - வரலாற்று உண்மையாக்கியிருக்கிறார்.

(ஆர்.)

"குற்றாலம் அருவியில் குளித்தேன்! இதில் என்ன அதிசயம் என்பீர்கள். அதிசயம் தான்! அதிசயமான உண்மை ஒன்று அதில் பொதிந்து கிடக்கிறது!

தமிழக அரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள் 2.8.1980-ந்தேதி குற்றாலம் வருவதை முன்னிட்டு, உள்ளாட்சித்துறை அலுவலர்கள் ''ஒருபணி விதிமுறைக் கருத்தரங்குக்கு'' ஏற்பாடு செய்திருந்தனர். திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் சார்பில் கருத்தரங்கில் கலந்து கொண்டு ''செய்தி'' அறிந்துவர என்னைப் பணித்திருந்தனர். 2.8.1980 அதிகாலை 4.00 மணிக்கு நாமக்கல், மதுரை வழியாக மாலை 5.00 மணிக்குக் குற்றாலம் சேர்ந்தேன். சிறிது நேரம் உள்ளாட்சித் துறை ''அமைச்சுப் பணியாளர்கள் சங்கச் செயற்குழுவில்'' கலந்துகொண்டுவிட்டு, மாலை 5.30 மணி அளவில் ''குற்றாலம் அருவியில்'' குளத்தேன்.

குற்றாலம் அருவியைப்பற்றி பலவித கருத்துக்கள் கேட்டிருக்கிறோம். குற்றாலம் அருவியில் குளித்தால், பைத்தியம் தெளிவாகிறது, வியாதிகள் குணமாகின்றன, நரம்புச் சுளுக்கு நீங்குகிறது என்றெல்லாம் கேள்விப் பட்டிருக்கிறோம்.

எஸ். கே. செகன்னாதன்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருச்செங்கோடு.

நான் பெற்ற சுகம் என்ன தெரியுமா?

எனக்கு வயிற்றுவலி கடந்த10 ஆண்டுகளாக உள்ளது. தூக்கமின்றி இருந்தாலும், காரம் சாப்பிட்டாலும், வாய்வு பதார்த்தங்கள் சாப்பிட்டாலும், கடைகளில் எண்ணெய்ப் பதார்த்தங்களை உட்கொண்டாலும் வயிற்றில் வலி தவறாமல் வருவது வழக்கம். இதன்பொருட்டே வெளியூர்சென்றால் இட்லி மட்டுமே அருந்திவிட்டு வருவது வழக்கம்.

இந்நிலையில் 2.8.1980ந்தேதி கடைகளில் இட்லி கிடைக்காத நிலையில், தோசை போன்றவைகள் சாப்பிட்டு ''குற்றால அருவியில்'' மாலை 5.30 மணிக்குக் குளித்தேன்.


2.8.80 அன்று ''நான்கண்ட சுகம்'' எல்லோரும் காணவேண்டுகிறேன். வயிற்றில் வலி இல்லை. நல்ல அருமையான பசியுடன் இரவு உணவு கடையில், சுகமான தூக்கம், காலையில் நல்ல சுறு சுறுப்பான நிலையில் சந்தோஷத்துடன் எழுந்தேன். இவ்வளவுக்கும் நான் படுத்திருந்த இடம் ஒரு மண்டபம். குறைந்தபட்சம் ஐம்பதுபேர் நான் படுத்த இடத்தில் படுத்திருந்தனர்.

3.8.80 காலை 6.15 மணிக்கு ''குற்றாலம் அருவியில்'' மீண்டும் குளித்தேன். கம்பியின்மேலே ஏறிநின்று கொண்டேன். தண்ணீர் திடுதிடுவெனத் தலையிலும், உடலிலும் கொட்டியது. ஒரு வினாடி குளிராக இருந்தது. அடுத்த வினாடியிலிருந்து குளிர் தெரியவில்லை.

ஐந்து நிமிடம் குளிப்பது, பின்னர் வெளியே வருவது, இவ்வாறாக மூன்றுமுறை குளித்தேன். மன நிறைவுடன் வெளியே வந்தேன். நல்ல பசி. கடையில் இட்லி கிடைக்காததால், மீண்டும் தோசை, பலகாரம் சாப்பிட்டேன். வயிற்றுவலி இல்லை. கருத்தரங்கில் கலந்துகொண்டு குறிப்பு எடுத்துக்கொண்டேன். 3.8.80 மாலை நண்பர்களுடன் குற்றாலத்திலிருந்து திருச்சி வழியாகத் திருச்செங்கோடு பஸ் மூலம் கண்விழித்துப் பயணம் செய்தேன். 4.8.80 காலை7.00 மணிக்குத் திருச்செங்கோடு வந்தடைந்தேன். பின்னர் 9.00 மணிக்குக் குளித்துவிட்டு அலுவலகம் வந்துவிட்டேன். உடலில் 'அசதி இல்லை' 'வயிற்று வலி'. இல்லை. 4.8.1980-ந் தேதியும் சுறுசுறுப்புடன்பணியாற்றினேன்.

''குற்றால அருவி நீர்'' மலைகளைக்கடந்து, பல மூலிகைச் செடிகளில் கிளறிவிட்டு வருவதினால், அருவியில் குளிப்பது உடலுக்கு நலம் பயக்கும் என்பது உண்மை. நானே அதற்கு சாட்சி. சுற்றுலா என்றில்லாவிட்டாலும், உடல்நலன் பெறவாவது ஏன் நீங்களும் ஒருமுறை குற்றாலம் சென்றுவரக்கூடாது.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# **டான்சி**யின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை—600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



# நெல் வேர் நூற்புழு

**எஸ். பழனிசாமி**
**உதவிப் பேராசிரியர்**
**பூச்சியியல்துறை,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம், கோவை.**

நெல்லில் எண்ணற்ற பூச்சி, பூஞ்சாணங்கள் தோன்றிச் சேதத்தை உண்டாக்குகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த தாகும். இவையன்றி நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு வகை நூற் புழுக்கள் தாக்குவதாக உலகின் பலநாடுகளிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. நெற்பயிரைத் தாக்கும் நூற்புழுக்களில் வேரைத் தாக்கிச் சேதம் உண்டாக்கும் நூற்புழுக்கள் முக்கியமானவை யாகும். இதில் 'ஹர்ஸ்மேன்னியல்லா' இனத்தைச் சேர்ந்த வேர் அழுகல் நூற்புழு உலகின் நெல் பயிரிடப்படும் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. தமிழகத்திலும் நெல் பயிரிடப்படும் பல்வேறு மாவட்டங்களில் இந்நூற் புழுப் பரவலாகக் காணப்படுகிறது.

இந்நூற்புழு எவ்வாறு விளைவிக்கின்றது என்பதனையும், அதனால் தோன்றும் அறிகுறிகளையும் பார்ப்போம். மண்ணிலுள்ள இந்நூற்புழுக்கள் வேரைத் தாக்கித் துளைத்து வேரினுள் நுழைகிறது. வேரினுள் நுழைந்தபின் வேரிலுள்ள காற்றுக் குழாய்களின் வழியாக நகர்ந்து சாற்றை உறிஞ்சிக் குடித்துச் சேதத்தை விளைவிக்கின்றது. இவை மிக மெல்லிய, காற்றுக்குழாய் இல்லாத பக்கவேர்களைத் தாக்குவதில்லை. நூற்புழுத் தாக்குதலுக்குள்ளான பயிரின் வளர்ச்சி குன்றியும், தூர்கள் குறைந்தும் காணப்படும். தாக்குதலுக்குள்ளான பயிரின் வேரின் வளர்ச்சி குறைந்து காணப்படுவதுடன், வேர்கள் அழுகி பழுப்பு அல்லது கறுமை நிறத்துடன் தோன்றும்.

வேரில் இப்புழுக்களின் நெற்பயிர் கதிர் வாங்கும் பருவத்தில் மிக அதிகமாகக் காணப்படும். நாற்று நட்டபின், மண்ணிலுள்ள புழுக்கள் வேரைத் தாக்கி வேரினுள் சென்று விடுவதால் மண்ணிலுள்ள புழுக்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. ஆனால், நெல் அறுவடைக்குப் பின் வேர்கள் அழுக ஆரம்பிப்பதால் மண்ணில் இப்புழுக்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகமாகிறது. வேரினுள் சென்ற புழுக்கள் வளர்ந்து முட்டையிட ஆரம்பிக்கின்றன. இம்முட்டைகளிலிருந்து 4 அல்லது 5 நாட்களில் இளம் புழுக்கள் வெளி வருகின்றன.

இந்நூற்புழுக்கள் ஏற்படுத்தும் சேதத்தைத் துல்லியமாகக் கணக்கிடுவது மிகவும் கடினம். எனினும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும், மற்றும் பல நாடுகளிலும் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து, இந்நூற் புழுக்கள் அதிகமாக உள்ள நிலங்களில் 15 சதவிகிதத்திற்கு மேல் மகசூல் குறைவு ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது. மேலும், இந்நூற் புழுக்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் 20 முதல் 30 சதம் வரை மகசூல் அதிகரிக்கிறது என்பதும் மேலே கூறிய ஆராய்ச்சி முடிவினை உறுதிப்படுத்துகிறது.

நெல் அறுவடைக்குப் பின் இந்நூற்புழுக்கள் மண்ணிலும், வேரிலும் ஓராண்டு வரை உயிர் வாழும் என்பது தெரிய வந்துள்ளது. தண்ணீர் தேங்கியுள்ள நிலத்தைவிட ஈரம் குறைந்த மண்ணில் அதிக நாட்கள் உயிருடன் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இந்நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் முறைகளைப் பற்றி இப்போது பார்ப்போம்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து இந்நூற்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான பல வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவையாவன:—

1. நிலத்தைத் தரிசாக விடுதல். இதன் மூலம் மண்ணிலுள்ள நூற்புழுக்களின் எண்ணிக்கை குறைகிறது.

2. நிலத்திற்குச் சரியான அளவு உரம்போடுதல், கம்போஸ்ட் மற்றும் சாம்பல் சத்து அதிகம் நிறைந்த பொட்டாஷ் உரங்களை இடுவதன் மூலமும் நூற் புழுக்களை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடத்திய சோதனைகளிலிருந்து பூச்சி-நூற்புழுக் கொல்லியான கார்போப்பியூரான் குருணை மருந்தை எக்டருக்கு 1.5 கிலோ வீரிய மருந்து என்ற அளவில் நாற்று நடும்போதும், நட்டபின் 30-வது 40வது நாட்களில் ஆக மூன்று முறை போடுவதால் நூற்புழுக்கள் நன்கு கட்டுப்படுத்தப்பட்டு மகசூலும் அதிகரிக்கிறது என்று தெரிய வந்துள்ளது.

4. ஆனால், மேலே குறிப்பிட்ட குருணை மருந்தைப்போடுவதற்குச் செலவு அதிகம் ஆகும். எனவே, குறைந்த செலவில் கட்டுப்படுத்தும் முறையைக் கண்டறிவதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், நெல் நாற்றுகளின் வேர்களை, டைமெக்ரான் மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லிலிட்டர் என்ற அளவிலோ, அல்லது டர்ஸ்பான் மருந்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி லிட்டர் என்ற அளவிலோ கலந்த கரைசலில் 25 நிமிடங்கள் நனைத்து நடுவது நல்ல பலன் தரும்.

மருந்தில் நனைத்து நட்ட நாற்றுக்களின் வேரில் உள்ள நூற்புழுக்கள் கொல்லப்படுகிறது. நட்டபின் ஒரு மாதம் வரை இந்நாற்றுக்களை நூற்புழுக்கள் தாக்குவதில்லை. இம்முறையைக் கையாளுவதன் மூலம் மகசூலும் 30 சதவிகிதத்திற்கு மேல் அதிகரிப்பதாகத் தெரிய வந்துள்ளது.

# பையூரில் ஓர் ஆராய்ச்சிப்பண்ணை

## மாவட்ட வளர்ச்சிப் பணிகள்:

தருமபுரி மாவட்டத்தில் 3,85,956 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 82.8 சதவிகிதம் மானாவாரிப் பயிராகும். இம்மாவட்டத்தில் கேழ்வரகு, சோளம், சாமை போன்ற சிறுதனியப் பயிர்களும், நிலக்கடலை, சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துக்களும், கொள் போன்ற பருப்பு வகைகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. கிருஷ்ணகிரி, சின்னாறு, அக்கா, தங்கை நீர்த்தேக்கத் திட்டங்கள் மூலமும், கிணறுகள், ஏரிகள் மூலமும், பாசனவசதி பெறப்பட்டு வருகிறது. கெலவரப்பள்ளி, தும்பலஹள்ளி, பாம்பாறு, வாணி-ஆறு, தொப்பையாறு, நாகநதி, ஈச்சம்பாடி ஆகிய அணைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பல்கலைக் கழகம் தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணத்திற்கு அருகில் உள்ள பையூரில் மானாவாரி இறைவைப் பயிர் உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகளை ஆராய்ந்து விவசாயிகளுக்குவழங்குதல்பொருட்டு ஒரு ஆராய்ச்சிப் பண்ணையை நிறுவியுள்ளது. சாகுபடியின் தரத்தை உயர்த்தி, உற்பத்தியைப் பெருக்குவது இப்பண்ணையின் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஆய்வுப் பண்ணையில் மானாவாரியில் சாகுபடி செய்யப்படும் சோளம், கேழ்வரகு, சாமை நிலக்கடலை, பருத்தி, பருப்பு வகைகள், வறட்சியைத் தாங்கி குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் தரக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்யவும், நிலத்திற்கு ஏற்ற நோய்கள் தாக்காத 100 முதல் 140 நாட்களுக்குள் அதிக விளைச்சல் தரக்கூடிய சன்னரக நெல் இரகங்களைக் கண்டுபிடிக்கவும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

இறவைக்கும் மானாவாரிக்கும் ஏற்ற காய்கறி இரகங்களை உருவாக்கவும், குளிர் காலத்தில் விளையக் கூடிய உருளைக்கிழங்கு முட்டைகோஸ், கேரட் போன்ற காய்கறிகளில் புதியஇரகங்களைக் கண்டு பிடிக்கவும், தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற ரோஜா, மல்லிகைப் பூ வகைகளும், பழ வகைகளும், மா, கொய்யா, மாதுளை, பப்பாளி போன்ற பழ மரங்களில் புதிய இனங்களை உருவாக்கவும், இப்புது இரகங்களுக்குக் கட்டுப் கோப்பு முறைகளை உருவாக்கவும், பூச்சி, பூசனை நோய் தாக்காத புது ரகங்களைப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கண்டறியவும், குறு நில விவசாயிகளின் வருமானத்தையும், வேலை வாய்ப்பையும் பெருக்கும் பொருட்டு கோழி, கறவைமாடு, தனிப் பயிராகச் சாகுபடி செய்தலைப் பற்றி கலப்பு பண்ணை அமைத்து புதிய முறைகளைப் புகுத்திடவும், களர், உவர், நிலங்களைச் சீர் திருத்துவது சாம்பல்சத்து உரமிடுவது போன்ற ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பண்ணையில் ஆய்வுக் கூடத்திலிருந்து பண்ணையை நோக்கி என்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் ஆதரவில் நடைபெறும் திட்டம் செயலாக்கப்படுகிறது. விவசாயிகளுக்கும், வேளண்மைத் துறை அலுவலர்களுக்கும், கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கும் இப்பண்ணையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நெல்:**

கடந்த 3 ஆண்டுகளாய் நெல் பயிர் பற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டு உயர் வகை நெல் ரகங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. பவானி, ஏ. டி. டி. 31, வைகை போன்ற நெல் ரகங்கள் இப்பகுதிகளில் இருபோகச் சாகுபடி செய்யலாமெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தீவிர ஆய்வின் மூலம் டி. பி. ஐ. 591 என்ற உயர் விளைச்சல் நெல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நெல் மிகவும் சிறிய நெல்லாகும். அதிக விளைச்சல் தரக்கூடியவையாகும்.



கிச்சடி நெல்லை விட மிகவும் சிறந்ததாகும். டி. பி. ஐ. 863, டி. என். ஏ. யூ. 8872 போன்ற சிறந்த நெல் ரகங்கள் விவசாயி களுக்கு வெளியிடும் நிலையில் ஆராய்ச்சி முடிவில் உள்ளது.

**ராகி:**

கோ. 11 என்ற ராகி பயிர் இம்மாவட்டத்திற்கு ஏற்புடைய தெனக் கண்டறியப்பட்டு அறி முகம் செய்யப்பட்டது. டி.பி.ஐ. 1161 என்ற ரகம் இப்பண்ணை யில் உருவாக்கப்பட்டதாகவும், இப்புதிய ரகம் மானாவாரியிலும் இறவையிலும் அதிக மகசூல் தரு கிறது.

**சோளம்:**

உயர்விளைச்சல் தரும் கோ. 24 என்ற ரகம் இம்மாவட்டத் திற்கு ஏற்புடையதென அறி முகப்படுத்தப்பட்டது. மழைக்



காலங்களில் பூஞ்சான்நோய்கள் தாக்காத, குருவிகள் தாக்காத தலைவிரிச்சான் சோள ரகம் உருவாக்க ஆராய்ச்சி நடைபெற் றுக் கொண்டுள்ளது. ஐ. எஸ். 5339 என்ற ரகம் அதிக மகசூல் தந்துள்ளது. யு. எஸ். வி. 10 நெட்டை என்ற சோள ரகம் அதிக விளைச்சல் தரக்கூடிய ஒன்று எனக் கண்டு பிடிக்கப்பட் டுள்ளது.

பருப்பு வகைகள்

**துவரை:**

இம்மாவட்டத்திற்கு மானா வாரிக்கும், இறவைக்கும் ஏற்ற இரகங்கள் கோ. 2 கோ. 3 என ஆய்ந்து அறியப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**மொச்சை:**

டி.எல். 2539 என்ற மொச்சை இம்மாவட்டத்திற்கு ஏற்றதென அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கோ. 1என்றும்இதனைஅழைத்து தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

**காராமணி:**

சி. 152 என்ற ரகம் மானா வாரியில் இம்மாவட்டத்தில் பயி ரிடலாமென விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இதிலிருந்து கோ. 3 என்ற ரகம் வெளியிடப் பட்டது.

**பருத்தி:**

இந்தியப் பருத்திச்சம்மேளனத் திட்டத்தின் ஆதரவில் நடை பெற்ற பருத்தி ஆய்வுகளில் சி. ஆர். எச். 71 எஸ். ஆர். டி. 1 என்ற புதிய பருத்தி இரகங்கள் வறட்சி தாங்கக் கூடியது என்றும் இம்மாவட்டத்தில் மானாவாரி யில் பயிரிடலாமென்றும் அறி முகம் செய்யப்பட்டது.

**காய்கறிகள்:**

கத்திரியில் எஸ். எம். 44, தக்காளியில் 63, வி. எப். 21, பூசாரூபி, பி. கே. எண். 1, வெண்டையில் பூசாசவானி இரகங்கள் இம்மாவட்டத்தில் பயிரிடலாமென கண்டறியப்பட் டுள்ளது.

**மரவள்ளி:**

மரவள்ளிக்கிழங்கில் கோ-1 என்ற இரகத்தின் நாற்று மூலம் தேர்ந்து எடுக்கப்பட்ட புதிய இரகமான டி.பி.ஐ. 793 என்ற இரகம் 200 நாட்களில் 1 ஹெக் டேரில் 47.8 டன் மகசூல்கிடைத் துள்ளது.

**முட்டைகோஸ்:**

முட்டைகோஸ் ஆல் சீஸன்ஸ், எக்ஸ்பிரஸ் ஆகிய ரகங்கள் குளிர் காலத்தில் 75 நாட்களில் 1 ஹெக்டேரில் அதிக மகசூல் 22 டன்கள் கொடுத்துள்ளன.

**குதிரை மசால்:**

கோயமுத்தூரிலிருந்துகொண்டு வரப்பட்ட குதிரை மசால் ரக மான எப். எஸ். 85 மற்ற இரகங் களை விட அதிக மகசூலைத் தரு கிறது. ஒரு ஹெக்டேரில் 44.5



டன் மகசூல் 4 அறுவடைகளில் கொடுத்துள்ளது.

**பொட்டான் உரம் குறித்து ஆய்வு**

ஜெர்மானிய நாட்டின் உதவி யுடன் சாம்பல் சத்து பற்றிய ஆய்வு இப்பண்ணையில் நடை பெறுகிறது. இதில் சாம்பல்சத்து இடுவதன் அவசியம் குறித்தும், விளையும் நன்மைகள் குறித்தும் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மரவள்ளிக் கிழங்குப் பயிருக்கு சாம்பல் சத்து ஹெக்டேருக்கு 100 கிலோ இடுவதால் 21 சத சதவிகிதம் அதிக விளைச்சல் கிடைக்குமெனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

**கலப்பு பண்ணையம்:**

அனைத்துஇந்தியவேளாண்மைக் கழகத்தின்ஆதரவில்இப்பண்ணை யில் ஆய்வு நிகழ்த்தப்படுகிறது. பால்பண்ணையம இணைந்த பயிர்ச் சாகுபடிமிகவும் இலாபகர மானதாகும். குறிப்பாக 2 ஏக்கர் நிலமுள்ள குறுநில விவசாயி களுக்கு 3 கறவை மாடுகளுடன் பால் பண்ணையம் லாபகரமான தாகும்.

**நடைபெறும் ஆய்வுப்பணிகள்:**

இந்த ஆய்வுப் பண்ணையில் புதுப் பயிர் இனங்களை உருவாக்கு வது பற்றி 12 ஆய்வுகளும், காய் கறி, பூ வகைகள் ஆய்வுத் திட் டங்கள் 5-ம், உழவியல் ஆய்வுகள் 4-ம், மண்வள ஆய்வு 1ம், ஆக மொத்தம் 22 திட்டங்கள் செயல் பட்டு வந்தன. தற்பொழுது 45 திட்டங்கள் இப் பண்ணையில் செயலாக்கப்பட்டு வருகின்றன.

பையூர் ஆராய்ச்சிப்பண்ணை இம்மாவட்டத்து மக்களுக்குப் பயன் அளிக்கவல்ல பல ஆய்வு களை நிகழ்த்தி, பல புதிய படைப்புக்களைப்படைத்து, பாங் கான வாழ்விற்கும், விவசாயப் பெருங்குடி மக்களின் பெருவாழ் விற்கும் வழி வகை செய்கிறது. இப்பண்ணையின் ஆய்வால் புதிய இரகங்களை உருவாக்கி, பயிரிட்டு, பயன்மிக விளைகிறது. இம் மாவட்டத்து மக்களின் நல்வாழ் விற்கு இவ் ஆய்வுப்பண்ணைபெரி தும் உதவும்.

## மாணவர் பக்கம்

# மகன் தந்தைக்குச் செய்த உதவி!

**நா**ன்காம் வகுப்புப் படிக்கும் மாணவன் அவன்!

படிப்பில் மட்டுமல்ல, பழக்க வழக்கத்திலும் சிறந்தவன் அவன்!

அவன், தன் வீட்டில் வரிசை வரிசையாகச் செல்லும் எறும்புகளைப் பார்த்திருக்க வேண்டும்; அவை சிறுகச் சிறுகச் சேமித்து வாழ்வதை உணர்ந்திருக்க வேண்டும். அதைப்போல நாமும் சேமித்தால் என்ன? என்ற எண்ணம் அவன் மனத்திலே முளைத்திருக்க வேண்டும். அதன் விளைவு?

சேமிப்பதிலே அவன் சிறந்து விளங்கினான். அந்த மாணவ மணியின் பெயர் சு. முத்துவேல்.

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, பி. தொட்டியப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் படிக்கும் மாணவன்தான் அவன்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதனை உணர்த்திடும் வகையில் சிறுசேமிப்புத் திட்டங்கள் பல உள்ளன. பெரியவர்களுக்கு மட்டுமல்ல, பள்ளிகளில் படிக்கும் பிஞ்சுகளுக்கும்கூட ஒரு சிறந்த திட்டம் உள்ளது. அதுதான் 'சஞ்சாயிகா'.

சிறு வயதிலிருந்தே சேமிப்புப் பழக்கம் வளர வேண்டும் என்பதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் வகுக்கப்பட்டது. இதில் மாணவர்கள் கவனம் செலுத்திட ஆசிரியர்கள் ஊக்கந் தருகின்றனர். இதற்குப் பெற்றோர்களும் ஒத்துழைப்புத் தருகின்றனர்.

அந்த வகையில் இம்மாணவன் சேமிக்கத் தொடங்கினான். ஆரம்பத்தில் சிறுகச் சிறுகச் சேமித்தது, பிறகு பெருந்தொகையாகக் கிடைத்தது. ஆம். இம்மாணவன் ரூ. 3,573.83 சேர்த்துவிட்டான்! ஒரு தொடக்கப்பள்ளி மாணவன், இவ்வளவு தொகையைச் சேமித்தது ஒரு பெருஞ் சாதனையல்லவா?




இம்மாணவனின் தந்தை திரு ஏ.எம். சுப்பிரமணியம் ஒரு ஜவுளி வியாபாரி. வியாபாரம் நிமித்தமாக அவர் அடிக்கடி வெளியில் செல்ல வேண்டியிருந்தது.

மகன் சேமித்த பணம் அதற்கு உதவியாக இருந்தது. ஆம், முத்துவேல், தான் சேமித்த பணத்தைக் கொண்டு, தன் தந்தைக்கு ஒரு அழகிய மோட்டார் சைக்கிளை (Moped) வாங்கிக் கொடுத்திருக்கிறான்!

இம் மாணவனின் அருஞ்செயலை, தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாவட்ட சிறுசேமிப்பு அலுவலர் ஆகியோர் மட்டும் பாராட்டவில்லை, தமிழ்நாடு சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் திரு எஸ். எஸ். ராசேந்திரன் அவர்களும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். செயற்கரிய செய்த இச்சிறுவனை நாமும் பாராட்டுவோம்!

— பி. வி. ஜி.



# பாப்பாவுக்கு வேண்டுகோள்

பாப்பா செல்வாய் பள்ளிக்கு!
பாடம் கற்பாய் வாழ்க்கைக்கு!
காப்பாய் ஒழுங்கை வளர்ச்சிக்கு!
கடமை செய்வாய் நாட்டிற்கு!

அன்பைப் பொழிவாய் உலகிற்கு!—
ஆசை வெறுப்பாய் நன்மைக்கு!
தன்னைத் தருவாய் சிறப்பிற்கு!
தனிமை விழைவாய் அமைதிக்கு!

இன்பம் அளிப்பாய் அன்னைக்கு!
இதயம் கொடுப்பாய் நட்புக்கு!
என்றும் உழைப்பாய் பிழைப்புக்கு!
எதையும் ஏற்பாய் உயர்வுக்கு!

துன்பம் துடைப்பாய் ஏழைக்கு!
துணிவாய் நிற்பாய் வெற்றிக்கு
மன்றம் செல்வாய் அறிவுக்கு
வணக்கம் சொல்வாய் தமிழுக்கு!

—கொளத்தூர் கு. ரா. தேவராசன்





## கருவில் இருக்கும் நாட்கள் : ஒரு கணக்கு !

| | | |
|---|---|---|
| ஒட்டகம் | — | 11 முதல் 12 மாதம் வரை |
| ஒட்டகச் சிவிங்கி | — | 14 மாதங்கள் |
| செம்மறி ஆடு | — | 5 மாதங்கள் |
| நாய் | — | 9 வாரங்கள் |
| குழி முயல் | — | 1 மாதம் |
| கழுதை | — | 12 மாதங்கள் |
| பசு | — | 9 மாதங்கள் |
| குதிரை | — | 11 மாதங்கள் |
| குரங்கு | — | 7 மாதங்கள் |
| ஆடு | — | 5 மாதங்கள் |
| பூனை | — | 2 மாதங்கள் |
| ஓநாய் | — | 2 மாதங்கள் |
| கரடி | — | 6 மாதங்கள் |
| சிங்கம் | — | 108 நாட்கள் |
| பன்றி | — | 4 மாதங்கள் |
| குள்ள நரி | — | 62 நாட்கள் |
| யானை | — | 21 மாதங்கள் |
| முயல் | — | 8 மாதங்கள் |

—ஏ. சங்கரன்
சங்கரன்கோவில்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஒருநாள் பூகோள ஆசிரியர் என்னிடம், ''தமிழ்நாட்டில் சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ள இடங்களைக் கூறு'' என்றார். நான் 'பே' என்று விழித்துக் கொண்டு நின்றேன். ஆசிரியர் திடீரென்று– ''மது தாடா!'' என்றார்.

எனக்கும் பிற மாணவர்களுக்கும் தூக்கி வாரிப் போட்டது !

உடனே ஆசிரியர் இந்த 'மது தாடா'வை நினைவில் வைத்துக் கொண்டால் விடையை உடனே கூறிவிடலாம். தமிழ்நாட்டில் சிமெண்ட் தொழிற்சாலைகளுள்ள இடங்களின் பெயர்களிலுள்ள முதல் எழுத்துக்களிலிருந்து பிறந்தது தான் 'மதுதாடா'. அதாவது மதுக்கரை, துலுக்கப்பட்டி, தாழையூத்து, டால்மியாபுரம் என்றார். எங்களுக்கு ஒரே வியப்பாகி விட்டது !

—நா. கணேசன், கீழப்பாவூர்.



# முதல் முதல் முதல்

இந்திய மொழிகளிலே முதன் முதலாக அச்சடிக்கப்பட்டு மேல் நாட்டில் வெளிவந்த நூல் 'லூசோ தமிழ்' என்பதாகும். தமிழ்நாட்டில், இந்திய நாட்டில் முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட நூல் தமிழ் நூல்தான். பெயர், 'தம்பிரான் வணக்கம்' 1557-ல் கொல்லத்தில் அச்சடிக்கப்பட்டது.

கி.பி. 1557-ஆம் ஆண்டு கோவாநகரில் முதன் முதலாகத் தமிழ் எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன.

தரங்கம்பாடியில் முதல் அச்சுக் கூடம் 1712-ல் நிறுவப்பட்டது. இதுவே தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முதல் அச்சுக்கூடம்.

1713-ஆம் ஆண்டில் பொறையாரில் அச்சுவார்ப்படச் சாலை அமைக்கப்பெற்றது. இதுவே இந்தியாவில் முதன் முதலாக நிறுவப்பட்ட 'டைப் பவுண்டரி' ஆகும்.

'புதிய ஏற்பாடு', 1715-ல் அச்சேறியது. இந்தியாவிலேயே முதன் முதலாகப் புத்தக உருவில் வெளிவந்த பைபிள் இந்தத் தமிழ் மொழிபெயர்ப்புதான்.

இந்திய மொழிகள் அனைத்திலுள்ளும் தமிழில்தான் முதன் முதலாகப் பாரத இராமாயணங்கள் வடமொழியைத் தழுவி இயற்றப்பெற்றன.

—இப்படி 'முதல், முதல்' செய்திகளைத் தரும் முதன்மை நூலாகவும், அச்சுததொழில், பதிப்புக் கலைகளுக்கு அமைந்துள்ள முதல் கலைக் களஞ்சியமாகவும் வந்திருக்கும் தமிழ்நூல 'அச்சும் பதிப்பும்' என்ற நூல். இதன் ஆசிரியர் 'அச்சுக்கலை' எனும் நூலை எழுதிய மா. சு. சம்பந்தன் அவர்கள்.



மைசூரிலுள்ள இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், வங்காளம் முதலிய மொழிகளில் ஆயிரம் படங்களைக் கொண்ட ஓவிய அகராதியைத் தயாரிக்க இருக்கிறது. மொழியைக் கற்றுக் கொள்பவர்களுக்குக் குறிப்பாகக் குழந்தைகளுக்கு இந்த அகராதி பெரிதும் பயன்படும்.

—மாமூலன்



# அதிசயம்

நாய் ஆகாரம் இல்லாவிட்டால் கூட இறக்காது. ஆனால், தூக்கம் இல்லாவிட்டால் இறந்து விடும்.



உருவ அளவுக்கு மேலே அதிக அளவு மூளை உள்ள பிராணி எறும்பு.

கால்களையும் தலையையும் கீழ் நோக்கி வைத்துக் கொண்டுதான் கழுகு பிறக்கும்.

முட்டையிலிருந்து வெளிவந்தமுதலைக் குஞ்சு, முட்டையைவிட மூன்று பங்கு பெரிதாக இருக்கும்.



தன் உடலைவிட நீளமான வால் உடையது குரங்கு.

உணவு கிடைக்காதபொழுது தேள்கள் ஒன்றை மற்றொன்று கொன்று விடும்.



குதிரை எழுந்திருக்கும்போது முதலில் முன்னங்கால்களை உயர்த்தி எழுந்திருக்கும். மாடு முதலில் பின்னங்கால்களை உயர்த்தி எழுந்திருக்கும்.


காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையிலேயே நாய் தன் மூக்கு இருக்கும்படியாகப் படுத்திருக்கும். மோப்ப சக்தியால் எதிரி வருவதை அப்பொழுதுதான் அதனால் சுலபமாக உணர முடியும்.



'சிம்பன்ஸி' என்ற மனிதக் குரங்குக்கு ஜலதோஷம் பிடிக்கும்.

வரிக்குதிரையின் மேல் உள்ள கோடுகள் வெண்மை நிறமானவையே. நாம் எண்ணிக் கொண்டிருப்பது போல் கறுப்பல்ல!

தொகுப்பு : பி. எம். இப்ராஹிம்.



# திசையெலாம் தமிழ்பரப்பிய தெ.பொ.மீ.

- டாக்டர். ந. சஞ்சீவி

பல்கலைச் செல்வர் - பன்மொழிப் புலவர் - பேராசிரியர்- மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் - மறைந்து விட்டார். ஆம். எண்பது ஆண்டான கலைஞர் - நடமாடும் பல்கலைக் கழகம்- இன்று நம்மிடையே இல்லை. ஈடு செய்ய முடியாத இழப்பு! இன்னும் சிறந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளத் தமிழர்கள் தவறி விட்டாலும், தமிழ்நாட்டிலும் ஒரு டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி இருக்கிருர் - பன்மொழி - பல்கலைப் பெரும்புலவர் ஒருவர் இருக்கிறார் - உலகப் புகழ்பெற்ற உயர்ந்தவர் ஒருவர் இருக்கிறார்- தமிழ்ப் புகழை உலகப் புகழாக்கிய தலைவர் ஒருவர் இருக்கிறார் என்ற தமிழினத்தின் எண்ணத்தில் - இறுமாப்பில் இடி விழுந்து விட்டது!

பேராசிரியர் தெ. பொ. மீ. சென்னை பச்சையப்பர் கல்லூரியில் படித்தவர். மாநிலக் கல்லூரியில் படிப்பித்தவர். வரலாற்றுத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர்; பி. எல். படித்த வழக்கறிஞர். பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகளையும், சமஸ்கிருதம் முதலிய இந்திய மொழிகளையும், பொருளியல் முதலிய கலைகளையும் கற்றவர். ஆனால், தலைசிறந்த தேசபக்தக் குடும்பத்தில் பிறந்த அவர், சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பதுபோல் இலண்டனிலேயே 'கதரின் வெற்றி'யை நாடகமாக நடத்திக் காட்டிய சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலரின் சகோதரர் தன் கலைகளையெல்லாம் அவர் நாட்டுக்கே காணிக்கை ஆக்கினார்.

பொருட்செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர் தென் பட்டினம் பொன்னுசாமி மீனாட்சிசுந்தரனார். ஆனால், அந்தப் பொருட்செல்வமெல்லாம் கரைந்து ஓடக் கல்விச் செல்வத்தையே பெருஞ்செல்வமாய்க் கடவுட் செல்வம் அவருக்குத் தந்தது. தான் பெற்ற செல்வத்தைப் பலநூறு தமிழாசிரியர்களும், டாக்டர் பட்டம் பெற்ற அறிஞர்களும் இமயம் முதல் குமரி வரை ஏன்? இலண்டன் முதல் டோக்கியோ வரை - இருந்து இன்று கண்ணீர் விட்டுக் கதறி அழ, காலவெளியில் கலந்து விட்டார் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் போல் விளங்க வேண்டும் என்று பெற்றோர்களிட்ட பெயரை விளங்க வைத்துவிட்டுப் போய்விட்டார். முன்னைப் பழமைக்குப் பழமையாகவும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கியவர் இரண்டும் அற்ற காலவெளியில் இரண்டறக் கலந்து விட்டார் ஆம்; அறுபதாண்டுக்கால அயரா உழைப்பு அயர்ந்து விட்டது.

நடமாடும் பல்கலைக் கழகமாய்த் தான் திகழ்ந்ததோடு படமாடும் பல்கலைக்கழகமாய் - திடமாகும் பல்கலைக்கழகமாய் ஒரு பல்கலைக்கழகத்தையும் மீனாட்சித் தாயின் திருவருளை நம்பி வீண் போகாமல் உருவாக்கிய பெரியவர் மீனாட்சிசுந்தரனார் பெரும் பிரிவு பெற்று விட்டார். சர். சி. பி., டாக்டர் ஏ. எல். போன்ற துணைவேந்தர்களால் உருவாக்கப்பெற்ற துணைவேந்தர் எந்த வேந்தரின் துணையையும் வேண்டாத நிலையை வேண்டிப்பெற்று விட்டார்!

இந்திய ஒருமைப் பாட்டிற்காக வாழ்க்கையைத் தொடங்கிய இலட்சிய மனிதர் அகிலாண்ட ஒற்றுமையில் தன் வாழ்க்கையை முடித்து விட்டார். தமிழ் மொழியும் தமிழ் இனமும் உலகளாவிய பெருமை பெற வேண்டும் - வானம் அளந்தது அனைத்தும் தானும் தமிழும் தமிழர்களும் அளந்து பெருமை கொள்ள வேண்டும் என்று பெருங் கனவு கண்ட பெரியவர் அக்கனவை நனவாக்கி விட்டே கண் மூடி விட்டார். ஆம். இந்திய நாட்டுக் காந்தி வழி இலட்சியப் பயணத்தைத் தொடங்கிய அவர், அவரைப் போலவே இன்பத் தமிழ் இலட்சியத்தையும் இமயக் கொடியாக்கி விட்டுக் குமரி நாட்டில் மறைந்து விட்டார். இந்து மதச் சிறப்பை ஒரு விவேகானந்தர் சிகாகோ சென்று நிலைநாட்டினார்; இன்பத் தமிழ்ச் சிறப்பையும் ஒரு தெ. பொ. மீ. சிகாகோ சென்று நிலைநாட்டினார்.

பேசும் நூலகமாக விளங்கிய பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் எழுத்தையும் பேச்சையும் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக அனுபவித்து வந்தேன் ; அவருடைய குறைகளையும் அறிவேன்; நிறைகளையும் அறிவேன்; அவர் டிராம் வண்டியில் சென்னைக்குள் சுற்றியதும் அறிவேன்; ஆகாய விமானத்தில் பறந்து அகிலம் அளந்ததும் அறிவேன்; மொட்டாய் இருந்ததும் அறிவேன்; மலரானதும் அறிவேன்; சிந்தாதிரிப்பேட்டையிலேயே சிக்குண்டிருந்ததும் அறிவேன், சிகாகோவுக்குச் சிறகடித்துப் பறந்ததும் அறிவேன்; தஞ்சாவூர் பொம்மை போல் தலையாட்டித் தொப்பை அசைத்துக் குழந்தைகளும் நகைத்து மகிழப் பேசிய காலமும் அறிவேன். வாசியோகமும் விட்டு விட்டேன் 'ஜெ. கே. வழியே நன்றாக விளங்குகிறது' என்றதும் மோன முறுவல் முகிழ்த்த காலமும் அறிவேன். அவர் உள்ளும் அறிவேன், புறமும் அறிவேன்

பேராசிரியர் தெ. பொ. மீ. நினையாத நினைப்பு இல்லை; நிகழ்த்தாத பேச்சு இல்லை ; எழுதாத எழுத்தில்லை; ஆராயாத பொருளில்லை என்னும் அளவிற்குத் தெ. பொ. மீ., தன் பல்கலை - பன்மொழிப் புலமையைப் பார் வியக்க வேர் கொள்ளச் செய்துவிட்டார். தலைமையாகத் தமிழ் நாட்டு மொழியியல் ஆராய்ச்சிக்குத் தந்தையாகவும், அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மாநாடுகளுக்குத் தாயாகவும் விளங்கிய சான்றோர் அவர்! கல்லாய் இருந்த அவர் உடலும் உள்ளமும் கனியாய்க் கனிந்து விழுந்தும் விட்டது. விழுந்து விட்ட அந்த விழுமிய கனியின் முற்றிய விதைகளில் இருந்து நூறு நூறு-ஏன்?— ஆயிரமாயிரம் பழ மரங்கள் வருங்காலத்தில் தோன்றும் என்பது திண்ணம்.

குழந்தைகளிடமும் மகளிரிடமும் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்த பெரியார் அவர்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

## ஆண்டுக்கு இரு முறை
## குலுக்கல்கள் ஜனவரியிலும் ஜூலையிலும் நடைபெறும்

**ரூ. 20.5 இலட்சத்திற்கு**

**11,116 பரிசுகள்**

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ லட்சத்திற்குக்
கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5½% உயர் வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.

விவரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத்துறை,
சென்னை-600 002.

*விவரங்களுக்கு :*

இயக்குநர்,
சிறுசேமிப்புத் துறை,
சென்னை-600 002.

மண்டல தேசீய சேமிப்பு இயக்குநர்,
சென்னை-600 002.

ஆணையர், சென்னை மாநகராட்சி,
மற்றும் எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உங்களுக்கு அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.

ADVT

அவர்கள் வளர்ச்சிக்காக எழுத்தூலும் பேச்சாலும் மட்டுமின்றி, தொழிலாலும், தொண்டாலும் பாடுபட்ட பெருந்தகை அவர். தெ. பொ. மீ. யும் மனிதர்தான். காலத்தின் கருவிதான். அவரிடமிருந்த ஒரு சில குறைகளும் இல்லாமல் நாம் வாழ முயலலாம். முள்ளில்லா ரோஜாவாக இருக்க விரும்பலாம். ஆனால், முள்ளும் போய் ரோஜாவும் போய்விட்டால் என் செய்வோம்? முள்ளில்லா முசுக்கட்டையினும் முள்ளுள்ள ரோஜா மேலோ?

பாரதநாடு விடுதலைபெற்ற ஆகஸ்டு மாதத்தில் - தன் கண் கண்ட தமிழ்த் தெய்வமாய் விளங்கிய திரு. வி. க. பிறந்த நாளின் மறுநாளில் - நம் பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. மறைந்ததும் தெய்வப் பொருத்தம் போலும்! தமிழ் முனிவர் திரு. வி. க. தம் வாழ்க்கைக் குறிப்புகளில் முப்பத்தெட்டு ஆண்டுகட்கு முன்பே பேராசிரியர் தெ. பொ. மீ. யை நாவார மனமார புகழ்ந்து விட்டு முடிவாக எழுதினார் - 'மீனாட்சி சுந்தரனார் பிறவி புண்ணியமுடையது' என்று இரத்தினச் சுருக்கமாக. ஆம். மீனாட்சி சுந்தரனாருக்கும் கலியாண சுந்தரனாருக்குந்தான் எவ்வளவு பொருத்தம்! தெய்வப் பொருத்தம்! தமிழ்ப் புகழை உலகப் புகழாக்கியதினும் பெரும்புண்ணியம் உண்டோ? முனிவர் திரு. வி. க. போற்றிய அந்தத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ, யின் புண்ணியமுடைய பிறவி இன்று எல்லோர் பிறவியிலும் ஒன்றாகிக் கலந்து விட்டது! ஆம். அப்படி நினைப்பதுதான்— நினைத்துக் கடமை ஆற்றுவதுதான் - நன்றியுடைய தமிழர்களின் நல்ல பொறுப்பாகும்!

வாழ்க தெ.பொ.மீ. புகழ்!




# தெ. பொ. மீ. அவர்களுக்கு நினைவுச் சின்னம்

பன்மொழிப் புலவர், பல்கலைச் செல்வர், முன்னாள் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் இரங்கற் கூட்டம் 6-9-80-ஆம் நாள் மாலை 6 மணி அளவில் இராஜாஜி மண்டபத்தில் மேதகு ஆளுநர் பட்வாரி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு துறைகளைச் சார்ந்த தலைவர்கள் பங்கு கொண்டு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றிய தொண்டினை நினைவு கூர்ந்து புகழ் அஞ்சலி செலுத்தினர்.

மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., மதுரை காமராஜ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன், பேரறிஞர் அண்ணா தொழிற்நுட்ப பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி. சிவலிங்கம், டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார், திரு நா. மகாலிங்கம், திரு கி. வா. ஜகந்நாதன், திரு கிரிதாரி பிரசாத் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். தெ. பொ. மீ. அவர்களின் தொண்டினைப் பாராட்டிப் பேசினார்கள். மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்:

"டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் உள்ளத்தில் என்றும் நீங்காத இடத்தினைப் பெற்றுள்ளார்; அந்தப் பன்மொழிப் புலவருக்கு நிலையான ஒரு நினைவுச் சின்னத்தை அமைப்பது தமிழ் மக்களின் கடமையாகும்; தனிநபரோ அல்லது பல தமிழ் அன்பர்களோ இப்பணியினை மேற்கொள்ளலாம். இதுபற்றித் தமிழக முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி அரசு தன்னால் இயன்ற பணியினை மேற்கொள்ளும்".

அமைச்சர் அவர்கள் விடுத்த இந்த உருக்கமான வேண்டுகோளை ஏற்று, ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும், திரு நா. மகாலிங்கம் அவர்களும், மதுரைப் பல்கலைக்கழக வளாகத்தில் மதுரையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டின்போது தெ. பொ. மீ. அவர்களுக்குச் சிலை அமைப்போம் என அறிவித்தார்கள். தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்கள், தெ. பொ. மீ, அவர்களின் நினைவாக மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நினைவுச் சொற்பொழிவுகள் நடத்துவதற்காக ரூபாய் பத்தாயிரம் (ரூ. 10,000) நிதி அளிப்பதாகவும் அறிவித்தார்.



# உங்கள் எண்ணங்களே எங்களை ஆளுகின்றன!

பூந்தாது வாரிவரும் பொதிகை மலைத் தென்றல் காற்று !

பொன்னள்ளிக் கோலமிட்டுப் பூஞ்சிரிப் பைச் சிந்துகின்ற புலர்வானம் !

பூப்பூத்த விழியெல்லாம் புதுக்கவிதை பாடிவரும் வானம்பாடி !

புவனத்தில் தமிழ்நாட்டைப் புகழேட் டில் பொறித்திட்ட திருப்பனுவல் !

எங்கள் கோடைகளின் வசந்தம் !

எங்கள் அடிமை இரவுகளின் முடிவை அறிவிக்க விடியல் பாடிய ஆலோலம் !

எங்கள் அரேபியாக்களின் பாலைவனப் பசுஞ் சோலை !

செங்காவிச் சிரிப்புக்குள் செகத்தை யெல்லாம் சிறை வைத்த அண்ணா !

காந்தாரக் கலைமின்னும் கற்கண்டுச் சொல்மாரி அண்ணா !

வெல்லத் தமிழ்காக்க வெங்களங்கள் பல கண்ட அண்ணா !

இப்சனை - இங்கர்சாலை -சோமர்செட் மாமை—சென்யாட்சனைத் தமிழுக்கு அறி முகம் செய்த அண்ணா !

அந்த அண்ணனைப் பற்றி எழுத நான் முனைவது பிள்ளைக் கிறுக்கல் : பிறை நிலா வெளிச்சம் - குதலைச் சிதறல் - குருடனின் விளக்கு வருணனை—பொழுதுபட்ட நேரம் பழுதுபட்ட பார்வை - உழுதுவிடா நிலத்தில் இன்னும் விழுதுவிடா மரங்கள்.

எல்லோருக்கும் பிறந்த நாள் வருகிறது. சிலர் கொண்டாடுகிறார்கள் ; சிலர் கொண் டாட வைக்கிறார்கள்.

பலர் பிறந்த நாளில் வீடு மாத்திரம் விழாக் கோலம் பூணுகிறது; சிலர் பிறந்த நாளில் நாடே அக்களிப்பில் ஆர்ப்பரிக்கிறது; ஆர்வ அலைகளில் மிதக்கின்றது.

தனக்கென்று வாழ்ந்தவர்களை வீடும் நினைப்பதில்லை ; அவர்களின் நினைப்பு தெருவிற்கு அப்பாலும் தெரிவதில்லை; ஊருக்கு அப்பாலும் ஊர்வதில்லை.

இதை எழுதுகிற இன்றைக்குக் கண்ண னுக்குப் பிறந்த நாள் ; களிப்போடு எங்கள் தெருக்களில் சின்னஞ்சிறுவர்கள் ஆடிக்கொண் டிருக்கிறார்கள்

கண்ணனுக்கே கூட ஆண்டுக்கொருநாள்- ஆவணித் திங்களில் பிறந்த நாள் பெருமங்க லம் வருகின்றது.

எங்கள் அண்ணனுக்கோ, பிறந்த நாள் என்றோ ஒரு நாள்—எப்போதோ ஒரு முறை வருவதில்லை.

அது ஆண்டுக்கொரு முறை வராமல்— அன்றாடம் வருகின்றது !

கண்ணன் அவதாரம்—எங்கள் அண்ணன் பவதாரம்.

அவதாரம் மேலிருந்து கீழே வருவது. பவதாரம் கீழிருந்துமேலே எழுவது--ஏறுவது.

எங்கள் நினைப்பில்— நடப்பில்— இத யத்து உணர்வில்— அதன் ஈரக் கசிவில்— போர்த்தித் தூங்குகிற இராத்திரிக் காலங் களிலும்—எங்கள் கனவுகளில் பூப் பூவாய்ச் சிரிக்கின்ற புனிதனுக்குப் பொழுதெல்லாம் பிறந்த நாள் !

ஆண்டின் நாளெல்லாம்—அண்ணன் பிறந்த நாட்களே ! இருந்தும் செப்டம்பர் 15 —கோடு காட்டிக் குறிக்கிற ஒரு நாள்.

தமிழ் நிலத்திற்கு செப்டம்பர் பதி னைந்துதானே வருடம் பிறக்கிற வசீகரத் திருநாள் !

செப்டம்பர் 15

சேலாடும் நீர்ப்பரப்பில் செந்தாழை மடல் விரித்து பனி நீரில் உடல் நனைக்கும் பருவகாலம்.

அல்லிப் பெண் முகம் கவிழ, அனிச்சப் பூ கண் விழிக்க—ஆம்பலோ வாயவிழ்ந்து பாடுகிற விடியல் நேரம்.

சில்லிட்ட நீர் முகத்தின் சீதளப் பூப் புன்னகைக்குள் சில் வண்டு கவியெழுதும் காலை வேளை—

பிஞ்சு வயதின் பிள்ளைக் குறும்பு மறைந் தும் மறையாமலும்—பருவப் பெண்ணின் வசந்த நாணம் இன்னமும் வந்தும் வராமலும் —விடிந்தும் விடியாமல் கிடக்கிற வைகறைப் பொழுது.

அதோ தெரிகிறது!

புவனத்தின் புகழேட்டில் தமிழ்நாட் டைப் பொறித்திட்ட காஞ்சி!

அது பல்லவன் குடைநிழல் எல்லையில் பரவிய பாடல் தலை நகரம்!

அதோ தெரிகிறது!

கோடான கோடி கருவண்டுகள் சிற கடிக்க இயலாமல் கால் கடுக்க நின்று கண்ட கலை மலிந்த காஞ்சி!

அது புகழ் பூத்த பல்லவரின் கலைக்கண் கள் கட்டி வைத்த ஆடகப் பொன்வார்ப் பான அழகான கொலு மண்டபம்.

அதோ தெரிகிறது!

மாளாத பல்லவனின் மங்காத புகழ் தன்னைப் பாரெல்லாம் பறைசாற்றும் காஞ்சி.

அது வீரத்தின் விளை நிலமாய் -விவே கத்தின் இருப்பிடமாய் - உலகப் பேரேட்டில் ஒன்றிப் போன வைர வரிகள்; வார்த்தை வடிப்புகள்!

அதோ தெரிகிறது!

எங்கள் அண்ணன் பிறந்து அருள் வளர்த்த கலைமலிந்த காஞ்சி!

அது தென்னகத்தின் நாளந்தா!

திராவிடத்தின் ரோமாபுரி!

தமிழகத்தின் பாபிலோன்!

செப்டம்பர் 15!

போதி மரத்துப் புத்தனும், பொல்லாங்கு நினைக்காத கல்வாரிச் சித்தனும், புத்துலுகு காண வைத்த காந்தியாம் வித்தகனும் ஒருட லாய் உருவாகி - பாடல் பழந்தமிழை - அதன் ஆடல் கலையழகை - நாநலத்தால் பேச வைத்து - நானிலத்தார் நினைவெல்லாம் நின்று நிழலாட விட்டவராம் அண்ணா பிறந்த நாள்! இன்றோ எழுபதாவது பிறந்த நாள்!

செப்டம்பர் 15!

பல ஆண்டுகள் பாதாளச் சிறைகளிலே பண்டிதர்கள் சிறை வைத்த பழந்தமிழை— நாவாடி - நாவாடி நற்றமிழர் மேடைகளில் நடமாடவிட்டதொரு தமிழகத்து மேயீசன் பிறந்த நாள்!

பழம்பாட்டு - பழங்கணக்கு என்றெல் லாம் பறையறைந்து பாழாகிப் போனவரின் முக்காட்டு முகத் திரையைக் கிழித்தெறிந்த புரட்சிக்கனல்-புத்துலகப் புதுவார்ப்பு - தமிழ கத்து இங்கர்சால் பிறந்த நாள்!

வடபுலத்தார் மொழி வீச்சால் வண்ண மிழந்து - தன் வாழ்விழந்து - வாடி நின்ற தமிழ்ப் பேச்சின் வாட்டம் போக்க-கிண் ணாரத் தமிழெடுத்து கிண்கிணிச் சரந் தொடுத்த - தமிழகத்து டெமாஸ்தனிஸ் பிறந்த நாள்!

நாடகத் தமிழெங்கே வாழ்கிறது! தாழ் வுற்று நலிவுற்று தடந்தெரியாமல் அழிந்தின்று சாகிறதே! என்ற நிலைமாற்றி - எழிலான நாடகங்கள் எங்கெங்கும் பவனிவர கற் கண்டுத் தமிழெடுத்து-கனகமணி நாடகமாம் மலர்ச்சரம் தனைத் தொடுத்த தமிழகத்தின் பெர்னாட்ஷா பிறந்த நாள்!

தொள்கை வேறுபட்டவனின் குதிக் கால் நரம்பறுத்துக்-கொடிக் கயிற்றைத் திரிக் கின்ற - கள்ள மனத்தவரின் கொடும் பாம்புக் கூடாரம் அரசியல் என்ற நிலைமாற்றி— ஆயிரம் மலர்கள் என் தோட்டத்தில் மல ரட்டுமென்று மார்தட்டி நின்ற தமிழகத்து மகாத்மா பிறந்த நாள்!



வலம்புரி ஜான்

எங்கள் அண்ணனுக்கு - அறிவுலக மன்ன னுக்குப் பிறந்த நாள்! இன்று எழுபதாவது பிறந்த நாள்!

வில், அம்பு, சேனை வீரப்படையொடு- வீங்கி வந்த பகை முகத்தை விரட்டிக் காட்டி- பார்புகழப் பகை முடித்த பழந் தமிழர் வீர வரலாற்றில் இரத்தமில்லாப் புரட்சிக்கே இதயம் திறந்து வைத்த இனியவன் பிறந்த நாள்!

அன்பிற்குரியவரே! அண்ணா! நீங்கள் இல்லாத சூன்யத்தில் உங்கள் பிறந்த நாள் மட்டும் வந்து வந்து போகிறதே!

இந்தப் பாலை நெடுமணலில் உங்கள் பாதச் சுவடுகளை நான் தேடித் தேடி அலை கிறேன். இதுவோ மங்கலான முன்னிருட்டுக் காலம்.

கள்ளிச் செடிகளும், கருவேலமரங்களும் என் கால்களில் இரத்தக் கோடுகளை உரு வாக்குவதை நான் உணராமலில்லை.

என்றாலும், கண்ணீர் பூத்த எனது கண்கள் அழிந்தும் அழியாமலும், புதைந்தும் புதையாமலும் இருக்கிற உங்கள் பாதங் களையே தேடி இன்னமும் அலைகின்றன!

நீர்ச் சுனைகளை நோக்கித் தாகத்தோடு தாவி வருகிற வெளிமான் குட்டிகளைப்போல இதோ எனது கண்கள் உங்கள் கால் சுவடு களையே தேடித் தேடி அலைகின்றன!

இதோ! வேதனை கலந்த நெருடல் என் இதயத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.!

உங்கள் இல்லம் தேடி வந்து உவப்போடு நாங்கள் உங்களுக்கும் சூட்டியிருக்க வேண்டிய மலர்மாலைகளை இதோ உங்கள் கல்லறைக் கருகே இன்று மலைபோலக் குவித்து வைக் கிறோமே அண்ணா! அதுதான் வேதனை!

கருஞ்சலவைக் கோயிலுக்குள் கற்பூரத் தீபமெனக் கனவாகிப் போனவரே அண்ணா!

இதோ உங்கள் தம்பி புரட்சித் தலைவர் ஏற்றி வைத்திருக்கிற தன்னாட்சி என்கிற அணையா விளக்கு என்றென்றைக்கும் உங் களது கல்லறை மண்டபத்தைக் கலங்கரை விளக்கமாக்கி விட்டிருக்கிறது.!

இனி உங்கள பாதச் சுவடுகள் தெளி வாகத் தெரிந்திடும்—வருங்காலத் தமிழகத் தின் வளமான வாழ்விற்கு அவையே படிக் கற்கள்! பத்துக் கட்டளைகள்!

பலர் சாவதற்காக வாழ்கிறார்கள்; சிலரோ வாழ்வதற்காகச் சாகிறார்கள்.

நீங்கள் கல்லறைக்கப்பாலும் - கால காலங்களுக்கும் - கால வெள்ளம் உருட்டி— உடைத்தெறிய இயலாத—இமயமாக வாழ் கிறீர்கள்.

உங்கள் கனவுகள் நனவாகின்றன. தமிழ கம் பெரியாரின் - பேரறிஞர் அண்ணாவின் பூமி - என்பதற்குப் புரட்சித் தலைவர் கட்டியம் கூறுகிறார்; காரியமாற்றுகிறார்.

மனிதப் புனிதர்—மாணிக்கத் தலைவர்— தமிழக முதல்வர்—தனிப் பெரும் மனிதர்— புரட்சித் தலைவரின்—பூத்துச் சிரிக்கிற பொன் னாட்சி தனில் நீங்களே ஆளுகிறீர்கள்!

அண்ணா! உங்களது எண்ணங்களே எங் களை ஆளுகின்றன!

அட்டைப்படக்கட்டுரை

# குடியிருந்த கோயில்

ஃ. எல். ஆர்

**கோ**டையிலே இளைப்பாற்றிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவாக... தரு நிழலாக நிழல் கனிந்த கனியாக... ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராக... உகந்த தண்ணீரிலே மலர்ந்த மணமலராக.... மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்ருக... மென்காற்றில் விளைசுகமாக.... சுகத்திலுறும் பயனாக—நமக்கெல்லாம் கிடைத்திட்ட நிகரற்ற தலைவரே பேரறிஞர் அண்ணா!

இருள் சூழ்ந்த சமுதாயத்தில் ஒளி விளக்கேற்றிய பேரறிஞர் அண்ணாவை - இதய தெய்வத்தை - பைந்தமிழ்த் தேர்ப்பாகன்...... செந்தமிழ்த் தேனீ.... படரும் சாதிப் படைக்கு மருந்து.... மண்டும் மதங்கள் அண்டா நெருப்பு... புதியதோர் உலகு காணப் புரட்சிப் பாதை அமைத்த புத்துலகச் சிற்பி.... தமிழகத்தின் விடிவெள்ளி இப்படி இன்னும் பலபடப் பாராட்டத்தக்க தகுதி படைத்த தன்னிகரற்ற அந்தத் தலைவனை என்றென்றும் இந்த மாநிலம்—இனிய தமிழினம் இதயத்தில் வைத்து ஏத்தித் தொழும் வகையிலே தமிழக அரசு சிறப்பானதோர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

காஞ்சிபுரத்தில் - பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து வளர்ந்த வீட்டை, இரண்டு லட்சம் ரூபாய்க்கு அரசே வாங்கி நினைவு இல்லம் ஆக்கியிருக்கிறது.

செப்டம்பர் 16 ஆம் நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடக்கின்ற இவ்விழாவிலே, மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் காஞ்சியில், அமரர் அண்ணா திருவுருவைத் திறந்து வைக்க, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தைத் திறந்து வைக்கிறார்.

இதற்கான கட்டிடச் சீரமைப்பு வேலைகளைப் பார்வையிட்டுச் செம்மைப்படுத்திட, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் (4.9.80) காஞ்சி புரத்திற்கு வருகை தந்தார். திரு வெங்கடசுப்பிரமணியம் எம்.எல்.ஏ. மாலையிட்டு வரவேற்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை வரகுவாசல் தெருவாக இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு சி.என். அண்ணாத்துரை தெருவாகிவிட்ட அந்த வீதியில் மொத்தமுள்ள மாடி வீடுகள் இருபதுக்குள்ளாகத்தான்இருக்கும. அவைகளில் குறிப்பிடத்தக்க கம்பீரத்தோடு விளங்கிடும் அந்த 54 ஆம் நம்பர் வீடுதான் அமரர் அண்ணா அவர்களின் வீடு.

வெளிர் மஞ்சள் வெளிப்புறம். டிஸ்டெம்பர் (அக்குமரின்) உட்புறம். சந்தனக் கலரில் உத்தரம்-தூண்கள்.

வராண்டா வாயிலில், முகப்பில் அண்ணா அவர்களின் சிரித்த முகப் படம் ஒன்று சீரியல் செட்டோடு அணி செய்தது. (ராஜூ ஸ்டுடியோ, கும்பகோணம்). அவரை வணங்கி உள்ளே போனால் சமையல் அறை, சாப்பாட்டு அறை, ஓய்வு அறை என்று சிறிது சிறிதாக ஐந்து அறைகள். மாட்டுக் கொட்டில், கழி



வறை, கிணறு—அருகிலேயே தண்ணீர்த் தொட்டிகளுக்கு நீர் இறைக்க பம்ப்-எல்லா வற்றையும் பார்வையிடுகிறார் அமைச்சர்.

'இது அதற்கான அறை, அது இதற்கான அறை' என்று உடன் வரும் ஒருவர் விளக்குகிறார்.

''நாங்கள்லாம் அடிக்கடி வந்து புழங்கின வீடுதாங்களே இது! எவ்வளவு தரம் வந்திருப்போம்... இங்க எத்தினி தடவை அண்ணாவோட கூட உட்கார்ந்து சாப்பிட்டிருப்போம்..'' என்கிறார் அமைச்சர். அவரது விழிகளில் உணர்ச்சி மின்னல்.

''இந்தக் கட்டிடத்தை ஸ்ட்ரெங்தன் பண்ணனுமே தவிர, எதையாவது மாத்தி மாடிஃபிகேஷனா செய்துடாதீங்க'' என்கிற அமைச்சரின் விண்ணப்பம் ஏற்கப்படுகிறது அதிகாரிகளால்.

குறுகலான இடத்தில், 'கசகச' வென்று ஆறுதூண்கள் உருண்டை உருண்டையாய் நிற்கும் கூடத்தின் மேலே தொங்கும் படங்களில் நம் பார்வை படிகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பட்டதாரிக் கவுனுடன். சந்தன மாலை தொங்க, தொத்தா. மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர். அவர்களை, அண்ணாவின் பேரப்பிள்ளை சந்தனம் தந்து வரவேற்கும் வண்ணப்படம். அண்ணா அண்ணி. அண்ணா அண்ணி, வளர்ப்பு மகன்கள், மருமகள்கள். கறுப்புக்கோட்டுடன் அண்ணா. (கடைசியில் அமெரிக்கா சென்ற போது போட்டுக் கொண்டதல்ல. நாடாளுமன்ற உறுப்பினராகு முன்பே, டில்லிக்குச் செல்ல நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆரிடம் இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டது!)

அலமாரியில்—

காந்தியார், வள்ளுவர், இராமலிங்கர், புத்தர், பெரியார் பொம்மைகள். காந்தியார் அறிமுகம் செய்த குரங்கு பொம்மை - 'தீயவைகளைப் பார்க்காதே, பேசாதே, கேட்காதே!' மேல் அறையில் ஒரு குளோப். டேபிள் லைட்....

அண்ணாவை இழந்து, நம் போல் அனாதையாகி விட்ட ஈஸிசேர்...

தண்ணீர் வைத்துக்கொள்ள பயன்படுத்திய மண்குடம்.

வேட்டி சட்டைகளடங்கிய இரண்டு சாதாரணப் பெட்டிகள்....

''இந்த நடுக் கூடத்துலதான் அண்ணாசிலை வெக்கிறோம். சுற்றிலும் அண்ணா தொடர்பான அற்புதமான படங்களோடு கண்காட்சி. அதோ அந்த அறையிலே.. அண்ணா உபயோகிச்ச பேனா, ஈஸிசேர், வேட்டி, சட்டை, மூக்குக் கண்ணாடி, செருப்பு, பொடி டப்பா மாதிரி முக்கியமான பொருட்களையெல்லாம் காட்சிக்கு வைக்கணும்.''

அமைச்சர் சொல்லிக் கொண்டே வருகிறார். அவ்வப்போது அதிகாரிகள் குறித்துக்கொள்கின்றனர்.

கூடத்தை ஒட்டியுள்ள மாடிப்படிகளில் ஏறுகிறார் அமைச்சர். அந்த வீட்டில் அவருக்குள்ள பழக்கம் நடையில் மதெரிகிறது.

''இந்தக் கூண்டுல கோழி, வாத்துதல்லாம் வளர்த்தாங்க அப்ப. அப்படி முடியுதா பாருங்க!'' மொட்டை மாடியின் வலது புறமிருந்த நீண்ட கம்பிக் கூட்டினைக் காட்டிவிட்டு, அமைச்சர் மாடியின் முன் பாதிக்கு வருகிறார். ஒன்றையடுத்து ஒன்றாக மூன்று அறைகள் மாடியில். படிக்க.. ஓய்வெடுத்துக் கொள்ள .... காண வருபவர்களோடு கலந்துரையாட.

கண்ணாடி அலமாரியிலும், பீரோவிலும் உள்ள புத்தகங்களின் முன் வரிசையைப் பார்வையால் ஆராய்கிறார் அமைச்சர்—

இந்தியத் தரை இயல், சோவியத் பொருளாதார வளர்ச்சி, சமூகத்தில் நாம், அரசியலரங்கம், அமிர்தகுண போதினி, பரிசுத்த வேதாகமம், கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரையும், விளக்கமும்), கல்விக் கலை, கற்றல் கற்பித்தல் பொது முறைகள், நற்றிணை, ஸ்ரீபகவத் கீதை, மறைமலையடிகள் வரலாறு கம்ப ராமாயணம்... இன்னும் எண்ணற்ற தமிழ் நூல்கள்.

Tamil language, Burden of honour, Stalin, The J.S. Flitcher Omni Bus, Kothari's economic guide and investors., Hand book of India, The Story of the Iliad, The earth is Lords, Plain talks to Britain, Modern Japanese Literature, Winston Churchill, Political History of ancient India, Gordon, The burning glass, Gitanjali, Yusuf Khan, History of England, Britain, The Law of Madras Local Boards.... இப்படி எண்ணற்ற ஆங்கில நூல்கள்!

''அண்ணா படிச்ச இந்தப் புத்தகங்களை வைத்து இங்கே ஒரு லைப்ரரி உருவாக்க வேண்டியது மிகவும் முக்கியம்'' என்கிறார் அமைச்சர்.

அருகே திருமண வாழ்த்துக்கள். பரிமளம்: சரோஜா, இளங்கோ: விஜய லட்சுமி. 1.9.1963.

புத்தக அலமாரி ஓரத்தில் மீந்த பழைய திருமண அழைப்பிதழ்கள். பாபு என்கிற இராசேந்திரன்: செல்வி சாந்தா. 6.9.70.

மாடியின் முன் ஹாலில்-நடுவாசலுக்கு மேலே திருவள்ளுவர் காட்சி தருகிறார். இடதுபுற ஜன்னலின் மேல் பேரறிஞர் [illegible]ணாவைத் தன் முதுகில் [illegible]மந்த கர்வத்தோடு ஒரு எ[illegible]டகப் படம். அதற்கு நேர் எதிரே வலப்புறச்சுவர் மேலே அய[illegible]ரர் அண்ணா, உடுமலை நாராயணகவி, கலைவாணர் என். எஸ். கே. மூவரும் சேர்ந்து பிடித்துக் கொண்ட சிறப்புமிக்க புகைப்படம். பெரிய [illegible]அளவில்.

படி வ[illegible]ியாகக் கீழே இறங்கி வீட்டின் முன்வராண்ட வழியே தெருவுக்குவருகிறோ[illegible]

காஞ்சிபுரம்-3-ல், அதா[illegible] சின்ன காஞ்சிபுரத்தில் சி[illegible] அண்ணாதுரை [illegible] தெ[illegible] இனியொரு புதிய [illegible] யும், மதிப்பும் ஏற்படப்போ[illegible] திண்ணம். வரதராஜ [illegible] மாள் கோயிலின் முன்பு[illegible] வலப்புறச் சுவரோடு அவ்[illegible] யில் நீளுகின்ற தென்சாரி[illegible] பத்துப் பதினைந்து வீடு[illegible] தாண்டி அமைந்துள்ள அ[illegible] வடக்குப் பார்த்த வீடு....ந[illegible] முடைய குலதெய்வமாம் பே[illegible]றிஞர் அண்ணா குடியிருந்த வீடு கோயிலாகிறது! நினைவு இல்லம், என்ற பெயரிலே நாம் ஒவ்வொருவரும் சென்று கண்டு மகிழும் இல்லமாகிறது!

**செப்டம்பர் 30-ந் தேதி**
**நீங்கள் இலட்சாதிபதி ஆக**
**வாய்ப்பு அளிக்கும் நாள்!**

# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மாபெரும்
சிறப்புக் குலுக்கல்



37-வது
குலுக்கல்

2 சிறப்பு
முதல் பரிசுகள்

ரூ 5 லட்சம் வீதம்

3 சிறப்பு
இரண்டாவது பரிசுகள்

ரூ. 1 லட்சம் வீதம்

குலுக்கல் நாள்
30-9-80

மற்றும் பல ஆயிரக்கணக்கான
கவர்ச்சி மிகு பரிசுகள் !

பரிசுச் சீட்டின்
விலை ரூ. 2/-

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநர்
அரசினர் தோட்டம் சென்னை-600 002

EP-DIPR.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம் அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கண்களுக்கு குளுமையூட்டும் பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட சேலைகள்; கோடைக் காலத்திலும் குளிர்காலத்தைக்காட்டும். பல வண்ணச் சேலைகள். நீடித்து உழைப்பவை.

தமிழரசு
Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676

